விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள சொத்து பலவீனப்பட்டால், ஒரு தொகையானது செலவிற்கும்(எந்த ஆரம்ப கொடுப்பனவு மற்றும் கடன் தீர்ப்பனவு பெறுமதியின் நிகர பெறுமதி)மற்றும் அதன் தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம், இலாபத்திலோ அல்லது இழப்பிலோ முன்னர் இனங்காணப்பட்ட எந்த பெறுமதி இழப்பையும் கழிவீடு செய்தல் என்பன அதன் நிகர மதிப்பில் வருமானக் கூற்றிற்கு மாற்றப்படும். நிகர மதிப்பீட்டு கருவிகளிலான எதிர்மறையாக்கல்கள் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள வேறுபடுத்தல்களாக இலாபத்தில் இனங்காணப்படவில்லை. கருவிகளின் சந்தைப் பெறுமதி அதிகரிப்பானது பலவீன இழப்பொன்று இலாபத்திலோ அல்லது நட்டத்திலோ இனங்காணப்பட்டதன் பின்னரான நிகழ்வு ஒன்றுடன் கண்டுகொள்ளக்கூடிய வகையில் தொடர்புபட்டிருந்தால் கடன் கருவிகளினாலான பெறுமதி இழப்புகள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக எதிர்மறையாக்கப்படும்.

**வெளிநாட்டு நாணயத்திலான தவணைப் பொறுப்புக்கள்**

வெளிநாட்டு நாணயத்திலான தவணைப் பொறுப்புக்கள், பொறுப்புக்களின் கடன்தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றல்கள் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகின்றது. வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்களின் விளைவாக தோன்றும் இலாபங்களும் இழப்புக்களும் உடனடியாகவே வருமானக் கணக்கில் செலவுகளாக இனங்காணப்படுகின்றன. பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது இழப்போ விலை மீள்பெறுமதியிடலிலிருந்தான பெற்றுக் கொள்ளப்படாத இழப்பாக (இலாபமாக) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பில் மீள் கொடுப்பனவினூடாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இழப்புக்களாக (இலாபம்) பதிவு செய்யப்படுகிறது.

**நிதியியல் உத்தரவாதங்கள்**

நிதியியல் உத்தரவாதங்களானது நிதி அறிக்கைகளில் நியாயமான பெறுமதியிலேயே ஆரம்பத்தில் மதிப்பிடப்படுகின்றது. இவை ஏனைய கொடுப்பனவுகளின் கீழ் நியாயமான பெறுமதியில் காட்டப்படுகிறது. ஆரம்ப மதிப்பீட்டைத் தொடர்ந்து வங்கியினுடைய ஒவ்வொரு உத்தரவாதங்களினதும் பொறுப்புக்கள், அத்தகைய உத்தரவாதங்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் நிதியியல் கடப்பாடுகளை தீர்க்கத் தேவைப்படும் செலவுகளுடைய சிறந்த மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகின்றது.

**ஏனைய நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயக்காசு, வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங்காணப்படுகின்றன.

**1.4.3. ஏனைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் துணை நிறுவனங்களில் முதலீடுகள்**

விற்பனைக்காக வைத்திருக்கப்படுவனவற்றுடன் சேர்த்து துணை நிறுவனங்களில் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் குறைந்த கிரயச்செலவு முறையில் கணிக்கப்படுகின்றன. உரிமையாண்மை முறைமையின் கீழ் கணக்கிடப்படாத அத்தகையவற்றினுடைய விளைவுகள் கணிசமானவையல்ல.

**தங்க இருப்பு**

உயர்ந்த திரவத் தன்மையைக் கொண்ட பண்டமான தங்க இருப்பு கிரயத்தில் வைத்திருக்கப்படுகின்றது.

**இருப்புக்கள்**

இருப்புக்கள் கிரயச் செலவு அல்லது விற்றுப்பெறக்கூடிய பெறுமதி இவற்றின் குறைந்த பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றன. கிரயச் செலவு நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப் படுகின்றது. மெதுவாக வெளிச்செல்லும் இருப்புக்களுக்கு ஒதுக்கம் செய்யப்படுகின்றது.

**சொத்து, பொறி மற்றும் கருவி**

நாளுக்கு நாள் சேவையின் கிரயச் செலவுகள் நீங்கலாக பெறுமதியிலான திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு என்பன கழிவு செய்யப்பட்டு சொத்து, பொறி மற்றும் கருவி தொடர்பான சகல விடயங்களும் கிரயச் செலவில் குறிப்பிடப்படுகின்றது. இனங்காணப்பட்ட பிரமாணத்தை உள்ளடக்கப்படும் செலவானது அடையும் பொழுது குறிப்பிட்ட கிரயச் செலவுகள், குறிப்பிட்ட சொத்து, பொறி மற்றும் கருவிகளின் பாகங்களை மாற்றியமைத்தலுக்கான செலவினையும் உள்ளடக்கி இருக்கும். காணி மற்றும் கட்டடங்கள் கட்டடங்கள் மீதான பெறுமானத் தேய்வுகள் மற்றும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதியைத் தொடர்ந்து அறவிடப்பட்ட பெறுமதி இழப்புக்கள் என்பவற்றைக் கழித்து பெறப்பட்ட நியாயமான பெறுமதியில் கணிப்பிடப்படுகிறது.

பெறுமானத் தேய்மானமானது மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தினைக் கருத்திற் கொண்டு நேர்கோட்டு வழிமுறையில் கணிக்கப்பட்டுள்ளது.

முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியானது மீளப் பெற்றுக் கொள்ள முடியாதபோது, நிகழ்வு அல்லது மாற்றம் குறிகாட்டும் சந்தர்ப்பத்தில் பொறி மற்றும் கருவிகளின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியானது பெறுமதி இழப்பிற்காக மதிப்பிடப்படுகின்றது. கீழ்வரும் செலவு, காணி மற்றும் கட்டடங்களிலான ஆரம்ப இனங்காணல்களில் முன்கொண்டுவரும் மீள் பெறுமதியிடப்பட்ட தொகையானது கட்டடங்கள் மற்றும் தொடர்ந்துவரும் திரண்ட பலவீன இழப்புக்களிலான தொடர்ந்துவரும் திரண்ட பெறுமானத் தேய்வுகள் கழிவீடு செய்யப்பட்டு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதியிலான சந்தைப் பெறுமதியாகும்.

மீள் மதிப்பிடப்பட்ட சொத்தினது சந்தைப் பெறுமதியானது முன்கொண்டு வரப்படும் தொகையிலிருந்து வேறுபடுவதில்லை என்பதனை நிச்சயப்படுத்த அடிக்கடி மேற்கொள்ளும் மீள்மதிப்பீடானது போதுமானதாகும்.

முன்னரே வருமானச் செலவு கூற்றில் இனங்காணப்பட்ட மீள்மதிப்பீட்டு பெறுமதிகளிலான குறைவுகளிற்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட ஒதுக்குகள் தவிர்ந்த மதிப்பீட்டின் மிகைகள் ஐந்தொகையின் உரிமையாண்மைப் பகுதியில் உள்ள

| சொத்துக்களின் வகை | பயனுறுதிக்காலம் |
|---|---|
| இலவச காணியிலான கட்டடங்கள் | 50ஆண்டுகளுக்கு மேல் |
| குத்தகைக் காணியிலான கட்டடங்கள் | குத்தகைக்காலத்திற்குமேல் |
| பொறி மற்றும் பொறி செய்பாகங்கள் | 20 ஆண்டுகள் |
| தளபாடம் மற்றும் கருவிகள் | 10 ஆண்டுகள் |
| உந்து ஊர்திகள் | 5 ஆண்டுகள் |
| கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் | 4 ஆண்டுகள் |
| வாசிப்பதற்கு பயன்படும் பொருட்கள் | 3 ஆண்டுகள் |

மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தினுள் வரவு வைக்கப்படுகின்றது. இந்நிலையில், அதிகரிப்பானது வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. வருடத்தின் மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திலுள்ள அதே சொத்தின் பதிவழிக்கப்பட்ட பற்றாக்குறை தவிர்ந்த மறுமதிப்பீட்டின் பற்றாக்குறை தொகையானது வருமானக் கூற்றில் இனங் காணப்படுகின்றது. பாவனை அல்லது ஒதுக்கிவைத்தலில் எதிர்காலத்தில் எந்தப் பொருளாதார நன்மைகளும் எதிர்பார்க்கப்படாதபோது அல்லது சொத்து, பொறி மற்றும் கருவியின் பாகம் ஒன்று ஒதுக்கிவைத்திலின் போது மீள் இனங் காணப்படுகின்றது. ஒதுக்கிவைத்தலின்போது விற்பனை செய்யப்பட்ட சொத்திற்கான மறுமதிப்பீட்டு மேலதிகத் தொகையானது நிறுத்திவைத்த இலாபத்திற்கு மாற்றப்படுகின்றது. சொத்துக்களின் மீதி பெறுமதிகள், பயன்தரு ஆயுட் காலம் மற்றும் முறைகள் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமான சந்தப்பங்களில் ஒழுங்காகச் சீராக்கப்படுகின்றது.

**அருவச் சொத்துக்கள்**

கணனி வன்பொருளுடன் சேர்க்கப்படாத கணனி மென்பொருள் ஆனது அருவச் சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளதுடன் கிரயகச் செலவில் கணிக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கணிப்பீட்டைத் தொடர்ந்து இத்தகைய அருவச் சொத்துக்களானது 4 வருட பயனுள்ள ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஏதேனும் ஒன்றுதிரட்டப்பட்ட பதிவளிப்புக்களை கிரயத்திலிருந்து கழித்துப்பெறப்பட்ட பெறுமதியில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**பெறுவனவுகள்**

பெறக்கூடிய கணக்குகள், ஐயத்திற்கிடமான படுகடன்களுக்கான ஒதுக்கினைச் செய்தபின்னர் எதிர்பாக்கப்படும் பெறப்படத்தக்க பெறுமதியில் குறிக்கோள் சான்றுகளின் அடிப்படையில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

**நானாவிதச் சொத்துக்கள்**

நானாவிதச் சொத்துக்கள் எதிர்பார்க்கப்படும் விற்றுப் பெறத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

**நிதிசாரா சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

நிதிநிலைமைகளின் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள், கொண்டு செல்லப்படும் பெறுமதியானது பெறுமதி இழப்புக்கு உள்ளாக்கப்படலாம் என வெளிக்காட்டுமாயின் வங்கியானது அதன் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், அதன் நிதிசாரா சொத்துக்கள் பெறுமதி இழப்புக்கு உட்படுவதாக வெளிக்காட்டப்படுகிறதா என அளவிட்டுக் கொள்ளும். ஏதாவது அத்தகைய குறியீடுகள் காணப்படுமாயின், வங்கியானது சொத்துக்களுடைய மீள் பெறுகை செய்யப்படக்கூடிய தொகையின் மதிப்பீட்டினை மேற்கொள்ளும். கொண்டு செல்லப்படும் சொத்துப் பெறுமதியானது மீள் பெறுகை செய்யக் கூடிய சொத்துப் பெறுமதியைவிட அதிகமாக காணப்படின். அந்தச் சொத்து, பெறுமதி இழப்புக்கு உட்பட்டதாக கருதப்படுவதுடன் அதன் மீள் பெறுகை செய்யக்கூடிய பெறுமதிக்கு மதிப்பிறக்கம் செய்யப்படும்.

**ஏற்பாடுகள்**

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்புரீதியான) கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு அக்கடப்பாட்டை தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் மூலங்களின் வெளிப்பாய்ச்சல், தேவைப்படுவதுடன் இக் கடப்பாட்டுத் தொகையை நம்பத்தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறியமுடியும். ஏற்பாடு ஒன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங் காணப்படுகிறது.

**சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது, சுற்றோட்டத்திலுள்ள நாணயத்திற்கான பொறுப்பு ஐந்தொகையில் முகப்பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

**ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வு பெற்றதன் பின்னரான நன்மை திட்டங்கள்**

வங்கியால் செயல்படுத்தப்படும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்குப் பின்னரான நலத்திட்டங்கள் பற்றிய விபரம் குறிப்பு 35இல் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

**நிர்ணயிக்கப்பட்ட நன்மை திட்டங்கள்**

ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், ஓய்வூதிய வெகுமதி, ஓய்வு பெற்றதன் பின்னரான மருத்துவ நன்மைகள் ஆகிய நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களை வங்கி நடைமுறைப்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களுக்கும் வங்கியும் திட்டத்திற்கு பொருத்தமான நன்மை பெறுவோரும் தனியாக நிர்ணயிக்கப்படும் நிதியமொன்றிற்கு உதவு தொகையினை செலுத்தி வருகின்றன. நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கீழான நன்மைகளை வழங்குவதற்கான செலவு எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் உண்மைப் பெறுமதி முறையினைப் பயன்படுத்தி தனித்தனியாக தீர்மானிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை உண்மையான மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

சேவைக்குப் பின்னரான செலவானது நன்மைகள் உரித்தாகும்வரை சராசரிக்காலத்தின் அடிப்படையில் நேர்கோட்டு முறையில் இனங்காணப்படுகின்றது. அறிவுரையை பின்பற்றுவதன் மூலம் நன்மையானது ஏற்கனவே உரித்தாக்கப்பட்டிருக்குமானால் மாற்றங்கள், நன்மை திட்டம், சேவைக்குப் பின்னரான செலவு உடனடியாக இனங்காணப்படுகின்றது.

அனுபவ அடிப்படையிலான சீராக்கங்கள் மற்றும் திட்டமிடல் சொத்துக்களின் பெறுமதியில் 10 சதவீதத்திலும் விஞ்சியதான உண்மை எடுகோள்களின் மாற்றங்கள் அல்லது

நிர்ணயிக்கப்பட்ட நன்மை கடமைப்பாடுகளுடைய 10 சதவீதம் என்பவற்றிலிருந்து எழுகின்ற உண்மை இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஊழியர்களுடைய எதிர்பார்க்கப்படும் மிதமாக உள்ள சராசரி வேலை காலத்தின் மீதான வருமானத்திற்கு எதிராக ஓர் ஒழுங்குமுறையில் அறவிடப்படும் அல்லது வரவு வைக்கப்படும். இதன் விளைவாக உண்மை இலாபங்கள் அல்லது நட்டங்கள் விரைவாக இனங் காணப்படுகிறது.

**நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள்**

ஊழியர்கள், தொடர்பான நியதிகள்மற்றும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க ஊழியர் சேமநிதிய பங்களிப்புக்களுக்கும், ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர் களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கின்றது. இவை தனித்தனியாக நிர்வகிக்கப்பட்டு வரும் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட உதவுதொகைத் திட்டங்களாகும்.

**கொடைகள்**

கொடைகள் பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்கான உறுதிப்பாடு இருக்குமிடத்து கொடைகள் அவற்றின் சாதாரண பெறுமதியில் இனங்காணப்பட்டு, மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும்பொழுது, ஒழுங்கு முறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடு செய்வதற்கு தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கணக்குக் கூற்றில் இனங் காணப்பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சாதாரண பெறுமதி பிற்போடப்பட்ட அரசகொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு தொடர்பான சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம்வரை, தொடர்பான சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்கு முறையான அடிப்படையில் வருமானக் கூற்றிற்கு விடுவிக்கப்படும்.

**ஆளணிச் செலவுகள்**

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. சம்பளங்கள் மற்றும் ஆண்டின் இறுதியில் ஒன்றுசேரும் விடுப்புக்கள் என்பன மற்றைய உள்ளூர் செலுத்த வேண்டியவையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**தொழிற்பாட்டிலுள்ள குத்தகைகள்**

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள்மீது செலுத்த வேண்டிய வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்து செல்லும் அடிப்படையில், குத்தகையின் தவணையை கருத்திற் கொண்டு வருமானக் கூற்றில் இனம் காணப்படுகின்றது.

**வருமானவரி**

1949ஆம் ஆண்டு திருத்தப்பட்டவாறான 58ஆம் இலக்க நாணயச் சட்டத்தின் 118ஆம் பிரிவின் கீழ் வங்கி வருமானமானத்திற்கு வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது.

**வருமானம் மற்றும் செலவினங்கள்**

வங்கிக்கு பொருளாதார நன்மைகளை பெரும்பாலும் கொண்டுவரக் கூடியதாகவும் அவ்வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக் கூடியதாகவும் உள்ளபோது வருமானமானது இனங்காணப்படுகின்றது. உறப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக் கூற்றில் செலவுகள் இனங் காணப்பட்டுள்ளன. வியாபாரத்தை கொண்டு நடத்துவது தொடர்பாகவும் சொத்து,பொறி மற்றும் கருவியை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் உறப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும்போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும், செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பரிமாணங்கள் அடையாளம் காணப்பட வேண்டும்.

**வட்டி**

உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி ஒன்று சேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான வருமான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான நறுக்கிலிருந்து வருவாய்களையும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் மீது கொடுபட வேண்டிய கழிவுகளையும் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும்வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

**பங்கிலாபங்கள்**

பங்குடைமையாளர்கள் கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்பட்டவுடன் பங்கிலாப வருமானம் இனங் காணப்படுகின்றது.

**பல்தரப்பட்டவை**

பல்தரப்பட்ட வருமானமும், செலவினங்களும் ஒன்றுதிரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

சொத்து, பொறி மற்றும் கருவிகளின் விற்பனை மீதான வருமானத் தன்மையின் தேறிய இலாபங்களும், இழப்புக்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக் கணக்கில் காட்டப்பட்டுள்ளன.

எதிர்பாராத நடவடிக்கைகள் மற்றும் முக்கிய வருமானத்தினை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புகளும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத அவ்வாறான கொடுக்கல் வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் உள்ளிட்ட எதிர்பாராத மற்றும் கடப்பாட்டு விடயங்கள்

ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்களைப் பிரதிபலிக்கின்ற படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடு என்பன ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் என இனங்காணப்பட்ட தொடர்பான தலைப்புக்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ளன. பொருத்தமான வேளைகளில் அத்தகைய தொகைகள் சிறந்த மதிப்பிடல்களில் அளவிடப்படுகின்றது.

**4. நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்**

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் பின்பற்றுவதற்கு அல்லது மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளை அல்லது வழிமுறைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கி அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம் என்பனவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறை என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் என்பனவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருப்பதுடன், அரசாங்கத்தின் இறைமுகவராண்மையாகவும் தொழிற்படுகின்றது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

- நாணய மற்றும் செலாவணிவீத கொள்கையை நடைமுறைப்படுத்தல்
- நாணய வெளியீடு
- நிதியியல் முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப்பாட்டினையும் வசதிப்படுத்தல்
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும் முகாமைப்படுத்தலும் மற்றும் கொடுப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்தலும்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்.
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படல்.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்தும் பொருட்டு அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக் கொள்ளமுடியும். இந்த நடவடிக்கைகளுடைய விளைவுகள், வருமானக் கூற்றின் அமைப்பில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் அர்த்தத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

**வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்**

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணய சொத்துக்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் ஏனைய வெளிநாட்டு நாணய சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணய இனங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், யூரோ, இசுடேர்லிங் பவுண் மற்றும யப்பானிய யென் என்பன காணப்பட்டன. இவ்வெளியீட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது அரச பிணையங்கள், நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

**உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்**

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன:

i). திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள். திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித் தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம்அல்லது வங்கித் தொழில் முறையிலிருந்து நிதியங்களை மீளப்பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சலையும் அல்லது அரசிடமிருந்தான தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதில் பெருமளவு ஈடுபடுகின்றது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப் படுகின்றன.

ii). சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கிய முதலீட்டுப் பட்டியலொன்றைக் கொண்டுள்ளது. வர்த்தக நடவடிக்கைக்காக அன்றி நாணய தொழிற்பாடுகளுக்காக இம்முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

**பொறுப்பாண்மை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்**

கட்டுக்காப்பு மற்றும் நிருவாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகைகளானது வங்கியினுடைய நிதிக்கூற்று மூலங்களினுடையே பகுதியாகக் கட்டமைக்கப்படாததால் இந்த நிதிக் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

## 2. வங்கி மேற்பார்வை

வங்கித்தொழில் முறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல் வாய்ந்த தன்மை, வைப்பாளர்களினதும், இதர கடன் வழங்குனர்களினதும் நலன்களைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் நாட்டின் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தல் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் தொடர்பான இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. 2007ஆம் ஆண்டின் இறுதியில் மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழிருந்த 23 வர்த்தக வங்கிகள், 15 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் உள்ளடங்கலாக 38 உரிமம் பெற்ற வங்கிகளின் பெயர்பட்டியல் ஆங்கில அகர வரிசை ஒழுங்கில் இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளன.

ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தேவைப்பாடுகளை நடைமுறைக்கிடல், புதிய ஒழுங்கு முறைப்படுத்தல், மேற்பார்வை வழிமுறைகளைப் பின்பற்றுதல், ஒழுங்குமுறைப்படுத்தல், ஒப்புதலளித்தல்களை வழங்குதல், தொடர்ச்சியான கண்காணிப்புக்கள் மற்றும் வங்கிப் பரீட்சிப்புக்களூடாக இடர்நேர்வு அடிப்படையிலமைந்த மேற்பார்வையை நடைமுறைப்படுத்தல் ஆகியவை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய நடவடிக்கைகளாக அமைகின்றன. 2007ஆம் ஆண்டில் திணைக்களத்தால் ஆற்றப்பட்ட பணிகளின் தொகுப்பு கீழே தரப்படுகிறது.

### 2.1 முன்மதியுடைய ஒழுங்கு விதிகள்

2007இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பல புதிய முன்மதியுடைய ஒழுங்கு விதிகளையும் வழிகாட்டல்களையும் அதேபோன்று ஏற்கனவே நடைமுறையில் உள்ள முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கு திருத்தங்களையும் வெளியிட்டது. இவற்றின் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி III இல் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதன் தொகுப்பு பின்வருமாறு.

அ. **வங்கிகளில் பங்குரிமையை வரையறுத்தல்**: சிறந்த கம்பனி ஆளுகைகளை மேம்படுத்தல் மற்றும் பாரிய அளவிலான பங்குரிமை காரணமாக எழக்கூடிய வட்டி தொடர்பான முரண்பாடுகளைக் கட்டுப்படுத்தல் ஆகிய குறிக்கோள்களுடன் வாக்குரிமையுடன் கூடிய பங்கு உரிமைத் திட்டத்தினைப் பொறுத்தவரை புதிய பங்குடமைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கமைவாக, வழங்கப்பட்ட மொத்தப் பங்குகளில் வாக்குரிமை கொண்ட பங்குகளின் உச்ச வரம்பு 15 சதவீதமாக இருக்கும். எவ்வாறாயினும், 10 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகளை கொள்வனவு செய்வதற்கு நாணயச்சபையினது ஒப்புதலும், மாண்புமிகு நிதி அமைச்சரது சம்மதமும் தேவைப்பாடானவையாக இருக்கும். வங்கியொன்றின் மூலதனப் போதுமாந்தன்மை பற்றாக்குறையாகவுள்ள தன்மையினையும், கடன் தீராற்றலற்ற தன்மை, முறிவடைவதற்கான சாத்தியத் தன்மை என்பனவற்றை தவிர்ப்பதற்காக நிபந்தனைகளுக்குட்பட்டு அவ்வங்கியின் 15 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குரிமையை கொள்வனவு செய்வதற்கான அனுமதியினை நாணயச்சபை வழங்கலாம்.

ஆ. **ஆகக்கூடிய கடன்வசதிகளின் தொகை**: வங்கிகளின் கொடுகடன்களில் இடர்நேர்வுகள் குவிவதனை கணிக்கும் பொருட்டு கடன் வசதிகளின் உச்சமட்ட தொகையினை நிர்ணயிக்கப் பின்பற்றப்படும் பிரமாணங்கள் திருத்தப்பட்டன. கடன்வசதிகளின் உச்சவரம்பு, தனியொரு இணைத்தரப்பினர் மற்றும் கம்பனிக்குழுமங்களுக்கு முறையே வங்கியின் அடிப்படை மூலதனத்தின் 30 சதவீதம், 33 சதவீதம் ஆக இருக்கும். குழுமம் ஒன்று தொடர்பாக மூலதனத்தளத்தின் 36 - 40 சதவீதம் கொண்ட அதிகரிக்கப்பட்ட வரையறைகள் வங்கியின் மூலதனப் போதுமை விகிதம் மற்றும் கடன்படுநர் மற்றும் வங்கியின் வெளிநாட்டுக் கடன்தரமிடல் ஆகிய நியதிகளில் வங்கிகள் மற்றும் கம்பனிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அந்தஸ்தினைப் பொறுத்து பிரயோகிக்கப்படும்.

இ. **ஒழுங்கமைக்கப்பட்ட மூலதனத்தில் புதிய மூலதனக் கருவியை உள்ளடக்குதல்**: குறிப்பிட்ட நிபந்தனைகளை திருப்தி செய்யும் நிரந்தர மூலதனக் கருவிகளை மையமூலதனமாக உள்ளடக்க வங்கிகள் அனுமதிக்கப்பட்டதன் மூலம் மூலதன போதுமை விகிதத்தின் கணிப்பீட்டில் மூலதன கருவிகளாகக் கருதப்படுகின்ற விடயங்களை விரிவடையச் செய்தது. கலப்பு (படுகடன் பங்கு) மூலதனத்தின் தகைமைப் பிரமாணமும் துணைப் படுகடன் கருவிகளும் கூட விரிவடைந்தன.

ஈ. **கம்பனி ஆளுமை மீதான பணிப்புரை வழங்கல்**: கம்பனி ஆளுகைகளின் குறிப்பிட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள கம்பனி ஆளுகைகளின் மீதான பணிப்புரை உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவை 2008 சனவரியிலிருந்து நடைமுறைக்கு வரும். இதன் முக்கிய நோக்குகள் பணிப்பாளர் சபையின் பரந்த பொறுப்புக்கள், சபையின் அமைப்பு, பணிப்பாளர்களின் தோற்றம், இயலுமை என்பவற்றை மதிப்பிடுவதற்கான பிரமாணங்கள், சபைக்கு அளிக்கப்பட்டுள்ள முகாமைத்துவத் தொழிற்பாடுகள், தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கடமைகளின் வேறாக்கம், மற்றும் நிதிக் கூற்றுக்களின் வெளிப்படுத்துகை என்பனவற்றை உள்ளடக்கும். புதிய நியமங்களை ஒழுங்கான முறையில் மாற்றுவதற்காக பல்வேறு எண்ணிக்கையிலான முக்கிய நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. இப்புதிய நியமங்கள் சுமூகமாக மாற்றமடைந்து கொள்வதற்கு வசதியளிக்கும் விதத்தில் இவ்வொழுங்கு விதிகளின் பல முக்கிய அம்சங்கள் மீதான பல மாற்றத்திற்குரிய ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணிப்புரைகளின் நோக்கம் யாதெனில், வங்கிகளின் ஒட்டு மொத்த ஆற்றலை பேணும் பொருட்டு, வங்கிகளுக்கான ஆரோக்கியமும் வலுமிக்கதுமான இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை மேம்படுத்தும் விதமாக பணிப்பாளர் சபையினை வங்கிகளின் வியாபாரத் தொழிற்பாடுகளுக்கு மிகப் பொறுப்பாகவும் வகை கூறக்கூடிய விதத்திலும் இருக்கச் செய்வதேயாகும்.

உ. **பாசல் II இனைப் பின்பற்றல்**: 2008ஆம் ஆண்டு சனவரி 1ஆம் திகதியிலிருந்து உரிமம் பெற்ற வங்கிகளுக்கு பாசல் II பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்

பிரகாரம் மூலதனத் தேவையைக் கணிப்பதற்கு கொடுகடன் இடர்நேர்வு நியம அணுகுமுறை, சந்தை இடர்நேர்வு நியம அளவீட்டு முறை, தொழிற்பாட்டு இடர்நேர்வு அடிப்படைக் குறிகாட்டி முறை என்பனவற்றை பிரயோகிக்குமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இப்புதிய கட்டமைப்பானது வங்கிகளின் அடிப்படை இடர்நேர்வுகளை மூலதனப் போதுமை அளவீட்டு முறையுடன் இசைவாக்குவதன் மூலம் வங்கித்தொழில் முறையின் பாதுகாப்புத் தன்மையினையும், ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமின்றி வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு இடர்நேர்வு அளவீட்டினை மேம்படுத்துவதற்கான வலுவான ஊக்குவிப்புக்களை வழங்குவதனையும் வங்கியில் ஏனைய ஆர்வலர்களுக்கு பெருமளவு பொறுப்புக்கூற வேண்டிய விதத்தில் சந்தைப் பொறிமுறை முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டியமையினையும் நோக்காகக் கொண்டிருந்தது.

ஊ. **வாடிக்கையாளரை நெருங்கிக்க கவனித்தல் - 'உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுதல்' வழிமுறைகள்:** எல்லை கடந்த நிதிசார் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற வாடிக்கையாளர் தொடர்பாக நெருங்கிய கவனிப்பினை மேற்கொள்ளுமாறும், தொடர்பான சட்டங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு தொடர்பான அதிகாரசபைகளை கவனிக்குமாறும் அனைத்து வங்கிகளும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

எ. **வங்கித்துறையில் பணிபுரியும் வெளிநாட்டவருக்கான வழிகாட்டல்கள்:** இவ்வழிகாட்டல்கள் வங்கித்தொழில் துறையிலுள்ள வெளிநாட்டவர்களின் பணியினை பெற்றுக் கொள்வது தொடர்பாக வழங்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வங்கிகளினது வங்கித்தொழில் தொழிற்பாடுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கம், புத்தம் புதிய நிதியியல் சாதனங்களை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியம், முன்னேற்றம் கண்ட இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளில் நிபுணத்துவ தேவை மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில் விரைவான அபிவிருத்தி என்பனவற்றின் காரணமாக மேற்குறிப்பிட்ட கொள்கை மாற்றம் தேவைப்பட்டது.

## 2.2 வங்கிகள், கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்களுக்கான ஒப்புதல்கள்

வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளில் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது வங்கித்தொழிலுக்கான உரிமம், வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய வங்கிச் சேவை நிலையங்களை திறத்தல், மூடுதல், வேறு இடங்களில் மீள அமைத்தல் ஆகிய கோரிக்கைகளை 2007இலும் தொடர்ந்து மேற்கொண்டது. லங்காபுத்திர வரையறுக்கப்பட்ட வங்கியையும் வரையறுக்கப்பட்ட எஸ்எம்ஈ வங்கியையும் இணைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் 72 புதிய கிளைகளுக்கும், 151 வங்கித்தொழில் நிலையங்களுக்கும் (அதாவது விரிவாக்க அலுவலகங்கள், நடமாடும் வங்கியியல் பிரிவு, மாணவர் சேமிப்பு பிரிவு) 37 கிளைகளை வேறிடத்தில் அமைப்பதற்கும், 2 விரிவாக்க நிலையங்களிற்கும், 14 வங்கியியல் நிலையங்களின் தரத்தை உயர்த்துவதற்கும், வங்கி அமைவிடங்களுக்கு வெளியில் 14 தன்னியக்க கூற்றுப்பொறிகளைப் பொருத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி 2007ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் 1616 கிளைகளும், 2137 ஏனைய வங்கித்தொழில் நிலையங்களும் 1141 தன்னியக்கக் கூற்றுப்பொறிகளின் தொழிற்பாடுகளும் காணப்பட்டன. மேலதிகமாக வங்கித்தொழில் பணிகளை பரந்தளவில் பெற்றுக் கொள்வதற்கான ஒப்புதல்களும் வழங்கப்பட்டன. தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக நடமாடும் வங்கித்தொழில் போன்ற தொழில்நுட்பத்தினால் தூண்டப்பட்ட பணிகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 2.3 உரிமம் பெற்ற வங்கிகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தல்

வெப்தளத்தின் மூலம் நேரடியாக அறிக்கைப்படுத்தப்படும் முறையினூடாக வங்கிகளினால் அனுப்பப்படும் காலரீதியான தகவல்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் வங்கிகளின் செயற்பாடுகள் கண்காணிக்கப்படுவது தொடர்ச்சியான மேற்பார்வை செயற்பாடு எனப்படுகிறது. தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொள்வதன் மூலம் மேலும் புலனாய்வுகளையும் பரீட்சிப்புக்களையும் தேவைப்படுத்தும் வங்கியின் நிதியியல் நிலைமைகளில் ஏற்படும் குறிப்பிடத்தக்க மிக நெருக்கமான நிலைமைகளை நேரகாலத்துடன் கண்டுபிடிக்கப்படுவதற்கு உதவுகின்றது. இதற்கு மேலதிகமாக கடனட்டை நடவடிக்கைகளை அளவீடு செய்தல் போன்ற சிறப்பு மதிப்பீடுகள், வங்கிகளின் சொத்துரிமை அமைப்புக்களை பகுப்பாய்வு செய்தல், செயற்படாக் கடன்களுக்கான ஏற்பாடுகளை மதிப்பிடுதல், கைவிடப்பட்ட சொத்துக்களுக்கான தரவுத்தளத்தினை தயாரித்தல், பாசல் II மூலதன போதுமைக் கட்டமைப்பின் தாக்கத்தை அளவிடல் என்பன ஆய்விற்குரிய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

## 2.4 உரிமம் பெற்ற வங்கிகளுக்கான நியதிப் பரீட்சிப்புக்கள்

நாணயச் சட்டம் மற்றும் வங்கித்தொழில் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளுக்கு அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் குறைந்தது இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவையாவது சட்டரீதியான பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும். வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ச்சியாக வங்கியின் இடர்நேர்வுகளை அடையாளப்படுத்தக் கூடிய, இடர்நேர்வு சார்ந்த பரீட்சைச் செயற்பாடுகளையும் இடர்நேர்வுகளை முகாமை செய்வதனையும், இடர்நேர்வினைத் தணிப்பதற்கான போதியளவு வளங்கள் பேணப்படுகின்றதா என்பதனை அளவீடு செய்வதனையும் மேற்கொண்டு வருகின்றது. இந்த ஆண்டில் அதிகூடிய இடர்நேர்வினை மையப்படுத்திய பரீட்சை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இப்புதிய நடைமுறைகள் பின்வருவனவற்றின் மீது பெருமளவு வலியுறுத்தல்களைக் கொண்டிருந்தன.

(அ) இடர்நேர்வு தோற்றப்பாடுகளையும், வலுவினையும் இடர்நேர்வு முகாமைத்துவத்திலுள்ள பலம், பலவீனமான தன்மைகளையும் அடையாளம் காணுதல்

(ஆ) முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றின் போதுமைத் தன்மையை மதிப்பீடு செய்தல், மற்றும்

(இ) வங்கிகள் மற்றும் வங்கித்தொழில் குழுக்களின் நிதியியல் செயலாற்றத்தினை மதிப்பீடு செய்தல்

இச்செய்றபாட்டின் முழுமையான நோக்கமானது நிதி முறைமையின் பொதுவான உறுதித்தன்மையினை குறைக்கக் கூடிய வங்கித்துறைகளில் பாதிப்புக்களைத் தோற்றுவிக்கின்ற விடயங்களை அடையாளம் கண்டு அவற்றிற்கெதிராக நடவடிக்கை எடுப்பதாகும்.

2007ஆம் ஆண்டில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 28 நியதித் தன்மை பரீட்சிப்புக்களை மேற்கொண்டுள்ளது. இதில் 13 பரீட்சிப்புக்கள் 2007இல் ஆரம்பிக்கப்பட்டவையாகவும் 15 பரீட்சிப்புக்கள் 2006இல் ஆரம்பிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. 21 வங்கிகளின் பரீட்சிப்புக்கள், தொடர்பான வங்கிகளுடன் ஏற்படுத்திய கூட்டங்களினூடாகப் பூர்த்தி செய்யப்பட்டு இவ்வறிக்கையானது நாணயச்சபைக்கு 2007இல் சமர்ப்பிக்கப்பட்டதுடன் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் 7 பரீட்சிப்புக்கள் இதுவரையும் பூர்த்தி செய்யப்படாது காணப்படுகின்றன. பரீட்சிப்புக் காலப்பகுதியில் கம்பனியின் ஆளுமை தொடர்பான கரிசனைகள், முறைமை, கட்டுப்பாடு போன்றன போதியளவில் இல்லாமை, சம்பந்தப்பட்ட தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களின் வெளிப்படுத்துகைகள், செயற்படாக்கடன்கள் மற்றும் அறவிடமுடியா, ஐயக் கடனிற்கான ஏற்பாடு என்பவற்றைக் குறைத்து மதிப்பிடல், கடன் கணக்குகளின் பலவீனமான நிருவாகம், கொடுகடன் இடர்நேர்விற்கான சாத்தியம் மற்றும் அதிகாரசபைகளுக்கு காலாந்தரக்கூற்றுகளை தாமதமாக சமர்ப்பித்தல் என்பன பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்ட சில கரிசனைக்குரிய விடயங்களாகும்.

## 2.5 தடைசெய்யப்பட்ட திட்டங்களின் நடத்தை மீதான புலனாய்வுகள்

மேற்பார்வைத் திணைக்களமானது வங்கித் தொழிற் சட்டத்தின் 83 (இ) பிரிவின் நியதிகளின்படி சில தடைசெய்யப்பட்ட திட்டங்களின் நடத்தை மீதான புலனாய்வுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இத் திணைக்களமானது இத் திட்டங்களின் ஊக்குவிப்பாளர்களாக சந்தேகிக்கப்படுபவர்களுக்கெதிராக 3 சட்ட ரீதியான வழக்குகளைத் தொடர்வதற்கு உதவியது. புலனாய்வுகளை நடத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கியதன் மூலம் பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கும் உதவியது. சட்ட விரோத, மோசடியான பிரமிட் மற்றும் பல்மட்ட சந்தைப்படுத்தல் திட்டங்களுடன் தொடர்புகளை வைத்திருப்பது ஆபத்தானது என்பதனை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை திணைக்களம் தொடர்ந்ததுடன் நாட்டின் பல்வேறுபட்ட பகுதிகளிலும் தொழிற்படுகின்ற அத்தகைய தடை செய்யப்பட்ட திட்டங்களை பொதுமக்கள் திணைக்களத்திற்கு அறியத்தர வேண்டும் என்பது பற்றியும் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது.

## 2.6 வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் மீதான தீர்மான நடவடிக்கை

2002 ஒத்தோபரில் வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரம் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து லரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் முகாமைத்துவம் வங்கி மேற்பார்வை திணைக்களப் பணிப்பாளருக்கு உரித்தாக்கப்பட்டதுடன் இடைநிறுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியினை இலங்கைச் சேமிப்பு வங்கியாக மாற்றி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய வழிகாட்டல்களை இந்த வருடத்தில் இத்திணைக்களம் வழங்கியுள்ளது. திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 76எம்(3) இன் பிரிவிற்கேற்ப 2007ஆம் ஆண்டு ஓகத்து 1ஆம் திகதியிலிருந்து நாணயச்சபை வரையறுக்கப்பட்டபிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தினை இலங்கை சேமிப்பு வங்கிக்கு கையளித்தது. பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் கடன்கொடுத்தோர், வைப்பாளர்களின் பொறுப்புக்கள் மீதான கோரல்கள் இலங்கை நாணயச்சபையின் ஒப்புதலுடன் வரையறுக்கப்பட்ட இலங்கைச் சேமிப்பு அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படும் என்ற 2007ஆம் ஆண்டு நவெம்பர் 5ஆம் திகதி தயாரிக்கப்பட்ட திட்டம் 2007ஆம் ஆண்டு திசெம்பர் 3ஆம் திகதி செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட வங்கி 2008இல் தொழிற்பாடுகளைத் தொடங்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறது.

## 2.7 சுயவிருப்பு வைப்பு காப்புறுதித் திட்டத்தின் நிருவாகம்

1987இல் தொழிற்படத் தொடங்கிய சுயவிருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் நிருவகித்தது. இத்திட்டம் இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கித் தொழில் நிறுவனங்களுக்கும் 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்புடையதாகும். 2007இல் ஒரு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மட்டுமே அதன் கிராமிய வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்கள் தொடர்பாக இத் திட்டத்தின் கீழ் காப்புறுதி வசதியினை பெற்றுக் கொண்டது. 2007 திசெம்பர் 31ஆம் நாளன்று சேகரிக்கப்பட்ட கட்டணங்களையும் 1997இல் இலங்கை மத்திய வங்கியினால் ஒதுக்கப்பட்ட ரூ.50 மில்லியனையும் உள்ளடக்கும் வைப்புக் காப்புறுதி நிதியம் ரூ.223 மில்லியனாகக் காணப்பட்டது. இந் நிதியானது அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.8 பொதுவான வங்கித் தொழில் மன்றம்

இத்திணைக்களமானது நிதித்துறையிலுள்ள சமகால நிதித்துறைப் பிரச்சனைகளை விவாதிப்பதற்கும் கலந்துரையாடுவதற்குமாக நிறுவப்பட்ட பல்வேறு நிறுவன ரீதியான ஒழுங்குகளை வசதிப்படுத்துவதைத் தொடர்ந்தது. அதன் ஏற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது:

(அ) வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான மாதாந்தக் கூட்டங்கள்: இக் கூட்டங்கள் வங்கித் தொழிற்பாடுகள் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள்பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கான அரங்கமாக விளங்குகின்றன. வங்கிகளிடமிருந்து பின்னூட்டல்களைப் பெறும் நோக்குடன் அனைத்து முக்கிய கொள்கைகள் மற்றும் தொழிற்பாட்டு விடயங்கள் என்பன அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக இக் கூட்டங்களில்

விவாதிக்கப்படும். அங்கு கலந்துரையாடப்பட்ட முக்கிய கொள்கைகள் மற்றும் தொழிற்பாட்டு பிரச்சனைகளாக உச்சமட்ட கடன் வசதிகளின் மீது ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல், பாசல் II இனை நடைமுறைப் படுத்தல், கம்பனி ஆளுகை மீதான ஒழுங்குவிதிகளை பின்பற்றுதல், புதிய மூலதனக் கருவிகளை அறிமுகப்படுத்தல், செயற்படாக் கடனை வகைப்படுத்தல் மற்றும் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றல் என்பன விளங்கின. நாட்டின் அண்மைய பொருளாதாரம் மற்றும் நாணய அபிவிருத்திகள் பற்றிய கிரமமான பூரணப்படுத்தல்களுக்குப் புறம்பாக 2007இல் நடைபெற்ற இக்கூட்டங்களில் அண்மைய வங்கித்தொழில் துறையின் அபிவிருத்திகள் மீதான பூரணப்படுத்தல்களும் கூட அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், முதனிலை நிறைவேற்று அலுவலர்கள் பன்னாட்டு நிதிச்சந்தையின் அபிவிருத்தி தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொண்டனர்.

ஆ. உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்கள் சபை: உயர்மட்டக் குழுவான உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் சபை 2007ஆம் ஆண்டு சனவரி மாதம் மத்திய வங்கியின் ஆளுநரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கைக் கணக்கீட்டு கணக்காய்வு நியம கண்காணிப்பு சபை, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கைக் காப்புறுதிச் சபை கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, கம்பனிப் பதிவாளர் திணைக்களம், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம், இலங்கைக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் என்பவற்றின் தலைவர்களை உள்ளடக்கியிருந்தது. உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவன சபையானது நிதிச்சந்தையின் அபிவிருத்திக்கான பொருத்தமான கொள்கைப் பணிப்புரைகளை உறுதிப்படுத்துவதற்காக நிதித்துறை உறுதித்தன்மையினைப் பேணும் பொருட்டு அனைத்து உறுதிப்பாட்டு முகவர்களையும் ஒருங்கிணைத்து தகவல்களை பரிமாற்றம் செய்கின்றமையை உறுதிப்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டது.

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் செயலக ரீதியான உதவியினை இக்குழுவிற்கு வழங்குகின்றது. இக்குழுவானது 2007இல் 6 கூட்டங்களை நடத்தியுள்ளதுடன் ஒழுங்குமுறைப்படுத்துநர்களிடையே தகவல்களைப் பரிமாற்றம் செய்தல் நிதி நிறுவனங்களிடையே கம்பனி ஆளுமையினை உயர்த்துதல், வங்கிகள் ஐஏஎஸ் 32, 39 மற்றும் ஐஎவ்ஆர்எஸ் 7 என்பனவற்றை பின்பற்றுதல், நுண்பாக நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்தல், மூலதனச் சந்தையினை விருத்தி செய்தல், கம்பனிகளின் வெளிப்படையான தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை என்பனவற்றை உயர்த்துவதற்காக கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடுவதனை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் பிணைமயப்படுத்தல் சட்டத்தினை அறிமுகப்படுத்தல் என்பனவற்றின் மீது அதன் நடவடிக்கைகள் குவிந்திருந்தன.

இ. பாரிய நிதியியல் குழுமங்களுக்கான ஒழுங்கு படுத்துநர்களின் தொழிற்பாட்டுக்குழு: இக்குழுவானது 2005ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டதுடன் மூன்று கூட்டங்கள் இவ்வருடத்தில் நடாத்தப்பட்டன. தகவல்களை பரிமாறுதல், தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல், பாசல் II இனை நடைமுறைப்படுத்தல் மற்றும் வேறு விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் குழுவின் தொடர்பான நியதிகள் திருத்தப்பட்டன. இதன்படி, இத்தொழிற்பாட்டுக் குழுவின் குறிக்கோளாக பாரிய நிதியியல் குழுமங்களுக்கான முறைசார்ந்த இடர்நேர்வுகளை மதிப்பீடு செய்தல், திரட்டிய அடிப்படையில் தொடர்பான நிறுவனங்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக்கான நடவடிக்கை முறைகளை விதந்துரைத்தல், ஏற்கனவே ஏதாவது வரையறைகள் இருப்பின் அதனைக் கட்டுப்படுத்த தேவையான சட்டச் சீர்திருத்தங்களை முன்மொழிதல், நிதியியல் குழுமங்களின் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை தொடர்பான சட்டக்கட்டமைப்பு என்பன காணப்பட்டன. தேவையான தகவல்களையும் மற்றைய ஒழுங்குமுறைப்படுத்து வோரிடையே தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் காணப்படும் தடைகளையும் கண்டறிவதற்காக அளவீடொன்று மேற்கொள்ளப்பட்டது.

## 2.9 பாசல் II இன் நடைமுறைப்படுத்தலுக்கான ஆயத்தங்கள்

2008இல் பாசல் II இன் மூலதனப் போதுமைக் கட்டமைப்பைக் கட்டி எழுப்புவதற்கு பல்வேறு படிமுறைகள் 2007இல் எடுக்கப்பட்டன. வங்கிகளுக்கு முக்கிய பகுதிகளில் வழிகாட்டல்களை வழங்குவதற்காக 2007 யூனில் ஆலோசனை பத்திரமொன்று வெளியிடப்பட்டது. இப்புதிய வழிகாட்டல்கள் மூலதனப் போதுமையின் சமாந்தர கணிப்பு மீது 2006இல் வழங்கப்பட்ட வழிகாட்டியை பதிலீடு செய்தன. வங்கி மூலதனத்தின் மீதான பாசல் IIஇன் தாக்கம் யாதெனில் 2007 யூனின் பின்னரான புதிய வழிகாட்டலின் கீழ் மூலதனப் போதுமையின் சமாந்தர கணிப்பிலிருந்தான பெறுபேறுகளின் அடிப்படையில் கண்காணிக்கப்பட்டமையாகும். ஆலோசனைப் பத்திரம் தொடர்பாக ஆர்வலர்களிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டல்களையும் கூட்டிணைத்து 2007 திசெம்பரில் பாசல் II மீதான பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

இலங்கை மத்திய வங்கி, வங்கிகள் மற்றும் கணக்காய்வாளர்களிலிருந்து நியமிக்கப்பட்ட அலுவலர்களை உள்ளடக்கி 2005இல் நியமிக்கப்பட்ட குழுவொன்று வரைவிலக்கணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான விடயங்களுக்கான கொள்கைகளை உருவாக்குவது தொடர்பான வேலைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. அத்துடன், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் புதிய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கு சுமூகமாக மாறிச் செல்வதற்கு வங்கித்தொழில் நிறுவனங்களை ஆயத்தப்படுத்துவதற்காக இயலளவை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை தொடர்ந்தது. இதற்கமைய, வங்கி அலுவலர்களுக்காக இவ்வாண்டில் பல உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் பன்னாட்டு ஆய்வரங்குகளும் நடத்தப்பட்டன.

## 2.10 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

இலங்கை மத்திய வங்கியின் ஒட்டு மொத்த பொதுமக்கள் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, நிதி

முறைமை பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதன் பொருட்டும் நிதி நிறுவனங்களுடன் அவர்களால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான இடர்நேர்வு மற்றும் வருமானம் பற்றி எச்சரிக்கும் பொருட்டும் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ச்சியான தகவல்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, தடை செய்யப்பட்ட திட்டங்களில் முதலீடு செய்வதின் ஆபத்தினை வலியுறுத்துவதாக அமைந்திருந்தது.

மக்களுக்கு பிரமிட் மோசடித் திட்டம் தொடர்பாகவும் அத்தகைய தடைசெய்யப்பட்ட திட்டங்களில் முதலீடு செய்வதனால் ஏற்படும் இடர்நேர்வுகள் பற்றியும் கல்வியறிவூட்டும் பொருட்டு தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் விளம்பரம் வெளியிடப்பட்டது. இதற்கமைய 2007இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மூன்று விளம்பரங்களான "சுலபமாக கிடைக்கும் *பணத்தை "வேண்டாம்" என்று சொல்லுங்கள்; பிரமிட் முன்மொழிவுகளிலிருந்து வியர்வை சிந்தி உழைத்த பணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள், "வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களிலா உங்கள் பணத்தை வைப்புச் செய்துள்ளீர்கள்?"* மற்றும் *"சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் அல்லது சாதனங்களில் உங்கள் பணத்தை வைப்புச் செய்துள்ளீர்களா? உங்களுடைய முதலீடுகளில் உள்ளடங்கியிருக்கும் இடர்நேர்வுகளை வருவாய்களுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்துள்ளீர்களா?"* என்ற விளம்பரங்கள் பத்திரிகைகளில் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டது. வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வர்த்தக வங்கிகளினூடாக அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு தடைசெய்யப்பட்ட திட்டங்களில் வைப்பிடுவதிலுள்ள ஆபத்துக்கள் தொடர்பான ஓர் கையேட்டினை வடிவமைத்து சுற்றுநிருவப்படித்தியுள்ளனர். மேலும், இத்தடை செய்யப்பட்ட திட்டங்கள் பற்றி கிராம சேவகர்களுக்கு அறிவூட்டுவதற்காக அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் உள்ளக சுற்றறிக்கையொன்றினை வழங்குவதற்கு பொதுநிருவாக அமைச்சின் செயலாளருடன் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள கிராம சேவகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் பொதுமக்களுக்கு இது தொடர்பான அறிவினை ஊட்டுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இணைப்பு 1

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின்

1 இலங்கை வங்கி
2 சிற்றி பாங்க் என்.ஏ
3 கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் லிமிடெட்
4 டொயிஷ் பாங்க் ஏஜி
5 டீஎவ்சீசீ வர்தன பாங்க் லிமிடெட்
6 ஹபீப் பாங்க் லிமிடெட்
7 ஹட்டன் நசனல் பாங்க் லிமிடெட்
8 ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9 இந்தியன் பாங்க்
10 இந்தியன் ஓவசீஸ் பாங்க்
11 எம்சிபி பாங்க் லிமிடெட்
12 நெசனல் டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட்
13 நேசன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் லிமிடெட்
14 பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
15 மக்கள் வங்கி
16 பப்ளிக் பாங்க் பெர்காட்
17 சம்பத் பாங்க் லிமிடெட்
18 செலான் பாங்க் லிமிடெட்
19 ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
20 ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
21 த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
22 யூனியன் பாங்க் (பாகிஸ்தானுடன் கூட்டிணைக்கப்பட்ட) லிமிடெட்
23 யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு லிமிடெட்

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1 செலிங்கோ சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
2 டிஎவ்சீசீ வங்கி
3 இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
4 கந்துரட்ட அபிவிருத்தி வங்கி
5 லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி லிமிடெட்
6 தேசிய சேமிப்பு வங்கி
7 ரஜரட்ட அபிவிருத்தி வங்கி
8 றுகுண அபிவிருத்தி வங்கி
9 சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி
10 சனச அபிவிருத்தி வங்கி லிமிடெட்
11 இலங்கைச் சேமிப்பு வங்கி லிமிடெட்
12 எஸ்.எம்.இ. பாங்க் லிமிடெட்
13 அரச ஈட்டு முதலீட்டு வங்கி
14 ஊவா அபிவிருத்தி வங்கி
15 வயம்ப அபிவிருத்தி வங்கி

## 3. வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம்

வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையமானது முன்னைய ஆண்டைப் போலவே இந்த ஆண்டிலும் பரந்தளவிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கல்வி மன்றங்கள் மற்றும் பொது மக்களுக்கான ஆய்வரங்குகளை நடாத்தியதன் மூலம் தனது செயற்பாடுகளை முன்னெடுத்தது. இதற்கு மேலதிகமாக அதன் பணியிலக்கை அதாவது பிராந்தியத்திலுள்ள நிதியிடல் துறையின் மிகச் சிறப்பான பயிற்சி நிலையமாக வருதலை அடையும்பொருட்டு சிறப்பான கவனம் எடுக்கப்பட்டது.

இந்தப் பயிற்சித் திட்டங்களானது வங்கித் தொழிலும் நிதியும், கணக்கீடும் நிதியியல் முகாமைத்துவமும், நிதியியல் நிறுவனங்களுடன் தொடர்புடைய சட்டவாக்கங்கள், தகவல் தொழில்நுட்பம், மொழிகளும் தொடர்பாடல் தேர்ச்சியும், முகாமைத்துவம், கிராமியத்துறை அபிவிருத்தி மற்றும் நுண்பாக நிதியியல் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற துறைகளில் நடாத்தப்பட்டன. அதன் பணியிலக்குடன் இசைந்து செல்லும் வகையில் சில நிதியியல் நிறுவனங்களால் வேண்டப்பட்ட சிறப்பான நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன. கடந்த கால வழமையான நடவடிக்கைகளிலிருந்து விலகி வங்கித் தொழில் ஆய்வு நிலையத்தின் பங்கானது, பன்னாட்டு தரம் வாய்ந்த மூலவள ஆட்களின் உதவியுடன் நடாத்தப்பட்ட அவ்வக் காலங்களில் முக்கியத்துவம் வாய்ந்த பன்னாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் பிராந்தியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் விரிவாக்கப்பட்டது.

மேலும் வங்கித் தொழில் ஆய்வு நிலையமானது புகழ்பெற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பேச்சாளர்களின் பங்களிப்புடன் முக்கிய நடைமுறை விடயங்கள் தொடர்பான பொதுமக்களுக்கான ஆய்வரங்குகள் மற்றும் ஞாபகார்த்த விரிவுரைகளை நடாத்தியது. இந்த ஆய்வரங்குகளும், விரிவுரைகளும் புதுமையான கருத்துக்களைக் பரவச் செய்வதற்காகவும், தொழில்சார் நிபுணர்கள், மற்றும் கல்விமான்களினதும் கருத்தை வெளிப்படுத்துவதற்கான மன்றினை வழங்குவதற்காகவும் வடிவமைக்கப்பட்டன. 2007இன் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையமானது கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களின் நன்மை கருதி தொலைக் காட்சியில் விரிவுரைத் தொடரொன்றை நடாத்தியது. 2007ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நுண்பாக நிதியிடலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளைக் கையாள்வதற்காக வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தில் தனியான பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் அட்டவணையிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் கொழும்பு மற்றும் வெளி இடங்களிலும் நடத்தப்பட்டது. கோரிக்கைகளைக் கவனத்திற் கொண்டும் அலுவலகங்களில் இயலாற்றலை அதிகரிக்கின்றமையினது முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டும் மத்திய வங்கி ஊழியர்களுக்கும், பத்திரிகையாளர் போன்ற குறித்த சில தொழில்சார் நிபுணர்களுக்கான பல சான்றிதழ் பயிற்சி நெறிகளை வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம் நடாத்தியது.

2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கித் தொழில் ஆய்வு நிலையம் 57 அட்டவணையிடப்பட்ட உள்நாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள், 01 பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டம், 30 விசேட ஆய்வரங்குகள் கோரிக்கையின் போது ஒழுங்கு செய்யப்பட்ட பாட நெறிகள், 14 பகிரங்க விரிவுரைகள், 16 கல்வி சார்ந்த ஆய்வரங்குகள் மற்றும் 26 நுண்பாக நிதியியல் நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்தமாக 145 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது, இந் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு பற்றியோரின் எண்ணிக்கை முறையே 1493, 139, 911, 2160, 1361 மற்றும் 593 ஆக இருந்து மொத்தம் 6657ஆக காணப்பட்டது.

இந்த ஆண்டு வழங்கப்பட்ட பயிற்சி நெறிகள் / நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையே, நிதியியல் நிறுவனங்களுக்கான செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள், கடன்வழங்கல் மற்றும் நிதியியல் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புபட்ட சட்டம், பிணையங்களுடன் தொடர்புடைய சட்டப் பண்புகள் , நகையைப் பிணையாகக் கொண்ட கடன் வழங்குதல், இலங்கையில் கடன் பிணையங்கள் சந்தை, தவணைக் கொள்வனவு மற்றும் குத்தகை நிதி, நிதியியல் நிறுவனங்களின் அனர்த்த மீட்பு மற்றும் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல்கள், அளவுமுறைப் பொருளாதாரம் மற்றும் ஈ- நோக்குகள், நாணயத்தாள்கள் மற்றும் போலித்தாள் விடயங்கள், பாசல் 11 தொடர்பான பன்னாட்டு நெறி, மற்றும் கடன் மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன உயர்ந்த கேள்வியைக் கொண்டிருந்தன.

ஆசிய அபிவிருத்தி வங்கியாலும், இலங்கை அரசாங்கத்தாலும் நிதியிடப்பட்ட கிராமிய நிதியியல் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 5 பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் நடாத்தப்பட்ட 4 நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக 21 சிறிய நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் வங்கித் தொழில் ஆய்வு நிலையம் தனது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை / நெறிகளை ஒழுங்கமைத்ததன் மூலம் ஆர்வல நிறுவனங்களுடன் சிறந்த இணக்கமான உறவைப் பேணியது. 2007ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் ஒன்று உயர்ந்த தரத்திலான அதிகளவிலான சந்தை சிநேகபூர்வ நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியமையாகும். இதன் பிரகாரம் புகழ்மிக்க பன்னாட்டு மூலவள ஆட்களின் பணிகளைப் பெறுவது தொடர்பில் கவனமெடுக்கப்பட்டது.

## 4. தொடர்பூட்டல்

வங்கி தனது மையக் குறிக்கோள்களான விலை மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டை பயனுறுதியுடன் அடைந்து கொள்ளக் கூடிய வகையில், உறுதியான விழிப்புணர்வு மற்றும் நம்பிக்கையைத் தோற்றுவிப்பதற்காக, உள்ளக மற்றும் வெளியகத் தொடர்பூட்டல்களை முன்னேற்றும் நோக்குடன், தொடர்பூட்டல் திணைக்களமானது வெளியக மற்றும் உள்ளக தொடர்பூட்டல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தனது பணிகளைத் தொடர்ந்தது.

வெளியகத் தொடர்பூட்டல்களின் நோக்கில் திணைக்களமானது தினசரி நாணய மாற்று வீதங்கள், வாராந்த மற்றும் மாதாந்தப் பொருளாதார குறிகாட்டிகள், நுகர்வோர் விலைச் சுட்டெண்கள், மற்றும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள்

போன்ற அரச பிணையங்கள் தொடர்பான தகவல்கள் என்பவற்றை வெளியிடுவதைத் தொடர்ந்தது. ஆண்டுக் காலத்தில் 1188 பத்திரிகைச் செய்திகள் மற்றும் அறிவுறுத்தல்கள், 11 வர்த்தகமானி அறிவித்தல்கள் மற்றும் 212 செய்தித்தாள் விளம்பரங்கள் என்பன வெளியிடப்பட்டன. ஊடகவியலாளர்கள் வங்கியுடன் இணைந்து செயலாற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்கில் திணைக்களமானது பல்வேறு பொருளியல் பிரச்சனைகள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பான 18 செய்தியாளர்கள் மாநாடுகளை ஒழுங்கு செய்திருந்தது. அவற்றுக்கு மேலதிகமாக, தொடர்பூட்டல் திணைக்களமானது தனது தொடர்பூட்டல் பணிகளை மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டில் புதிய சாதனங்களை நிறுவியது. அவற்றுள் புதிதாக வடிவமைக்கப்பட்ட மத்திய வங்கியின் வெப் தளமானது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்தப் புதிய வெப் தளமானது மார்ச்சு 2007இல் வெற்றிகரமாக நிறுவப்பட்டதுடன் இது இலகுவான வழிமுறையின் ஊடாக தகவலின் உள்ளடக்கும் பரப்பு, உரிய நேரத் தன்மை மற்றும் தகவல் பெறும் தன்மையினை முன்னேற்றுவதற்கு உதவியது. இத்தளமானது வங்கியின் அனைத்து முக்கிய தொழிற்பாடுகள் தொடர்பான அனைத்து தகவல்களின் தொகுப்பினையும், மற்றும் வங்கியினுள் தோற்றுவிக்கப்பட்ட பிந்திய பொருளாதார மற்றும் நிதியியல்துறைத் தகவல்களையும் உள்ளடக்கியிருந்தது. 2006இல் பதிவு செய்த நாளொன்றுக்கு 600 துணுக்குகளிலிருந்து 2007இல் நாளொன்றுக்கு 88,000 துணுக்குகளாக முனைப்பாக அதிகரித்தமையானது கடந்த ஆண்டுக்கு மேலான வெற்றியைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது. ஆண்டு முழுவதும் தளமானது எப்பொழுதும் பூரணப்படுத்தப்பட்டுப் பேணப்பட்டது.

உள்ளகத் தொடர்பூட்டலின் வினைத்திறனை முன்னேற்று வதற்காக திணைக்களமானது இவ் ஆண்டில் சிபிஎஸ்எல் டெயிலி என்று பெயரிடப்பட்ட செயலாற்றல் மிக்க உள்ளக வெப் நுழைவாயில் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இந்த வெப் நுழை வாயிலானது ஊழியர்கள் தமது நாளாந்த வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் அறிய வேண்டிய பெரும்பாலான அத்தியாவசியத் தகவல்களை வழங்குகின்றது. இத் தளமானது காலநிலை அறிக்கை, வங்கி மற்றும் நிதியியலுடன் தொடர்புபட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செய்திகள், முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள், சமூக நடவடிக்கைகள், ஊழியர்களுக்கான அறிவித்தல்கள் மற்றும் குறிப்புக்கள் போன்ற பல தரப்பட்ட விசாலமான தகவல்களின் தொகுப்பைக் கொண்டிருக்கின்றது. மேலும் இது ஊழியர்கள் நடைமுறை விடயங்கள் தொடர்பான இணைய வழியான அனுகூலமான கலந்துரையாடல்களில் பங்கு கொள்வதை வசதிப்படுத்தியது. இந்த ஆண்டில் நாளொன்றுக்கு சராசரியாக 300 துணுக்குகளைப் பெற்றுக்கொண்டமையானது இத் தளமானது ஊழியர்களிடையே பிரபல்யம் பெற்றுவருவதை சுட்டிக்காட்டுகிறது. உள்ளகச் செய்திகள் மற்றும் சிறப்பம்சங்களைக் கொண்ட சஞ்சிகையான கவுலுவ உள்ளகத் தொடர்பூட்டல்களுக்காக பயன்பட்ட மற்றுமொரு பிரதான தொடர்பூட்டல் கருவியாகும். 2007இல் வழங்கப்பட்ட புதிய முகப்புத் தோற்றமானது அதற்கு அதிக வசீகரத்தைக் கொடுத்ததோடு இது கூடுதலான பக்கங்களையும் கொண்டுள்ளது. இந்தப் புதிய கட்டமைப்பானது வெளியீடு ஒன்றிற்கான அதிகளவு செய்திகளையும், அம்சங்களையும் பெற்றுக் கொள்வதை இயலச் செய்தது.

கல்வி மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகளின் கீழ் 2007ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பொருளாதாரம், வங்கியியல், நிதியியலுடன் தொடர்புடைய தலைப்புக்களில் 25 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பாடசாலை கருத்தரங்குகள் ஒழுங்கமைக்கப்பட்டன. பொதுமக்களின் நாளாந்த அனுபவங்களின் ஊடாக பணவீக்கத்தின் கருத்தை அவர்கள் விளங்கிக் கொள்வதற்காக கல்வியியல் சார்ந்த தொலைக்காட்சி நாடகம் ஒன்று உருவாக்கப்பட்டது.

வங்கி வெளியீடுகளைப் பகிர்ந்தளிப்பதற்காகவும், வங்கி பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களிடையே உருவாக்குவதற்காகவும் திணைக்களமானது பல்வேறுபட்ட கண்காட்சிகளிலும், பொது நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியது. முன்னைய ஆண்டுகளைப் போலவே கொழும்புப் பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் பங்குபற்றியமை பாராட்டத்தக்க வெற்றியைப் பெற்றது. திணைக்களமானது இக் கண்காட்சியில் செயற்பட்ட விற்பனை நிலையத்தினூடாக அதிகளவான அதன் வெளியீடுகளை விற்கக்கூடியதாக இருந்தது. டயற்றகிருள என்று அழைக்கப்படும் தேசத்தின் மகுடம் என்ற கண்காட்சி போன்ற ஏனைய கண்காட்சிகளின் பங்குபற்றுதலும் குறிப்பிடக்கூடியதாகவிருந்தது.

வங்கி தனது சொந்த வெளியீடுகளை வெளியிடுவதை 2007இலும் தொடர்ந்தது. முக்கிய திணைக்கள வெளியீடுகளாக இரண்டு மாதங்களுக்கொருமுறை வெளியிடப்படும் சட்டகன: சட்டகனவின் தமிழ் வெளியீடான "குறிப்பேடு", காலாண்டுக்கொரு முறை வெளியிடப்படும் செய்தி அளவீடு மற்றும் மாதாந்தம் வெளியிடப்படும் "கவுலுவ" என்பன காணப்பட்டன. பகிர்ந்தளிப்பு வலையமைப்பின் விரிவாக்கத்தின் காரணமாக 2007ஆம் ஆண்டுக் காலத்தில் சட்டகனவின் விற்பனைகள் 4000 இலிருந்து 12000 பிரதிகளாக அதிகரித்தன.

மத்திய வங்கி அச்சகமானது வங்கியின் பெரும்பாலான அச்சிடும் தேவைப்பாடுகளைத் தொடர்ந்தும் பூர்த்தி செய்தது. வழமையான அச்சிடுதலுக்காக கொடுக்கப்பட்ட பணிகள் இலங்கையின் சமூகப் பொருளாதாரத் தரவு, இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளி விபரங்கள், செய்தி அளவீடு, சட்டகன, கவுலுவ, உயர் அலுவலர் ஆய்வு, மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றின் அச்சிடுதல்களை உள்ளடக்கியிருந்தன. மேலும் உபாயத்திட்டம் 2007 மற்றும் இலங்கையில் பொதுப்படுகடன் முகாமைத்துவம் என்பன சிறப்பு வெளியீடுகளாக அச்சிடப்பட்டன. இந்த அச்சிடும் பணிகளுடன் அச்சகமானது வாழ்த்து அட்டைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கி நாட்குறிப்பேடு உள்ளடங்கலாக 315 அச்சிடும் பணிகளைப் பூர்த்தி செய்துள்ளது. அச்சகமானது அத்துடன் 2006ஆம் ஆண்டறிக்கையின் அட்டைப்பக்க வடிவமைப்பு, மற்றும் ஏனைய பல வெளியீடுகளின் அட்டை வடிவமைப்புக்களையும் வழங்கியது.

இவ்வாண்டில், திணைக்களத்தின் புகைப்படப் பிரிவானது சுறுசுறுப்பான பிரிவுகளுள் ஒன்றாக விளங்கியதுடன் வங்கியின் புகைப்படப் பிடிப்புத் தேவைப்பாடுகள் தனியொருவரினால் சிறப்பாகக் கையாளப்பட்டது.

மிகக் கவனமாக வடிவமைக்கப்பட்ட ஒரு தோற்றப்பாட்டினூடாக மத்திய வங்கியின் நேர்மைத்தன்மை, தொழில்சார் நிபுணத்துவம்

மற்றும் அதன் குறிக்கோள்களை மக்கள் முன் கொண்டு செல்லும் நோக்குடன் 2008 சனவரி 1ஆம் திகதியிலிருந்து இலங்கை மத்திய வங்கிக்காக புதிய நிறுவன வடிவமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இப்புதிய நிறுவன வடிவமைப்பானது மத்திய வங்கியை வழிநடத்துகின்ற, அது பின்பற்றுகின்ற பெருமதிப்புக்களை பிரதிபலிப்பதாக இருக்கும்.

### நூலகமும் தகவல் நிலையமும்

நூலகமும் தகவல் நிலையமும் வங்கி அலுவலர்களுக்கும் வேண்டுதலின் பேரில் மற்றையவர்களுக்கும் நூலகப் பணிகளை தொடர்ந்தும் வழங்கியது. இது தமது புத்தக சேகரிப்புக்களை 19,792 இலிருந்து 20,585இற்கும், அறிக்கைகளை 13,335 இலிருந்து 13,826இற்கும் இறுவட்டுக்களை 1020 இலிருந்து 1081இற்கும் அதிகரித்துக் கொண்டதுடன் இவ்வாண்டில் ஒன்று திரட்டப்பட்டுக் கட்டப்பட்ட 280 தொகுதிகளும் சேகரிக்கப்பட்டன. வங்கித் தொழில் ஆய்வுநிலையத்திலுள்ள நுலகம் அதன் நூல் சேகரிப்புக்களை 5144 இலிருந்து 5272 இற்கு அதிகரித்துக் கொண்டது.

பொருளாதாரம், அளவுப் பொருளாதாரம் மற்றும் நிதி என்பன தொடர்பான 100இற்கும் மேற்பட்ட சஞ்சிகைகளை உடனடியாக அணுகத்தக்க விதத்தில் "விஞ்ஞான வழிகாட்டல்" தரவுத் தளத்தின் பயன்பாடு அதிகரித்தது. ஆகையால் நூலகம் சஞ்சிகைகளின் சந்தாவை 172 இலிருந்து 120ஆகக் குறைத்தது.

மீளாய்விற்குரிய ஆண்டில் நூலகமும் தகவல் நிலையமும் அண்மைய சேர்க்கைகள், (அதாவது புதிய நூல்கள்) தெரிந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் பட்டியல், மத்திய வங்கித் தொழில் பற்றிய செய்திகள், நியூஸ் அலேட் போன்ற மின்னியல் வெளியீடுகளைத் தொடர்ந்தும் திரட்டி இணையத்தளமூடாக அவற்றைப் பரப்பியது. ஒரு பயன்படுத்துனர் குறிப்பினைத் தயாரித்து அதனைத் தரவுத் தளங்களுடன் பொருத்தியதன் மூலமாக திணைக்களத் தலைவர்களுக்கான தெரிவு செய்யப்பட்ட தகவல் பரப்புமுறை தொடங்கி வைக்கப்பட்டது.

வங்கி அலுவலர்கள் நூலக வசதிகளை அதே நேரத்திலேயே பயன்படுத்திக் கொள்வதனை ஊக்குவிக்கும் பொருட்டு 10 திணைக்களங்களை உள்ளடக்கி பயன்படுத்துநர்களுக்காக 10 அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த வசதிகளின் பயன்படுத்துநர்களுக்கு அறிவூட்டும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி அலுவலர்களுக்கு 03 விரிவுரைகளும் நடைபெற்றன. பொருளாதார மற்றும் வங்கித் தொழில் நூலக வலையமைப்பு மீளச் செயற்படத் தொடங்கியதுடன் அதனது 22 உறுப்பினர் நூலகங்களும் மின்னஞ்சல் மூலமாக தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரிய அளவில் நன்மைகளைப் பெற்றன. நூலகமும் தகவல் நிலையமும் தேசிய வாசகர் மாதத்தில் ஒரு புத்தகக் கண்காட்சியை ஒழுங்கு செய்து ஒத்தோபரில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட 450 நூல்களை காட்சிப்படுத்தியதுடன் இந்தக் கண்காட்சிக்கு அலுவலர்களிடமிருந்து நல்ல வரவேற்புக் கிடைத்தது. மின்னஞ்சல் மூலமான ஒரு புத்தக ஆய்வுரைப் போட்டி நிகழ்ச்சியும் கேள்வி பதில் நிகழ்ச்சித் திட்டமும் தேசிய வாசிப்பு மாதத்தின் ஏனைய பிரபல்யம் பெற்ற விடயங்களாக விளங்கின. நூலகம் மற்றும் தகவல் நிலையம், வங்கி அலுவலர்களை புத்தக ஆய்வுகளை எழுதத் தூண்டுவதற்காக புத்தக மீளாய்வு என்றால் என்ன? என்பது தொடர்பில் விரிவுரை ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது.

சுய அணுகல் மொழி ஆய்வு கூடமானது இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள் இந்த வசதியை இலகுவில் அடைவதற்காக ராஜகிரிய வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்திலிருந்து நூலக மற்றும் தகவல் நிலையத்திற்கு இடமாற்றப்பட்டது. மேலுறையற்ற தொழிநுட்ப பருவ இதழ்கள் மற்றும் அறிக்கைகளை வைத்துப் பேணுவதற்காக மத்திய பொறியியலாளர் ஆலோசனை பணியகத்தின் தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி பணிமனைத் திணைக்களத்தின் மேற்பார்வையுடன் நூலகத்தின் உசாத்துணை பகுதியில் இருபக்கங்களைக் கொண்ட மூன்று பிரிவு அலுமாரிகள் நிறுவப்பட்டன. நூலகமும் தகவல் நிலையமும் நூலகத்தின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக ஆவணப்படமொன்றை காண்பித்தது.

## 5. நாணயம்

### நாணய வெளியீடு மற்றும் முகாமைத்துவம்

இலங்கையில் நாணயத்தினை வெளியிடும் அதிகாரம் கொண்ட தனியொரு நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி 2007ஆம் ஆண்டுப் பகுதியிலும் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்துவதற்காக சட்டரீதியான நாணயத்தை வழங்குகின்ற அதன் தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் மேற் கொண்டது. இந்த ஆண்டில் வர்த்தக வங்கிகளுக்கு நாணயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட புதிய மற்றும் பயன்பாட்டிலுள்ள நாணயங்களின் பெறுமதி முறையே ரூ.37 பில்லியன் மற்றும் ரூ. 172 பில்லியனாக இருந்தது. அத்துடன் நாணயத் திணைக்களம் வர்த்தக வங்கிகளிடமிருந்து ஏற்றுக் கொண்ட நாணயத் தாள்களிலான வைப்புக்களின் பெறுமதி ரூ.193 பில்லியனாக இருந்தது. இதன்படி நாணயத் தாள்களின் தேறிய வழங்கல் ரூ.16 பில்லியனாக இருந்தது. 2007ஆம் ஆண்டின் இறுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயத் தாள்களினதும் குத்திகளினதும் பெறுமதி ரூ.173 பில்லியனாகக் காணப்பட்டதுடன் 2006ஆம் ஆண்டின் இருப்புக்கு மேலாக 10 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. சுற்றோட்டத்திலிருந்த மொத்த நாணயத்தில் நாணயத் தாள்கள் 97 சதவீதத்தை உள்ளடக்கியிருந்த அதேவேளையில் மிகுதி 3 சதவீதம் குத்திகளாயிருந்தன.

### நாணய வழங்கல் மற்றும் முகாமைத்துவத்திற்கான செலவுச் சிக்கனம் வாய்ந்த அளவீடுகள்

இந்த ஆண்டில் நாணயத் திணைக்களமானது நாணயங்களை வெளியிடுவதிலுள்ள செலவுகளைக் குறைப்பதற்காக கீழ்வரும் வழிமுறைகளை மேற்கொண்டது.

(அ) பயன்படாதிருக்கும் நாணயக் குத்திகளை சுற்றோட்டத்திற்கு கொண்டு வருதல் நாணயக் குத்திகளின் வார்க்கும் செலவானது பிரதானமாக சர்வதேச உலோகம் மற்றும் வலு விலைகளின் அதிகரிப்பால் அண்மைக் காலங்களில் குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்துள்ளது. இந்த நிலைமையைச் சீர்படுத்துவதற்காக நாணயத்

திணைக்களமானது வீடுகளிலும், வணக்கத்தலங்களிலும் பயன்படாது தேங்கிக் கிடக்கும் நாணயங்களைச் சுற்றோட்டத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் நாணயக் குத்திகளை அச்சிடுவதற்கு ஐக்கிய இராச்சிய பவுண்களில் ஆண்டுதோறும் ஏற்படும் செலவைச் சேமிப்பதற்காக நாடளாவிய செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பித்தது. நாணயத் திணைக்களம் எட்டு மாவட்டங்களிலிருந்து ரூ.28.6 மில்லியன் பெறுமதியான பயன்படுத்தாத நாணயக் குத்திகளை சேகரிக்கக் கூடியதாக இருந்தது.

நாணயக் குத்திகளின் சேகரிப்புத் நிகழ்ச்சித் திட்டமானது வீட்டுத்துறையினரிடமிருக்கும் பாவனையிலில்லாத நாணயக் குத்திகளை மீள் சுற்றோட்டத்தில் சேர்ப்பதற்காக பாடசாலை மாணவர்களைப் பயன்படுத்தி பாடசாலை வலையமைப்பினூடாக நடாத்தப்பட்டது. வர்த்தக வங்கிகள், ஏனைய வங்கிகள் மற்றும் வங்கியல்லாத பொது நிறுவனங்கள் என்பன இந் நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டன. பாடசாலை மாணவர்களிடையே போலி நாணயம் மற்றும் சுத்தமான நாணயக் கொள்கை போன்றவற்றினூடாக நாணயத்தின் மீதான விழிப்புணர்வை முன்னேற்றுதல், சேமிப்பு மற்றும் வங்கியியல் பழக்கங்களை அவர்கள் மத்தியில் பதிய வைத்தல், அவர்களின் பாட விதானத்திற்கு அப்பாற்பட்ட புற செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு அவர்களுக்கு உதவுதல், மற்றும் நாணயம் தொடர்பான அறிவை மிகுதி சமூகத்திற்கும் கொண்டு செல்வதற்குரிய வாகனமாக மாணவர்களைப் பயன்படுத்துதல் போன்ற பலவகையான நன்மைகளை வழங்கக் கூடிய விதத்தில் பாடசாலை வலையமைப்பு தெரிவு செய்யப்பட்டது.

(ஆ) குறைந்தளவில் பயன்படுகின்ற மற்றும் குறைந்த பெறுமதியுடைய பழுதடைந்த நாணயக் குத்திகளை உருக்குதல்

குறிப்பிடத்தக்களவில் குறைவாகப் பயன்படுத்தப்படும் சதம் 10 மற்றும் சதம் 5 இனத்திலான அலுமினிய நாணயக் குத்திகள் நாணயத் திணைக்கள நிலவறையில் பாரிய இடப்பரப்பை நிரப்பியிருந்தன. நாணயத் திணைக்களமானது இந்த நாணயக் குத்திகளின் ஒரு பகுதியை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உதவியுடன் உருக்கியதுடன், இந்த அலுமினிய வார்ப்புக்கள் கைத்தொழில் அபிவிருத்தி சபையால் எதிர்கால கொள்வனவாளர்களுக்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்டது. இவ் விற்பனைகளிலிருந்து நாணயத் திணைக்களம் ஏறத்தாழ ரூ.3 மில்லியனை சேகரித்துக் கொண்டது.

### போலி நாணயத் தாள்களைக் கண்டுபிடித்தல்

நாணயத்தின் மீதான பொது மக்களின் நம்பிக்கையைப் பேணுவது மத்திய வங்கியின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகும். இதன் பொருட்டு நாணயத் திணைக்களம் இந்த ஆண்டில் போலி நாணயத் தாள்களை உருவாக்கும் முயற்சிகளை அதிக கடினமாக்குவதற்காக நாணயத் தாள்களின் பாதுகாப்புத் தன்மைகளை மேலும் முன்னேற்றியது. மேலும் போலி நாணயத் தாள்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அவற்றை தயாரிக்கும் முயற்சிகளை மிகவும் குறைப்பதற்குமாக திணைக்களம் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத்தாள்கள் பணியகத்தின் நெருக்கமான ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் பணியாற்றியது. இதன்படி நாணயத் திணைக்களம் போலி நாணயத் தாள்கள் மீதான 26 நீதிமன்ற வழக்குகளில் கலந்து கொண்டது. இதற்கு மேலதிகமாக நாணயத் திணைக்களமானது நடைமுறையிலுள்ள நாணயத் தாள்களின் பாதுகாப்பு அம்சங்கள் தொடர்பான பரந்த அடிப்படையிலான பொதுமக்களின் விழிப்புணர்வை முன்னேற்றுவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கையையும் பரப்பெல்லையையும் அதிகரித்தது. இந்த அளவீடுகள் போலி நாணயங்களைக் குறைப்பதற்கு உதவியதுடன் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டு மத்திய வங்கியின் உறுதிப்படுத்தலுக்காகத் தொடர்பு கொள்ளப்பட்ட போலி நாணயங்களின் எண்ணிக்கை 2007இல் சுற்றோட்டத்திலிருந்த ஒவ்வொரு மில்லியன் தாளுக்கும் 1.9 தாள்கள் என்ற அளவில் காணப்பட்டது. இது 2006ஆம் ஆண்டில் 2.23 தாள்களாகக் காணப்பட்டது.

### சுத்தமான நாணயத்தாள் கொள்கையும் நாணயத் தாள்களின் செய்முறையும்

சுற்றோட்டத்திலிருக்கும் நாணயத் தாள்களின் தரத்தினைப் பேணுவது சுத்தமான நாணயத்தாள் கொள்கையின் கீழான வங்கியின் மற்றுமொரு பொறுப்பாகும். இதன்படி நாணயத் திணைக்களமானது பயன்படுத்த முடியாத நாணயத்தாள்களை சுற்றோட்டத்திலிருந்து தொடர்ந்து அகற்றியது. நாணயத் திணைக்களத்திலிருந்த சரிபார்த்தல், கணக்கெடுத்தல், மற்றும் தரம் பிரித்தல் பொறிகள் இரண்டும் இந்த வருடத்தில் 98.7 மில்லியன் பயன்படுத்தத்தக்க நாணயத் தாள்களை செய்முறைப்படுத்தியதுடன் 21.1 மில்லியன் பயன்படுத்தத்தகாத நாணயத் தாள்களை அழித்தன.

நாணத் திணைக்களம் 2007 மார்ச்சில் வாத்தக வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட பயன்படுத்த முடியாத நாணயத் தாள்களை பிரித்தறிந்து அழிப்பதற்கான பொறியினைப் பொருத்தியது. ஒரு நாளுக்கு 900,000 பெறுமதியான பயன்படுத்த முடியாத தாள்களை அழிக்கக்கூடிய இயலுமையை இந்தப் பொறி கொண்டுள்ளது. 21.03.2007இலிருந்து 31.12.2007வரை, 2005 இலிருந்து ஒன்றுசேர்ந்த ரூ.174 மில்லியன் பாவனைக்கு உதவாத தாள்களை இவ் இயந்திரம் அழித்துள்ளது.

### ஞாபகார்த்த தாள்களினதும் நாணயக் குத்திகளினதும் விற்பனை

திணைக்களம் தொடர்ந்தும் ஞாபகார்த்தத் தாள்கள் மற்றும் நாணயக் குத்திகளை உலோக நாணய அறிவியலாளர்களுக்கும் சேகரிப்பாளர்களுக்கும் பொது மக்களுக்கும் விற்பனை செய்தது. மத்திய வங்கி வெப் தளமானது இந் நாணயங்கள் பற்றிய பூரணப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குகின்றது. திணைக்களம் மேலும் 2007 இல் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை இரண்டாம் இடம் பெற்றதைக் குறிக்கும் விதத்தில் இரண்டு ஞாபகார்த்த நாணயக் குத்திகளை வெளியிடுவதற்கு முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு நாணயக் குத்திகளும் 2008ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் வெளியிடப்படும்.

நாணயத் திணைக்களமானது மன்னன் (1) 6ம் ஜோர்ஜ் மன்னனின் உருவப்படம், (2) இலங்கையின் படைக்கலச் சின்னம், (3) இலங்கையின் படைக்கலைச் சின்னம் (புதிய நாணயக் குத்திகள்) ஆகிய மூவகைத் தொடர்களைக் கொண்ட மூன்று விதமான நாணயக் குத்திப் பொதிகளை, அத்தகைய விடயங்களுக்கான பொது மக்களின் கேள்வியைப் பூர்த்தி செய்யும்வகையில் தயாரித்தது. இந்த நாணயக் குத்திப் பொதிகளின் கிடைப்பனவு மற்றும் முக்கிய அம்சங்களை பொதுமக்களுக்குத் தெரிவிப்பதற்காக இரண்டு தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

**பயிற்சியும் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களும்**

நாணயத் திணைக்களம் போலி நாணயத் தாள்களை இனங்காணல் மற்றும் சுத்தமான நாணயத் தாள் கொள்கை, நாணயக் குத்திகளை மீள் சுற்றோட்டத்திற்கு விடுதல் என்பனவற்றை சிறப்பம்சங்களாக கொண்டு வங்கி அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், மற்றும் பொது மக்கள் ஆகியோருக்கு பொது விரிவுரைகள், ஆய்வரங்குகள், மின்னியல் அச்சு ஊடகங்களினூடாக வங்கித் தாள்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. இத்தகைய, 34 நிகழ்ச்சித் திட்டங்கள் 2007ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

நாணயத் திணைக்களம் மேலும் நீதி மற்றும் சட்டச் சீர்திருத்த அமைச்சின் செயலாளரின் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கும் விதத்தில் மாவட்ட நீதிமன்றங்களின் அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான சிறப்புத் தொடரொன்றை நடாத்தியது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாணயத் திணைக்களம் 10 மாவட்ட நீதிமன்றங்களை உள்ளடக்கியது. ஏனைய மாவட்டங்கள் 2008ஆம் ஆண்டில் உள்ளடக்கப்படும்.

ஐக்கிய இராச்சியத்தின் நாணயம் டிலாறூவின் ஆதரவுடன் போலி நாணயத் தாள்களை கண்டுபிடித்தல் தொடர்பாக 2007 செத்தெம்பரில் நடாத்தப்பட்ட ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பை நாணயத்திணைக்கள அலுவலர்கள் பெற்றுக் கொண்டனர்.

நாணயக் கையாள்கை தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில் திணைக்களமானது கீழ்வரும் கண்காட்சியில் பங்குபற்றியது.

1. 2007 பெப்புருவரி 2 முதல் பெப்புருவரி 7 வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற டயட்ட கிருள எனப்படும் தேசத்தின் மகுடம் கண்காட்சி

2. 2007 பெப்புருவரி 28 முதல் மார்ச்சு 4 வரை கம்பகா ரத்னாவளி பாலிகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கல்விக் கண்காட்சி

3. 2007 மார்ச்சு 22 முதல் மார்ச்சு 25 வரை அநுராதபுரத்தில் இடம் பெற்ற அநுராதபுர உதானய கண்காட்சி

4. 2007 ஏப்பிறல் 3 முதல் 7 வரை கேகாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் இடம்பெற்ற கல்விக் கண்காட்சி

5. 2007 மே 7 முதல் 12வரை வீரகெட்டிய ராஜபக்ஷ மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கல்விக் கண்காட்சி

இந்த அனைத்து கண்காட்சிகளிலும் நிறுவப்பட்ட மத்திய வங்கியின் விற்பனைக் கூடத்திற்கு பாடசாலை மாணவர்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் பெருமளவு ஆதரவு கிடைத்தது.

## 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதன் முக்கிய தொழிற்பாடுகளான மத்திய வங்கியின் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல், அரசாங்கத்திற்கும் வர்த்தக வங்கிகளுக்கும் வங்கியாளராக தொழிற்படுவது என்பவற்றைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் கீழான தீர்ப்பனவுகளுக்கு நிதி கிடைப்பதனை உறுதிப்படுத்தும் நிமித்தமாக திணைக்களம் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியினைத் தொடர்ந்து வழங்கியது.

### 1. நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

**(அ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்**

திணைக்களமானது 2003இல் அறிமுகப்படுத்திய சந்தையடிப்படையிலான நாணயக் கொள்கை நடவடிக்கையின் கீழ் திறந்த சந்தை தொழிற்பாடுகளைத் தொடர்ந்தது.

இவ்வாண்டில் ஒதுக்குப் பணத்தினை இலக்குகளுக்குள் பேணும் ஒரு உபாயமாக திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக திறந்த சந்தை தொழிற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய திரவத்தன்மையை ஈர்ப்பதற்காக மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் பொருட்டு ஏலங்களை நாளாந்த அடிப்படையில் மேற்கொண்ட வேளையில் நிரந்தர அடிப்படையில் திரவத் தன்மையினை ஈர்ப்பதற்காக மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் இரண்டாந்தரச் சந்தையில் ஏலங்களினூடாக விற்பனை செய்யப்பட்டன. துணைநில் வசதியின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இவ்வுபாயத்திற்கேற்ப,

வரைபடம் II - 1
2007இல் சந்தைத் திரவத்தன்மை



நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களினூடாக நிதிகளை விடுவிப்பதற்கான ஏலங்கள் நடத்தப்படாத வேளையில், இதற்கான துணைநில் வசதிகள் திரவத்தன்மை பற்றாக்குறையாகவுள்ள நாட்களில் மாத்திரம் மதிப்பிடப்பட்ட பற்றாக்குறைக்கு மட்டும் அந்த நாளில் மட்டும் கிடைக்கச் செய்யப்பட்டது.

திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் தகமை வாய்ந்த பங்கேற்கும் நிறுவனங்களாக அனைத்து வர்த்தக வங்கிகளும் தொடர்ந்தும் விளங்கின. 2006 யூன் 19ஆம் நாளிலிருந்து மத்திய வங்கியுடனான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் பங்கேற்பதிலிருந்தும் விலக்கப்பட்டிருந்த முதனிலை வணிகர்கள் 2007 ஓகத்து 23ஆம் நாளிலிருந்து பங்கேற்பதற்கு தகைமையுடையவர்களாக அனுமதிக்கப்பட்டனர்.

மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள், அதாவது மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் 2007 பெப்புருவரியில் 10.5 சதவீதத்திற்கும் 12 சதவீதத்திற்கும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் ஆண்டு முழுவதும் அதே வீதங்களில் பேணப்பட்டு வருகின்றன.

வங்கித்தொழில் முறையின் ஒட்டு மொத்த திரவத்தன்மை 2007ஆம் ஆண்டு முழுவதும் மிகையாகவே காணப்பட்டது (வரைபடம் II-1). மே மாதத்தில் திரவத்தன்மை மிகை முன்னைய மாதத்திலே காணப்பட்ட அதன் சராசரியான ஏறத்தாழ ரூ.5 பில்லியனிலிருந்து ஏறத்தாழ ரூ.12.5 பில்லியனுக்கு கணிசமாக அதிகரித்தமைக்கு, பண்டிகைத் தேவைகளை ஈடுசெய்வதற்காக பெருமளவிற்கு எடுப்பனவு செய்திருந்த நாணயம் மீண்டும் பழைய நிலைமைக்கு வந்தமை மற்றும் தேறிய வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்பு என்பன காரணங்களாக அமைந்தன. நவெம்பரில் திரவமிகை சராசரியாக ரூ. 8 பில்லியனுக்கும் கூடுதலாக அதிகரித்தமைக்கு ஒத்தோபர் இறுதியில், ஐ.அ.டொலர் 500 மில்லியன் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்கப்பட்டமையே காரணமாகும். அதேவேளை, ஏப்பிறல், செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் மாதங்களில் பெரும்பாலான நாட்களில் குறிப்பிடத்தக்க திரவத்தன்மை பற்றாக்குறை காணப்பட்டமைக்கு பண்டிகைக் காலத்தில் நாணயத்திற்கு காணப்பட்ட உயர்ந்த கேள்வி, மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணய விற்பனை மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொள்வனவு என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன.

### (i) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நாளாந்த ஏலங்கள்

#### மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வங்கித்தொழில் முறையில் காணப்பட்ட எந்தவொரு தற்காலிக திரவத்தன்மை மிகையினையும் நாளாந்த அடிப்படையில் ஈர்ப்பதற்காக தொடர்ந்தும் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கான ஏலங்களை நடத்தியது. இவ்வாண்டில் பெரும்பாலான நாட்களில் பதிவு செய்யப்பட்ட மிகையான திரவத்தன்மையானது மீள்கொள்வனவு அடிப்படையில் திறைசேரி உண்டியல்கள் விற்பனை செய்யப்பட்டமையின் மூலம் நாளாந்த ஏலங்களினூடாக ஈர்க்கப்பட்டது. சராசரியாக, ஏறத்தாழ மதிப்பிடப்பட்ட மிகையான திரவத்தன்மையினைப் பிரதிபலித்த ரூ.7.4 பில்லியன் நாளாந்த அடிப்படையில் வழங்கப்பட்டது.

வரைபடம் II - 2
திறந்த சந்தைத் தொழிற்பாட்டுகள் - 2007 (மாதாந்த சராசரி)




இந்த ஏலங்களிலிருந்து ஈர்க்கப்பட்ட தொகை ஏறத்தாழ ரூ.6.1 பில்லியனாக விளங்கி மதிப்பிடபட்ட மிகையான திரவத்தன்மையில் 80.2 சதவீதமாக இருந்தது. ஆண்டின் தொடக்கத்தில் ஏறத்தாழ 11.35 சதவீதமாக விளங்கிய ஏலங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் கொள்கை வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து ஆண்டின் இறுதியில் ஏறத்தாழ 50 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்து 11.87 சதவீதமாக விளங்கியது (வரைபடம் II-2)

#### நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

2007ஆம் ஆண்டுப் பகுதியில் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் எதுவும் நடத்தப்படவில்லை.

### (ii) துணைநில் வசதிகள்

வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தைகளினூடாகவும் நாளாந்த திறந்த சந்தை தொழிற்பாட்டு ஏலங்களினூடாகவும் தமது குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகளை முழுமையாக ஈடுசெய்து கொள்ள முடியாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு துணைநில் வசதிகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. இவ்வசதிகள் மத்திய வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களில் வழங்கப்பட்டன.

#### மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

மீள்கொள்வனவு ஏலங்களில் வெற்றி பெறாத, அல்லது, அதில் பங்கேற்க முடியாமல் போன பங்கேற்கும் நிறுவனங்கள் மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வீதத்தில் துணைநில் வசதிகளைப் பெற நாடின. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்காக நடத்தப்படுகின்ற நாளாந்த ஏலங்களின் மூலம் மிகையான திரவத்தன்மையின் பெரும் பங்கு ஈர்க்கப்பட்டு விடுவதனால் துணைநில் வசதியின் கீழான மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் மட்டுப்படுத்தப்பட்டதாக சராசரியாக நாளொன்றிற்கு ரூ. 0.75 பில்லியனாகவே காணப்பட்டன.

#### நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

துணைநில் வசதியின் கீழான மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியானது, தமது தற்காலிக திரவத்தன்மை தேவைகளை ஈடுசெய்து கொள்வதற்காக பங்கேற்கும் நிறுவனங்களுக்கு கிடைக்கச் செய்யப்படுவதுடன் இறுதிக்கடன் வழங்கலாக மாத்திரமே இது பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், வங்கித்தொழில் முறையில் மிகையான திரவத்தன்மை

காணப்படுகின்ற வேளையிலும் கூட குறிப்பிட்ட சில வங்கிகள் துணைநில் வசதியினை கிரமமானதொரு நிதியிடல் மூலமாக பயன்படுத்தி வருவது அவதானிக்கப்பட்டுள்ளமையினால், துணைநில் வசதியின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் பயன்பாட்டினை மட்டுப்படுத்துமாறும் கிடைக்கத்தக்க மூலவளங்களுக்கேற்ப அவர்களின் தொழிற்பாடுகளை கட்டுப்படுத்துமாறும் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

துணைநில் வசதியின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை ஊக்கமிழக்கச் செய்யும் பொருட்டு, 2007 சனவரியிலிருந்து வங்கி முறையில் திரவப்பற்றாக்குறை காணப்படும் நாட்களில் மட்டும் இவ்வசதியைக் கிடைக்கச் செய்வதற்கு மத்திய வங்கி தீர்மானித்தது. மேலும், குறிப்பிட்ட நாளில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மொத்தத்தொகை, வங்கியின் மதிப்பீடுகளின்படி வங்கி முறையில் திரவத்தன்மைக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட வங்கிக்கு நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி 2007 மாச்சு 31 வரை கலண்டர் மாதமொன்றிற்கு ஆறு தடவைகளும் அதன் பின்னர் கலண்டர் மாதமொன்றிற்கு மூன்று தடவைகளும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் வழங்கப்படும். குறிப்பிட்ட பங்கேற்பு நிறுவனத்தின் மீதான நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் கீழ் கடன் பெறத்தக்க எண்ணிக்கை கட்டுப்பாடுகள் 2007 ஓகத்து 23இல் புறக்கீடு செய்யப்பட்டன.

பங்கேற்கும் நிறுவனங்கள் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை பயன்படுத்துவதனை ஊக்கம் குன்றச் செய்தல் மற்றும் அவற்றின் திரவத்தன்மை தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் என்பனவற்றின் பொருட்டு மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை பங்கேற்பாளர் ஒருவருக்கு கலண்டர் மாதமொன்றிற்கு நான்கு தடவைகள் வழங்குவதற்கு தீர்மானித்த வேளையில், குறிப்பிட்ட பங்கேற்கும் நிறுவனம் கலண்டர் மாதமொன்றில் நான்கு தடவைகளுக்கு கூடுதலாக, ஏதாவது, கடன்பாடுகளை மேற்கொள்ளுமிடத்து அவை 2007 திசெம்பர் இறுதியிலிருந்து ஆண்டிற்கு 19 சதவீதம் கொண்ட தண்ட வீதத்தில் வழங்கப்படும். 2007 திசெம்பர் 3ஆம் நாளிலிருந்து தண்ட வீதம் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்படுவதுடன் அப்போது நிலவுகின்ற நாணய நிலமைகளுக்கேற்ப அதில் மாற்றம் செய்யப்படும்.

மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகளின் பெறுபேறாக துணைநில் வசதியின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி 2006இன் ரூ.382 பில்லியனிலிருந்து 2007இல் ரூ.173 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது.

**(iii) உடனடிக் கொடுக்கல் வாங்கல்கள்**

மிகையான திரவத்தன்மையினை நிரந்தர அடிப்படையில் ஈர்த்துக் கொள்ளும் பொருட்டு மத்திய வங்கி அதன் சொந்த சொத்துப்பட்டியலிலிருந்து திறைசேரி உண்டியல்கள் விற்பனை செய்வதற்காக உடனடி ஏலங்களை நடத்தியது. 2007 சனவரியில் வங்கி திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்வதற்கு பல முதிர்ச்சி ஏலங்களை நடத்தத் தொடங்கியது. இவ்வாண்டுக் காலத்தில் இவ்வேலங்களூடாக விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதி ரூ.110.9 பில்லியன்களாக விளங்கின. இவ்வுண்டியல்களின் காலம் மிகக் குறுகிய காலத்தினைக் கொண்டதாக முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள நாட்களாக 10 இலிருந்து 157 நாட்கள் வீச்சினைக் கொண்டதாகக் காணப்பட்டன. இவ்விற்பனைகள் ஒவ்வொரு உடனடி விற்பனையின் போதும் முதலாந்தரச் சந்தையில் 91 நாள் திறைசேரி உண்டியல்களுக்காக நிலவுகின்ற நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களுக்கான ஒப்பீட்டு வீதங்களுக்கும் குறைவான விதத்தில் இறுதிப்படுத்தப்பட்டன.

**(ஆ) நியதி ஒதுக்குத் தேவைப்பாடு**

திணைக்களம் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியதுடன் இது இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களில் 10 சதவீதமாகக் காணப்பட்டது.

**(இ) வங்கி வீதம்**

நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 87இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதமானது (வங்கி வீதம்) 15 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. எனினும், எந்த ஒரு வங்கியும் வங்கி வீதத்தில் கடன் பெறுவதற்கு மத்திய வங்கியினை நாடாதினால் இவ்வீதம் தொழிற்படாமலிருந்தது.

## 2. வர்த்தக வங்கிகளுக்கும், அரசிற்கும் வங்கியாளராகத் தொழிற்படுகின்றமை

**(அ) நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்**

வர்த்தக வங்கிகளின் வங்கியாக மத்திய வங்கி தொழிற்படுவதற்கு வசதியளிக்கும் விதத்தில், வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறை வினைத்திறனுடன் தொழிற்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்குமான நடைமுறைக் கணக்கு வசதிகளை திணைக்களம் தொடர்ந்தும் வழங்குகின்றது. இக்கணக்குகள் வங்கியின் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறைக்கமைவாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் அடிப்படையில் தொழிற்படுத்தப் படுகின்றன.

**(ஆ) அரச கணக்குகள்**

அரசிற்கான வங்கியாளர் என்ற ரீதியில் மத்திய வங்கி பணியாற்றுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் திணைக்களம் அரச திணைக்களங்கள், அரச முகவர்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட நியதிச்சபைகள் என்பனவற்றின் வங்கிக் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியதுடன் அவற்றிற்குத் தேவையான வங்கித்தொழில் வசதிகளையும் வழங்கியது. 2007 திசெம்பர் இறுதியில் வங்கியினால் பேணப்பட்ட அத்தகைய கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 38ஆகக் காணப்பட்டது. இவ்வாண்டில் ஒரு கணக்கு திறக்கப்பட்ட வேளையில் அரசாங்கத்தின் கோரிக்கையினையடுத்து ஒரு கணக்கு மூடப்பட்டது. நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 89இன் நியதிகளில் வங்கியானது அரசாங்கத்திற்கு வட்டியில்லாமல் தொடர்ந்தும் முற்பணங்களை வழங்கியிருக்கிறது. அத்தகைய முற்பணங்கள் மீதான வரையறை (மதிப்பிடப்பட்ட அரசின் அரசிறையில் 10




வரைபடம் II - 3
எடுக்கப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி - 2007

சதவீதம்) 2007இல் ரூ.12.2 பில்லியனால் ரூ.62 பில்லியனுக்கு அதிகரித்தது.

### ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடு

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமூகமானதும், வினைத்திறன்மிக்கதுமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளை பிணையாகக் கொண்டு கட்டணமெதுவுமின்றி வழங்கப்படுகின்றது. அந்நாளில் விலைகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களை உள்ளடக்குவதற்குப் போதுமான இலாபம் ஒன்றிற்கேற்ப இப்பிணையங்கள் அவற்றின் நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்படுகின்றன.

இவ்வாண்டில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ.538.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,222 பில்லியனாக விளங்கியது. நாளொன்றிற்கு எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் சராசரிப் பெறுமதி ஏறத்தாழ ரூ.5.03 பில்லியனாக (வரைபடம் II-3) காணப்பட்டது. இவ்வாண்டில் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஒழுங்காக மீளச் செலுத்தப்பட்டது. வங்கி வீதத்தில் தண்ட வீதத்தினை விதித்தமை, திரும்பத் திரும்ப செலுத்தத் தவறுமிடத்து வசதியினை இடை நிறுத்துதல் மற்றும் ஏனைய வழிமுறைகளினூடாக லங்கா செட்டிலின் வியாபாரம் மூடப்படுவதற்கு முன்னதாக ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியினை மீளச் செலுத்துவது உறுதிப்படுத்தப்பட்டது.

## 07. பொருளாதார ஆராய்ச்சி

பொருளாதாரக் கொள்கைகளையும் வழிமுறைகளையும் வடிவமைத்து, நடைமுறைப்படுத்தி, நிறைவேற்றுவதன் மூலம் பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்ற அதேவேளையில் பொதுமக்களுக்கு தகவல்களைப் பரப்பும் நடவடிக்கையின் காரணமாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியில் "பொருளாதாரச் சிந்தனைகளின் கருவூலம்" ஆக அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வாண்டில், அதன் மிகமுக்கியமான பொறுப்பினை நிறைவேற்றும் விதத்தில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் கொள்கை சார்ந்த பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொண்ட அதேவேளையில், நாணயக் கொள்கை வடிவமைப்பிற்கும், நாணயக் கொள்கை தீர்மானங்களை வகுப்போருக்கும் நாணயச் சபை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முகாமைக்கும் வழிகாட்டுவதற்கு இன்றியமையாத உள்ளீடாக விளங்கும் பொருளாதார, சமூக புள்ளிவிபரங்களை சேகரித்துப் பகுப்பாய்வு செய்தும் வருகின்றது. இப்பகுப்பாய்வுகள் அறிவாற்றலை அதிகரிக்கக் கூடியனவாக இருந்ததுடன் சிறந்த கொள்கைப் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளும் விதத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பான விளக்கங்களை மேம்படுத்திக் கொள்ள உதவியாகவும் அமைந்தன. திணைக்களம், மத்திய வங்கியினால் நாணயக் கொள்கைத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வழிமுறைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்த வேளையில், இவ்வாண்டுக் காலத்தில் அரசாங்கத்தினால் தொடங்கப்பட்ட ஏனைய பல்வேறு முன் முயற்சிகளிலும் அதன் நிபுணத்துவத்தினை வழங்கியது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அரசாங்கத்திற்கும் ஆர்வலர்களுக்கும் பல்வேறு பொருளாதார விடயங்களில் கொள்கை மதியுரைகளை வழங்கியது. இத்திணைக்களம் பொதுமக்களின் நலன்கருதி பொருளாதார மற்றும் நிதியியல் தகவல்களை, முக்கியமாக நியதிச்சட்ட வெளியீடுகள், காலத்திற்கு காலம் இடம் பெறும் கிரமமான பத்திரிகை வெளியீடுகள் மற்றும் பத்திரிகைகளிலும் மத்திய வங்கியின் வெப்தளத்திலும் வெளியிடப்படுகின்ற வாராந்த, மாதாந்த குறிகாட்டிகள் பொருளாதார மற்றும் நிதியியல் தகவல்களைத் தொடர்ந்தும் பரப்பி வருகின்றது.

நாணயக் கொள்கையினை வடிவமைத்து நடைமுறைப் படுத்துவது, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளில் முக்கியமானதொரு விடயமாகும். மேலும், நாட்டின் பரந்த பேரண்ட பொருளாதார குறிக்கோள்களுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் பொருத்தமான கொள்கைகளை வடிவமைத்து நடைமுறைக்கிடுவதனை வசதிப்படுத்துவதற்காக ஏனைய உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அபிவிருத்திகள் மற்றும் கொள்கைக்களம் என்பன பகுப்பாய்வு செய்யப்பட்டன. இம்முயற்சிகள் குறிப்பாக நாணயக் கொள்கை குழுவின் ஆழ்ந்த சிந்தனைகளுக்கு வசதிப்படுத்தி வலுப்படுத்துவதில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மிக இன்றியமையாத பங்கினை செயற்படுத்துவதனை நோக்கி நெறிப்படுத்தப்பட்டது. நாணயக் கொள்கைக் குழுவின் கருத்துக்களையும் கரிசனைகளையும் ஒருங்கிணைத்ததன் பின்னர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட சபைப் பத்திரங்கள் நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், பொருளாதாரத்தின் நிலைக்கு செய்யப்படும் கிரமமான பூரணப்படுத்தல்களும் பொருளாதாரத்தின் அண்மைய அபிவிருத்திகளை நாணயச் சபைக்கு தெரியப்படுத்து வதற்காக சமர்ப்பிக்கப்பட்டன.

மேலும், சமகால முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களின் மீது பொருளாதார ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. அவற்றிடையே 2007இல் முடிவடைந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட

பின்வரும் ஆய்வுப் பத்திரங்கள் வங்கி உயர் அலுவலர் ஆய்வுகளில் மிக விரைவில் வெளியிடப்படவுள்ளன.

(அ) ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி! நாணயக் கொள்கையின் மீது இது தாக்கத்தினைக் கொண்டுள்ளதா? முனைவர் டி.எஸ். விஜேசிங்க

(ஆ) தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளில் பணத் தரகு வியாபாரத்தின் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நடைமுறைகள்: திருமதி. ரூபா தீரசிங்க

(இ) செலாவணிவீத அனுபவங்கள்: இலங்கையில் விலை மாற்றங்களை எந்தளவிற்கு பாதிக்கும் - செல்வி எஸ்.எம். விமலசூரியா

(ஈ) நாணயக் கொள்கையும் பணவீக்க செயலாற்றமும்: இலங்கையின் செலாவணிவீத அமைப்பிலிருந்தான சான்றுகள் - திரு. பி.கே.ஜி. ஹரிச்சந்திரா

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மத்திய வங்கியின் பகிரங்க கொள்கை அறிக்கையான "2007இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகளுக்கான வழிகாட்டல்கள்" (வழிகாட்டல் - 2007) இனை தயாரித்தது. இது 2007 சனவரி 2ஆம் நாளன்று ஆர்வலர்களுக்கு அறிவிக்கப்பட்டது. கொள்கை ஊகிப்புத் தன்மையினையும் ஒளிவுமறைவற்ற தன்மையினையும் உயர்த்தும் நோக்குடன் இது பொருளாதார செயலாற்றம் மற்றும் 2006 நாணயக் கொள்கையின் நடத்தை 2007இல் நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கை நடத்தை என்பன மீதான பகுப்பாய்வொன்றினை உள்ளடக்கியிருந்தது. இதே போன்றதொரு கொள்கை அறிக்கை 2008இற்கும் தயாரிக்கப்பட்டு 2008 சனவரி 2ஆம் நாளன்று அறிவிக்கப்பட்டது.

வழிகாட்டல் 2007இன்படி, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளிலிருந்து விலகிச் செல்வதனைக் குறைப்பதற்கும் ஏதாவது குறிப்பிடத்தக்க விலகல்கள் காணப்படுமிடத்து அவற்றைத் தவிர்ப்பதற்கு நேரகாலத்துடன் கொள்கை வழிமுறைகளை மேற்கொள்வதற்குமாக, பொருளாதாரத்தின் வெளிநாட்டு, இறை மற்றும் நாணயத் துறைகளிலுள்ள முக்கிய மாறிகளின் போக்கினைக் கண்காணிப்பதற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பேரண்டப் பொருளாதார மாறிகளின் கண்காணிப்புப் பொறியொன்றினை அறிமுகப்படுத்தியது. நிபுணர்கள் மற்றும் தனியார்துறை உறுப்பினர்களின் நிபுணத்துவம் மற்றும் நுண்ணறிவு என்பனவற்றினூடாக நாணயக் கொள்கை தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக 2007 வழிகாட்டலின் கீழ் நியமிக்கப்பட்ட நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவுடன் தொடர்பான வேலைகளையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இணைத்தது. இக்குழுவில் பேராசிரியர் ஏ.வி.டீ.எஸ். இந்திரரட்ன (தலைவர்), திரு. சோலி கப்டன், திரு. யோகான் பெரேரா, திரு. மகேன் தயானந்த மற்றும் கியுபி விஜயதுங்க உள்ளடக்கப்படுவதுடன் பொருளாதார அபிவிருத்தியை மீளாய்வு செய்வதற்கும் பணக் கொள்கைத் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டினை உயர்த்துவதற்கு பெறுமதி மிக்க பங்களிப்பினை செய்வதற்கும் என மாதாந்த அடிப்படையில் சந்தித்தனர். 2008ஆண்டுக் காலப்பகுதியிலும் அனுபவமிக்கவர்களிடமிருந்து நன்மையைப் பெற்றுக் கொள்வதற்கு 2008இல் மீண்டும் குழுவினர் நியமிக்கப்பட்டனர்.

அரசிற்கு செய்திறன் வாய்ந்த கொள்கை மதியுரையினை வழங்கும் விதத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் கொள்கைப் பத்திரங்கள் பலவற்றை நாணயச் சபைக்கு சமர்ப்பித்தது. மேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பொருளாதார மதியுரைச் சபையான தேசிய பொருளாதார சபைக்கு பத்திரங்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதிலும், விடயங்கள் பற்றி விளக்கவுரைகள் அளிப்பதிலும் திணைக்களம் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பாக சுதந்திரமான கருத்துக்களை வழங்குவதிலும் ஆராய்ச்சித் திணைக்களம் ஈடுபட்டிருந்தது. இது இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட புதிய பொறுப்பாகும். அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பாக மத்திய வங்கியினால் வழங்கப்படும் சுதந்திரமான கருத்துக்கள் நல்ல வரவேற்பினைப் பெற்றிருக்கின்றன. மேலும், பல்புடை மற்றும் இருபுடை அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தும் வர்த்தக மூலங்களிலிருந்தும் அரசாங்கத்தினால் பெறப்பட்ட அனைத்து வெளிநாட்டுக் கடன்களினதும் நியதிகளையும் நிபந்தனைகளையும் ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் மதிப்பீடு செய்தது. அத்தகைய கடன்களின் நாணயத் தாக்கங்களை பகுப்பாய்வு செய்கின்ற பல்வேறு சபைப்பத்திரங்கள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. பல்வேறுபட்ட பொருளாதார விடயங்களை பற்றி காலத்திற்குக் காலம் பாராளுமன்ற உறுப்பினர்களினால் எழுப்பப்படும் வினாக்களுக்கும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பதிலிறுத்தது.

இவ்வாண்டில், பொருளாதார முன்னேற்றங்களை மேம்படுத்துவதற்காக நாட்டின் உள்ளார்ந்த வளம் மீதான பல்வேறு பகுப்பாய்வுகளையும் சமர்ப்பிப்பதன் மூலம் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மற்றைய பல நிறுவனங்களுடனும் ஒன்றுக்கொன்று ஆதாரமாய் செயற்பட்டது. இது, இலங்கையிலும் தொடர்பான பகுதிகளிலும் எண்ணெய் கண்டறிதல் மீதான பகுப்பாய்வுகளையும், நாட்டின் மீன்பிடித்துறையின் அபிவிருத்திக்கான வளர்ச்சியை தூண்டும் ஒரு வழியாக சிறப்பு பொருளாதார வலயமொன்றினை மேம்படுத்துதல் என்பனவற்றினையும் உள்ளடக்கியிருந்தன. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது எண்ணெய் விலைத் தளம்பலினால் ஏற்படும் எதிர்மறையான விளைவினைக் குறைப்பதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்ப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முக்கிய பங்கை ஆற்றியது. அத்துடன் மத்திய வங்கியாலும் நிதியியல் சபையாலும் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்ட "சமநிலையான பிராந்திய அபிவிருத்தி" கருத்தரங்கை ஒழுங்கமைப்பதிலும் முனைப்புடன் ஈடுபட்டது.

திணைக்களத்தின் அலுவலர்கள் பொருளாதார விடயங்கள் மீது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுக்களிலும் ஏனைய பல்வேறு உள்ளக மற்றும் வெளிக் குழுக்களிலும் சபைகளிலும் தமது பணிகளை வழங்கியுள்ளனர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் அனைத்தையு முள்ளடக்கிய இலங்கை இந்திய பொருளாதார பங்குடமை உடன்படிக்கையின் கீழ், நிதியியல் பணிகள் தொடர்பான துணைக்குழுவின் பேச்சு வார்த்தைகளில் பங்கேற்றனர். அவர்கள் வங்கித்தொழில் கற்கைளுக்கான நிலையத்தினாலும் ஏனைய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களினாலும்

நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் மூலவள ஆட்களாக பணியாற்றியுள்ளனர். பட்டபின் படிப்பிற்கு செல்லவிழையும் வங்கி அலுவலர்களுக்கு அவர்களின் ஆராய்ச்சி வேலை தொடர்பாக வழிநடத்துவதன் மூலமும் அவர்களது ஆராய்ச்சிப் பத்திரங்களை மதிப்பிடுவதன் மூலமும் எமது அலுவலர்கள் உதவிகளை வழங்கினர். அலுவலர்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட, நடைமுறை விடயங்களின் மீது குறிப்பாக க.பொ.த. உயர்தர மாணவர்களின் நன்மை கருதி வங்கித்தொழில் ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட கல்விசார்ந்த தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றனர். விழிப்புணர்வுகளை மேம்படுத்துவதற்கும் இலங்கைப் பொருளாதாரம் தொடர்பான தவறான கருது கோள்களைத் தெரிவுபடுத்துவதற்குமாக பாராளுமன்ற உறுப்பினர்கள், இராச தந்திரிகள், ஊடகங்கள், அரச அலுவலர்கள், முதலீட்டாளர்கள், வெளிநாட்டுத் தரப்பினர் மற்றும் பொதுமக்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறு ஆர்வலர்களுக்கும் நன்கு தயாரிக்கப்பட்ட விளக்கங்களுடன் கூடிய விரிவுரைகள் ஆற்றப்பட்டன.

2007 ஒத்தோபரில் வெற்றிகரமாக நிறைவடைந்த, அரசாங்கத்தின் முதலாவது பன்னாட்டு முறிவழங்கலுக்கும் திணைக்களம், குறிப்பிடத்தக்களவில் பங்களித்தது. குறிப்பாக முறிவழங்கலுடன் தொடர்பான முன் வைக்கும் ஆவணங்களையும் வழிகாட்டல் விளக்க விரிவுரைகளையும் தயாரிப்பதில் ஆராய்ச்சித் திணைக்களம் பங்களித்துள்ள அதேவேளையில் வெளிநாட்டில் இடம் பெற்ற ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட இலங்கைப் பேராளர் குழுவிலும் ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பிரதிநிதித்துவம் பெற்றனர்.

நியதி அறிக்கைகளை மூன்று மொழிகளிலும் தயாரித்து வெளியிடுவது முக்கியமானதொரு பொறுப்பாக ஆராய்ச்சித் திணைக்களத்தினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய, 2006இற்கான ஆண்டறிக்கை, அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் - 2007ஆம் ஆண்டிற்கான முக்கிய பண்புகளும், 2008ஆம் ஆண்டிற்கான வாய்ப்புக்களும், 12 மாதாந்த செய்தித்திரட்டுக்களுக்கான வேலைகளும் ஆராய்ச்சித் திணைக்களத்தினால் இணைக்கப்பட்டன. மேலும், பொருளாதாரத்தின் பிந்திய அபிவிருத்திகள் தொடர்பாக முதலீட்டாளர்களின் விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்காக "அண்மைய பொருளாதார அபிவிருத்திகளும் கொடுகடன் போக்குகளும்" என்ற தலைப்பில் இன்னொரு அறிக்கையை வெளியிட்டது. நாணய சட்ட விதியின் ஏற்பாடுகளின் கீழ் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தினை தயாரிப்பதற்கு முன்னதாக நிதியமைச்சிற்கு வங்கியினால் சமர்ப்பிக்கப்படுகின்ற இரகசிய அறிக்கையான செத்தெம்பர் 15ஆம் நாள் அறிக்கையினைத் தயாரிப்பதற்கும் திணைக்களமே பொறுப்பாக இருந்தது. 2007இல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாணயக் கொள்கை மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் என்பன மீது மாதாந்த அடிப்படையில் இரண்டு கிரமமான பத்திரிகை வெளியீடுகளையம் சென்மதி நிலுவை மீதான காலாண்டு பத்திரிகை வெளியீடுகளையும், வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகளையும் வெளியிட்டமையின் மூலம் தகவல் பரப்பும் பொறுப்பாண்மையினையும் மேலும் நிறைவேற்றியது. மேலும், பல்வேறுபட்ட பொருளாதார அபிவிருத்திகளையம் வெளியீடுகளையும் விளக்குவதற்காகவும் தெளிவுபடுத்தவதற்காகவும் காலத்திற்குக் காலம் பத்திரிகை வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது மத்திய வங்கி மற்றும் அரசின் சார்பில் தொடர்ந்தும் பன்னாட்டு அமைப்புக்களுடனான உறவு முறைகளை மேம்படுத்தி வருகின்றது. இதன்படி, வருடாந்த ப.நா.நிதிய உறுப்புரை IV ஆலோசனைக் கூட்டங்கள், அரசுகளுக்கிடையிலான இருபத்து நான்கு குழுமம், ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிலையம் மற்றும் "சியென்சா" குழுமம் என்பனவற்றுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு வேலைகளை மத்திய வங்கி மேற்கொண்டது. இது பிட்ச்றேட்டிங் மற்றும் எஸ் அன்ட் பி ரேட்டிங் சேர்விஸ் போன்ற பன்னாட்டு தரமிடல் முகவர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றியது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, பல்புடை மற்றும் இருபுடை அபிவிருத்தி பங்காளர்களை ஒருங்கிணைக்கும் செயற்பாட்டில் நிதித்திட்டமிடல் அமைச்சிற்கும் உதவிகள் வழங்கப்பட்டன.

## 8. ஊழியர் சேமநிதியம்

ஊழியர் சேம நிதியத்தின் தொழிற்பாடுகள், ஊழிய சேம நியதிச் சட்ட நியதிகளின் கீழ் நாணயச்சபை தனது அதிகாரங்கள் கடமைகள் மற்றும் செயற்பாடுகளைச் செய்வதற்கு வசதிப்படுத்தியது. சட்ட நியதிகளின்படி நாணயச் சபையானது, உதவுதொகை, மேலதிக விதிப்புக்களை சேகரித்தல், உறுப்பினர்களின் கணக்குகளைப் பேணுதல், மேலதிக நிதியை முதலீடு செய்தல், சட்டத்தின் கீழ் தொழில் ஆணையாளர் மற்றும் நாணயச்சபை என்பன தங்களுடைய கடமைகளையும் தொழிற்பாடுகளையும் ஆற்றும் போது ஏற்படக்கூடிய செலவுகளுக்கான வருமான நிதியத்தைப் பெறுதல், நிதியத்தின் நன்மை பெறுநர்களுக்கு நன்மைகளை செலுத்துதல் மற்றும் நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் திரட்டுதல் மற்றும் அவற்றை மாண்புமிகு தொழில் அமைச்சருக்கு ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் முடிந்து மூன்று மாதங்களுக்குள் ஒப்படைத்தல் ஆகியவற்றைப் பிரதானமாக உள்ளடக்கிய நிதியத்தின் முகாமை தொடர்பான ஆற்றல்கள், கடமைகள் மற்றும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள நாணயச் சபையானது ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளராக

அட்டவணை II - 1

நிதியின் அடிப்படை தகவல்கள்

| விடயம் | 2006 | 2007 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| 1. உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை'000 | 11,326 | 11,850* | 4.6 |
| 1.1 உதவுதொகை செலுத்தும் உறுப்பினர் கணக்குகள் '000 | 2,073 | 2,147* | 3.5 |
| 1.2 உதவுதொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் '000 | 9,252 | 9,703* | 4.9 |
| 2. உதவி தொகை செலுத்தம் தொழில் தருனர் | 57,996 | 60,496 | 4.3 |
| 3. மொத்த உதவு தொகைகள் (ரூ.மில்.) | 34,933 | 40,574 | 16.1 |
| 4. மொத்த மீளளிப்புக்கள் (ரூ.மில்.) | 17,448 | 21,752 | 24.7 |
| 5. மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 97,620 | 97,936 | 0.3 |
| 6. மொத்த உறுப்பினர் நிலுவைகள் (ரூ.மில்.) | 477.6 | 546.4 | 14.4 |
| 7. நிதியத்தின் மொத்தப் பெறுமதி | 490.4 | 560.4 | 14.3 |

* மதிப்பிடப்பட்டவை

மூலம்: ஊழியர் சேம நிதியம்

விளங்குகிறது. திணைக்களமானது மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை நாணயச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கை நியதிகளின் பிரகாரமும், தொழில் ஆணையாளரின் நெருங்கிய ஒத்துழைப்புடனும் 2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொண்டது.

## 8.1 உறுப்பினர், உறுப்பினர் நிலுவைகள் மற்றும் மீளளித்தல்

2007இன் இறுதியில் நிதி (உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு) ரூ.546.4 பில்லியனாக காணப்பட்டு 2006இல் இருந்த அதன் ரூ.477.6 பில்லியன் மட்டத்திலிருந்து (அட்டவணை II - 1 பார்க்க) 14 சதவீதம் அல்லது ரூ.68.8 பில்லியன் அதிகரிப்பைப் பதிவு செய்தது. இந்த நிதியின் வளர்ச்சியானது இந்த வருடத்தில் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பினாலும் அவர்களின் பங்களிப்பு அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும். மொத்த உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை 11.9 மில்லியனாக அதிகரித்ததோடு இது ஏறத்தாழ 2.1 மில்லியன் பங்களிப்பு உறுப்பினர் கணக்குகளைக் கொண்டிருந்தது. அதேநேரம் தேறிய பங்களிப்புக்கள், அதாவது பயனாளர்களுக்கான மீள்செலுத்தல்களைக் கழித்து வரும் பங்களிப்புகளினை பெறுமதியானது முன்னைய வருடத்தின் ரூ.17.5 பில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தில் ரூ.18.8 பில்லியன் அதிகரிப்பைப் பதிவு செய்தது. பயனாளர்களுக்கான மீள்செலுத்தல்கள் இந்த வருடத்தில் ரூ.21.7 பில்லியனாகவிருந்து 24.7 சதவீத அதிகரிப்பைக் காட்டிய அதேவேளையில் மீள்செலுத்தல்களின் எண்ணிக்கை சிறிதளவால் மட்டுமே அதிகரித்தது.

## 8.2 நிதிகளின் முதலீடுகளும் வருமானமும்

**அ. முதலீட்டுச் சொத்துப்பட்டியல்:** நிதியானது ஓய்வூதிய நன்மைத் திட்டமாக இருந்த காரணத்தால் நிதிகளின் முதலீட்டு உபாயமானது பிரதானமாக நிதிப் பாதுகாப்புடன் கூடிய நீண்டகால வளர்ச்சியை உறுதிப்படுத்துவதாக இருந்தது. எனவே, முன்னைய ஆண்டுகளைப் போலவே முதலீடுகள் கூடிய பாதுகாப்புப் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்டன. 2007ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த முதலீட்டு சொத்துப்பட்டியல் 2006இன் இறுதியிலிருந்த ரூ.472

**அட்டவணை II - 2**
**முதலீட்டுச் சொத்துப்பட்டியல்**

| முதலீட்டின் வகை | 2006 (ரூ. பில்.) | பங்கு% | 2007 (ரூ. பில்.) | பங்கு% |
|---|---|---|---|---|
| திறைசேரி முறிகள், உண்டியல்கள் | 401.1 | 85.0 | 447.0 | 83.6 |
| அரசிற்கான ரூபாக் கடன்கள் | 56.1 | 11.9 | 68.9 | 12.9 |
| கம்பனி தொகுதிக்கடன்கள் | 7.0 | 1.5 | 7.9 | 1.5 |
| உரிமை முதல் | 3.6 | 0.8 | 6.7 | 1.2 |
| மீள்கொள்வனவுகள் மற்றும் ஏனையவை | 4.0 | 0.8 | 4.3 | 0.8 |
| **மொத்தம்** | **471.8** | **100.00** | **534.8** | **100.0** |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

பில்லியனிலிருந்து ரூ.535 பில்லியனாக 13.3 சதவீதம் இனால் வளர்ச்சியடைந்தது (அட்டவணை II-2). முன்னைய ஆண்டுகளைப் போலவே முதலீட்டுச் சொத்துப் பட்டியலானது பிரதானமாக அரச பிணையங்களில் பேணப்பட்டது (96.5 சதவீதம்) நிதியியல் முதலீட்டுக் கொள்கையுடன் இணைந்து செல்லத்தக்க வகையில் கம்பனித் தொகுதிக் கடன்கள் மற்றும் உரிமை மூலதனத்தின் மீதான முதலீடுகள் 2.7 சதவீதம் ஆக இருந்தன. திரவத்தன்மை தேவைகளுக்காக மீள்கொள்வனவுகள் (0.8 சதவீதம்) போன்ற உயர்ந்த திரவத்தன்மைச் சொத்துக்களிலும் முதலீடுகள் விரும்பிய மட்டத்தில் பேணப்பட்டன.

**ஆ. வருமானம்:** முதலீடுகள் மீதான மொத்த வருமானம் 2006இன் ரூ.46.3 பில்லியனிலிருந்து 2007இல் ரூ.59.4 பில்லியனாக 28 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது (அட்டவணை II -3 இனைப் பார்க்கவும்). கடந்த காலத்தைப் போலவே கடன்

**அட்டவணை II - 3**
**முதலீட்டு மீதான வருமானம்**

| முதலீட்டின் வகை | 2006 (ரூ. மில்.) | பங்கு% | 2007 (ரூ. மில்.) | பங்கு% |
|---|---|---|---|---|
| வட்டி | 44,104 | 95.1 | 49,885 | 84.0 |
| பங்கு இலாபம் | 120 | 0.3 | 146 | 0.2 |
| மூலதன இலாபம் | 1,017 | 2.1 | 288 | 0.5 |
| கடன் தீர்ப்பனவு இலாபம்(தேறிய) | 1,073 | 2.3 | 8,944 | 15.0 |
| | 77 | 0.2 | 158 | 0.3 |
| ஏனையவை | | | | |
| **மொத்தம்** | 46,391 | 100.0 | 59,422 | 100.0 |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

தீர்ப்பனவு இலாபத்தை உள்ளடக்கிய வட்டி வருமானம், நிதியத்தின் பாரிய வருமான மூலமாகக் காணப்பட்டது. வட்டி வருமானமானது 2006 இன் ரூ.45.2 பில்லியனிலிருந்து 2007இல் ரூ.59.3 பில்லியனுக்கு ரூ.14.2 பில்லியனால் வளர்ச்சியடைந்தது. சராசரி வட்டி உழைக்கும் சொத்துப் பட்டியல் மீதான வட்டி வருமானம், சந்தை வட்டி வீதங்களில் காணப்பட்ட உயர்ந்து செல்லும் போக்கிற்கிசைவாக 2006இன் 11 சதவீதத்திலிருந்து 2007இல் 12.6 சதவீதமாக அதிகரித்தது. இருந்த போதிலும் மூலதன இலாபம் மற்றும் பங்கிலாபத்தினூடான உரிமை மூலதனச் சொத்துப்பட்டியல் மீது பெறப்பட்ட வருமானம், மந்தமான சந்தை நிலைமைகள் காரணமாக 2006இன் ரூ.440 மில்லியனிலிருந்து 2007இல் ரூ.429 மில்லியனாக சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. சராசரி உரிமை மூலதன சொத்துப்பட்டியல் மீதான வருமான வீதம் 2006இன் 13 சதவீதத்திற்கெதிராக 8.3 சதவீதமாக இருந்தது. சராசரி முதலீட்டுச் சொத்துப்பட்டியல்

**அட்டவணை II - 4**
**தொழிற்பாட்டுச் செலவினங்கள்**

(ரூ.மில்லியன்)

| செலவின விடயம் | 2006 | 2007 | % மாற்றம் |
|---|---|---|---|
| 1. ஆளணிச் செலவினங்கள் | 259.9 | 318.2 | 22.4 |
| 2. நிர்வாகச் செலவினங்கள் | 159.0 | 211.0 | 32.7 |
| 3. நிதியியல் செலவினங்கள் | 6.2 | 16.9 | 172.6 |
| 4. மொத்த செலவுகள் | 425.1 | 546.1 | 28.5 |
| 5. மொத்த அரசிறையின் % மொத்தச் செலவினங்கள் | 0.92 | 0.90 | -0.02 |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

மீதான ஒட்டு மொத்த வருமான வீதம் 2007இல் 12.7 சதவீதத்திற்கு அதிகரித்து 2006ஆம் ஆண்டின் வருமான வீதமான 11.3 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 1.4 சதவீதப் புள்ளி அதிகரிப்பைப் பிரதிபலித்தது.

**இ. செலவினங்கள்:** செலவினமானது 2006இன் ரூ.425 மில்லியனிலிருந்து 2007இல் ரூ.546 மில்லியனாக 28.5 சதவீதத்தால் அதிகரித்த போதிலும் நிதியின் மொத்த தொழிற்பாட்டுச் செலவினமானது மொத்த வருமானத்தின் 1 சதவீதத்திற்குக் கீழாகப் பேணப்பட்டது. (அட்டவணை II-4 ஐப் பார்க்க)

**அட்டவணை II - 5**
**உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள்**

(ரூ.மில்லியன்)

| விடயம் | 2006 | 2007 | % மாற்றம் |
|---|---|---|---|
| 1. **மொத்த அரசிறை** | **46,391** | **59,422** | **28.1** |
| 2. மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள் | 425 | 546 | 28.5 |
| 3. வருமான வரி | 2,761 | 4,451 | 61.2 |
| 4. பங்கீட்டுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் | 47,710 | 54,612 | 14.5 |
| 5. தேறிய வருமானப் பங்கீடுகள் | | | |
| 5.1 ஒதுக்கங்களுக்கு மாற்றல் | 3,100 | - | |
| 5.2 நடைமுறை மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி | 622 | 879 | 41.3 |
| 5.3 உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி | 43,786 | 53,515 | 26.2 |
| 5.4 முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 201 | 218 | 8.1 |
| 6. ஒதுக்குகளிலிருந்து உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி | - | 1,725 | |
| 7. உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி | 10.10 | 11.20 | 1.10 |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

2007ஆம் ஆண்டில் மொத்த வருமானத்தில் நிதியத்தின் மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள் (ரூ.13.1 மில்லியன் பெறுமதியான மீள் பதிவு செயற்றிட்டத்தின் மீதான செலவினம் நீங்கலாக) 2006ஆம் ஆண்டின் 0.92 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 0.90 சதவீதமாக இருந்தது.

## 8.3 உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி கொடுப்பனவுகள்

2007இல் நிதியத்தின் உறுப்பினர்களுக்கு வட்டியாக வழங்குவதற்காக ரூ.55,240 மில்லியன் பெறுமதியான தொகை கிடைக்கத்தக்கதாகவிருந்தது (அட்டவணை II-5 இனைப் பார்க்கவும்). இதன் விளைவாக உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள், மொத்த உறுப்பினர் நிலுவையில் (2007 இறுதியில் ரூ.493,211 மில்லியன் பெறுமதியானதாக இருந்தது) 11.2 சதவீதமாக இருந்ததோடு இது முன்னைய ஆண்டின் 10.10 சதவீதத்தினைவிட 1.1 சதவீதம் அதிகமானதாகும். எனினும், ஆண்டின் இறுதியிலுள்ள நிலுவையின் மீது ஆண்டு முழுவதற்குமாக வட்டி செலுத்தும் நடைமுறையினை கருத்திற் கொள்கையில் 2007இற்கான பயன்தரு வட்டிவீதம்[1] 11.40 சதவீதமென மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த தசாப்தத்தில் உறுப்பினர் கணக்கு நிலுவை மீதான சராசரியான உண்மை வட்டி வீதம் (உறுப்பினர் நிலுவைகள் மீதான சராசரி பயனுறுதி வட்டி வீதத்திலிருந்து கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பில் ஆண்டுச் சராசரி வீதத்தினால் அளவிடப்பட்டவாறான நிலவிய பணவீக்க வீதத்தைக் கழித்து வரும் பெறுமதி) ஏறத்தாழ 1.25 சதவீதமாக இருந்தது.

## 8.4 உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள்

2006இன் இரண்டாம் அரையாண்டுக்கான உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் அவர்களின் தொழில்தருநர்களின் ஊடாக 2007 செப்தெம்பரில் வழங்கப்பட்டுள்ளன. 2007இன் முதல் அரையாண்டு காலத்திற்கான உறுப்பினர் கணக்குகளை 2008 யூன் இறுதியில் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

1 பயன்தரு வட்டிவீதம் = (உறுப்பினர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட வட்டி)/ ஆண்டின் தொடக்கத்தில் உறுப்பினர் நிலுவைகள் + ஆண்டு இறுதி உறுப்பினர் நிலுவைகள்) / 2

**அட்டவணை II - 6**
**வீடமைப்புக் கடன் வசதிகள் பற்றிய விபரங்கள்**

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் | கடன் வழங்கிய நிறுவனங்களுக்கு ஊ.சே. நிதியம் செலுத்திய தொகை |
|---|---|---|---|
| 2003 | 18,689 | 2,792 | 670 |
| 2004 | 14,307 | 2,452 | 735 |
| 2005 | 14,600 | 2,766 | 900 |
| 2006 | 15,136 | 3,049 | 1,078 |
| 2007 | 12,969 | 2,872 | 1,240 |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

## 8.5 வீடமைப்புக் கடன் வசதிகள்

1998ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டமானது இந்த ஆண்டிலும் தொடர்ந்தது. இதன்படி, ஊழியர் சேம நிதியம் ரூ.2,872 மில்லியன் பெறுமதியான ஒப்புதலளிக்கப்பட்ட வீடமைப்புக் கடனிற்கான நிலுவை சான்றிதழ்களை 12,969 உறுப்பினர்களின் சார்பில் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கியது (அட்டவணை II-6). அதேநேரம் நிலுவையிலிருந்து உயர்ந்த வீதக் கடன்களின் விளைவாக, 2006ஆம் ஆண்டில் செலுத்தப்படாதிருந்த ஏறத்தாழ ரூ.1,078 மில்லியன் பெறுமதியான தொகையானது உரிய உறுப்பினர் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டு முதல் தொகையையும், நிலுவை வட்டியையும் தீர்ப்பதற்காக கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு 2007இல் செலுத்தப்பட்டது.

## 8.6 பொதுமக்கள் விழிப்புணர்வு

இந்த ஆண்டில், நிதியத்தின் தொழிற்பாடுகள் மீதான பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்தும் நடவடிக்கையை திணைக்களம் தொடர்ந்தது. இரண்டு நடமாடும் பணிகள் (இரத்மலானையில் நீர் வழங்கல் சபை மற்றும் நீர்கொழும்பில் ஹோட்டல் துறை தொழில்தருநர்கள்), தொழில்தருநர்களுக்கான இரண்டு கருத்தரங்குகள் (நுவரெலியா மற்றும் கேகாலை), மற்றும் மூன்று கண்காட்சிகளின் பங்குபற்றலும் (தேசத்தின் மகுடம் எனப்படும் டயட்ட கிருள, நுவரெலியா) மற்றும் ஆளணி முகாமைத்துவ நிறுவனத்தினால் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட மனிதவள முகாமையாளர்கள் மாநாடு என்பன 2007இல் நடைபெற்றன. அதேவேளையில் அரையாண்டு உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள், தற்போதைய உறுப்பினர்களை மீள்பதிவு செய்வதற்கான செயற்றிட்டம் மற்றும் நிதியத்தின் வருடாந்த நிதியியல் கூற்றுக்கள் தொடர்பாக உறுப்பினர்களுக்கு அறிவிப்பதற்காக பல பத்திரிகை விளம்பரங்களும் வெளியிடப்பட்டன.

## 8.7 கணனி முறைமையினை மேம்படுத்தல்

கணக்கீடு, முதலீடு, கொள்வனவு மற்றும் மூலப்பொருள் மற்றும் முகாமைத்துவம், வரவுசெலவுத் திட்டமிடுதல் மற்றும் வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக 2006ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கீடு மற்றும் முதலீட்டுப் பொதியின் நடைமுறைப்படுத்தலானது 2007இலும் தொடர்ந்தது. திணைக்களமானது மேலும் உறுப்பினர்களது தேசிய அடையாள அட்டையிலுள்ளவாறான அவர்களது பெயர்களை பதிதல், அவர்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை

அவர்களது கணக்கு இலக்கமாக இடுவதன் மூலமும் அவர்களுக்கு முன்னர் ஏதாவது உறுப்பினர் கணக்குகள் இருப்பின் அவற்றை இணைப்பதன் மூலமும் உறுப்பினர்களை மீள்பதிவு செய்வதற்கான இணைந்த செயற்றிட்டத்தை 2007 ஒத்தோபரில் நடத்துவதற்கு தொழில் திணைக்களத்திற்கு வசதியளித்தது. மீள்பதிவு செயற்றிட்டத்தின் குறிக்கோள் 2008 இறுதியிலிருந்து தற்போது நடைமுறையிலுள்ள "தொழில்தருநர் மையப்படுத்தும் முறைமை" இலிருந்து "உறுப்பினர் மையப்படுத்தும் முறைமை" க்கு (உறுப்பினர்களுக்கான தனியான இலக்கம் முறைமையை நடைமுறைப்படுத்தல்) மாற்றுவதாகும். உறுப்பினர்களுக்கு சிறப்பான பணிகளை வழங்கும் நோக்கில், திணைக்களமானது மனிதவலு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உறுதிப்படுத்தியதன் மூலம் உதவிப்பீடத்திலும் விசாரணைப் பீடத்திலும் வழங்கப்பட்ட சேவைகளை முன்னேற்றியது. திணைக்களமானது இலத்திரனியல் ரீதியாக உறுப்பினர் உதவுதொகை தொடர்பான ஊழியர் சேம நிதியத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டை மேம்படுத்துவதை 2007இலும் தொடர்ந்தது. இதன் விளைவாக, இம்முறைமையில் 76 புதிய தொழில்தருநர்கள் இணைந்ததுடன், தொழில்தருநர்களின் மொத்த எண்ணிக்கை 2006இன் 264 இலிருந்து 2007இல் 340 ஆக அதிகரித்தது.

## 9. செலாவணிக் கட்டுப்பாடு

திருத்தப்பட்டவாறான 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிப்பதில் அரசாங்கத்தின் முகவரான இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடுகளை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய 2007ஆம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நடவடிக்கைகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் ஏனையோருக்கும் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான ஒப்புதல்களை வழங்குதல், பல்வேறுபட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை கண்காணித்தல் மற்றும் செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது தொடர்பான புலனாய்வுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### 9.1 புதிய பணிப்புரைகளை / தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்குதல்

2007இல் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்) மற்றும் ஏனைய தரப்பினருக்கும் பல்வேறு புதிய பணிப்புரைகளை/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்கியது. அத்தகைய பணிப்புரைகள்/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் தொகுப்பொன்று கீழே தரப்படுகிறது. இப்பணிப்புரைகள்/ அறிவுறுத்தல்களின் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன.

**(அ) வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு மூன்றாம் தரப்பினரின் வைப்புக்களை அனுமதித்தல்:** வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும், கொடுக்கல் வாங்கல் ஒன்றின் போது ஐ.அ.டொலர் 1,000 அல்லது அதற்குச் சமமான மாற்றத்தக்க மற்றைய வெளிநாட்டு நாணயங்கள் என்ற வரையறைக்குட்பட்ட விதத்தில், வதிவற்றோர் வெளிநாட்டு நாணய கணக்கு வைத்திருப்பவர்களின் உடனடி குடும்ப உறுப்பினர்களிடமிருந்து, வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு மூன்றாம் தரப்பு வெளிநாட்டு நாணய வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். உள்முகப் பணவனுப்பல்களை வங்கித்தொழில் முறைக்கூடாக மேம்படுத்துவதற்காகவே இவ்வசதி அறிமுகப்படுத்தப்பட்டது.

**(ஆ) இரட்டைப் பிரசா உரிமை விண்ணப்பதாரர்களுக்கான நிலையான வைப்புக்கள்:** இரட்டை பிரசா உரிமைக்கு விண்ணப்பிப்பவர் தமது குடும்ப உறுப்பினர்களுக்கு இரட்டை பிரசா உரிமையை வழங்குவதன் பேரில் அரசாங்கத்திற்கு எந்த ஒரு கட்டணத்தையும் செலுத்துவதிலிருந்து விலக்கு பெறுவதற்காக வைப்புக்கள் ஐ.அ.டொலர் 50,000 அல்லது அதற்குச் சமமான மற்றைய மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயங்களுக்கும் குறையாததாக குறைந்த பட்சம் 3 ஆண்டு காலப்பகுதிக்கு பேணப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்குகளைத் திறப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

**(இ) பயணப் படிகளின் கூறில் வெளிநாட்டு நாணயத் தாள்களின் அதிகரிப்பு:** வெளிநாட்டிற்கு பயணம் செய்யும் இலங்கையர்களுக்கான பயணப்படியின் ஒரு பகுதியாக வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குவது ஐ.அ.டொலர் 500 என்ற அளவிலிருந்து ஐ.அ.டொலர் 1,000 இற்கு அதிகரிக்கப்பட்டமைக்கு, வெளிநாடுகள் சிலவற்றில் பயணிகள் காசோலையினையை மாற்றுவதில் எதிர் நோக்கிய இடர்பாடுகளை குறைப்பதே முக்கிய காரணமாகும்.

**(ஈ) நாணமாற்றுநர்களால் வழங்கப்படும் வெளிநாட்டு நாணயத்தாள்கள்:** குறைந்த பட்சம் ஐ.அ.டொலர் 4.0 மில்லியன் வருடாந்த மொத்தப் புரள்வினை தனித்தனியாகப் பதிவு செய்த ஒன்பது நாணயமாற்றுநர்கள், வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் இலங்கையர்களுக்கு கொடுக்கல் வாங்கலொன்றின் போது ஐ.அ.டொலர் 1,000 அல்லது அதற்குச் சமமான மாற்றத்தக்க நாணயத்தினை வழங்கலாம் என்ற வரையறைக்குட்பட்டு, வெளிநாட்டு நாணயத்தாள்களை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

**(உ) ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் முதலீடு செய்வதற்கான அனுமதி:** இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாடுகளின் நிதியங்கள், பிராந்திய நிதிகள், அல்லது இருவாயினொத்த நிதியங்கள் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள் மற்றும் வெளிநாடுகளின் பிரசைகள் ஆகியோர்

ரூபா நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளை, குறிப்பிட்ட எந்த ஒரு நேரத்திலும் வெளிநிற்கும் திறைசேரி முறிகளின் மொத்த பெறுமதியில் 10 சதவீத அளவினை கொள்வனவு செய்யவும் வைத்திருக்கவும் அனுமதிக்கப்பட்டனர்.

(ஊ) **இலங்கைச் சுங்கத்தில் வெளிநாட்டு நாணயத்திற்கான வெளிப்படுத்தல் வரையறைகள்:**

- ஆளொருவரால் வெளிநாட்டு நாணயங்கள் தொடர்பாக இலங்கைச் சுங்கத்திற்கு வெளிப்படுத்த வேண்டிய வரையறை (இலங்கைக்கு கொண்டு வருதல்) ஐ.அ.டொலர் 10,000 என்ற மட்டத்திலிருந்து ஐ.அ.டொலர் 15,000 அல்லது மாற்றத்தக்க வேறு வெளிநாட்டு நாணயத்திற்கு சமமான தொகைக்கு அதிகரிக்கப்பட்டது.
- ஆளொருவர் ஐ.அ.டொலர் 5,000 இற்கு கூடுதலான தொகையினை வெளிநாட்டு நாணயத்தாள்களாக எடுத்துச் செல்லும் நோக்குடன் வெளிநாட்டு நாணயத்தாள்களை இலங்கைக்கு எடுத்து வருவாராயின் அவ்வாள் அவரால் கொண்டு வரப்பட்ட அனைத்து வெளிநாட்டு நாணயத் தாள்களையும் சுங்கத்திற்கு வெளிப்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்ளப் படுகின்றார்.
- இலங்கையில் வதியும் ஆளொருவரினால் சுங்கத்திற்கு வெளிப்படுத்தாமல் எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி ஐ.அ. டொலர் 10,000 ஆக அல்லது அதற்குச் சமமான வேறு மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்திற்குச் சமமான தொகைக்கு நிர்ணயிக்கப்பட்டது. எனினும், வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி ஐ.அ.டொலர் 5,000 இனை அல்லது அதற்குச் சமமான வேறு மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சுமாயின் அவர்/ அவள் இலங்கைச் சுங்கத்திற்கு அதனை வெளிப்படுத்தல் வேண்டும்.

(எ) **வதியும் விருந்தினருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்:** வதியும் விருந்தினர் திட்டத்தின் கீழ் விசாவைப் பெற்றுக் கொண்ட வெளிநாட்டவர்களுக்கு இரு புதிய வெளிநாட்டு நாணயக் கணக்கு திட்டங்களான வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்குத் திட்டம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்கு முக்கியமாக நாட்டிற்கு நேரடியாக முதலீட்டு நிதியினை வழிப்படுத்துகின்ற வேளையில் வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக்கணக்கு, குடும்ப பராமரிப்பதற்காக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட நிதியிலிருந்து வதியும் விருந்தினரின் குடும்ப உறுப்பினர்களினால் ஏற்படக்கூடிய செலவுகளை பூர்த்தி செய்யும் ஒன்றாக இருக்கும்.

### 9.2 வெளிநாட்டு முதலீடுகளுக்கும் வெளிநாட்டுக் கடன்பாடு களுக்குமான ஒப்புதல்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டுக் கடன்பாடு என்பனவற்றின் ஒப்புதலுக்கான கோரிக்கைகளை ஆராய்ந்ததுடன், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாட்டு நியதிகளின் கீழ் கீழே காட்டப்பட்டுள்ள 47 கோரிக்கைகளுக்கு ஒப்புதலை வழங்கியது.

அ) ஐ.அ.டொலர் 145.1 மில்லியன் தொகையினை சுற்றுலா விடுதி மற்றும் சுற்றுலா, செலாவணி இல்லங்களை நிறுவுதல், வர்த்தகம் மற்றும் கப்பற்படுத்தல் மற்றும் ஊழியர் பங்குத் தேர்வுத் திட்டங்கள் போன்ற துறைகளில் முக்கியமாக முதலீடு செய்வதற்காக 30 வதியும் கம்பனிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஆ) வெளிநாட்டிலிருந்து ஏறத்தாள ஐ.அ.டொலர் 126.1 மில்லியனை கடன்படுவதற்காக 17 வதியும் கம்பனிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

### 9.3 சரக்கு அனுப்புவோர், நாணய மாற்றுனர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள்/ உரிமங்களை வழங்குதல்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் சரக்கு அனுப்புவோர், நாணய மாற்றுனர்கள் மற்றும் மற்றைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு கீழே காட்டப்பட்டவாறு அனுமதிப்பத்திரங்களை தொடர்ந்தும் வழங்கியது.

அ) 38 புதிய கம்பனிகள் சரக்கு அனுப்புவோராக பதிவு செய்யப்பட்டதுடன் 2007 இறுதியில் சரக்கு அனுப்புவோரின் மொத்த எண்ணிக்கையானது 248 இனை அடைந்தது.

ஆ) பணம் மாற்றும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் இரண்டிற்கு புதிய உரிமங்கள் வழங்கப்பட்டதுடன் நாணய மாற்றுனர்களின் மொத்த எண்ணிக்கை 66 இனை அடைந்தது. நாணய மாற்றுனர்களின் உரிமப் பத்திரத்தினைப் புதுப்பிப்பதற்கு தகைமை பெறுவதற்கு தேவைப்படும் குறைந்த பட்ச ஆண்டுப் புரள்வு ஐ.அ.டொலர் 120,000 இலிருந்து ஐ.அ.டொலர் 600,000 இற்கு அதிகரிக்கப்பட்டது.

இ) தீர்வையற்ற கடைகள், சுற்றுலா விடுதிகள், பயண முகவர்கள் மற்றும் இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணக் கடைகள் போன்ற ஏனைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு 49 புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமையுடன் அத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் மொத்த எண்ணிக்கை 3,398 ஆகியது.

### 9.4 வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல் மீதான கண்காணிப்பு

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களமானது, செலாவணிக் கட்டுபாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுவதனை மேம்படுத்தும் நோக்குடன், தொடர்பான தரப்பினரால் சமர்ப்பிக்கப்படுகின்ற காலாந்தர கூற்றுக்களினூடாக வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல் மீதான அதன் கண்காணிப்பினை தொடர்ந்தும் மேம்படுத்தியது.

அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒப்புதலளிக்கப்பட்ட பயண முகவர்கள் மற்றும் நாணய மாற்றுனர்கள் ஆகியோரின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் கண்காணிப்பானது

வெளிநாட்டு நாணயங்களின் விற்பனை மற்றும் கொள்வனவுகள் பற்றி உடனடி கணனி வழியாகவும், ஈ- வடிவம் மற்றும் படிவம் 1 (வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை மீதான அறிக்கை) மற்றும் படிவம் 2 (வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு) வன்பொருள் பிரதிகளைச் சமர்ப்பிப்பதன் மூலமும் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர அறிக்கைகளினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. 2007இல் ஈ படிவம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் செலாவணி கட்டுப்பாட்டுத் திணைக்களம் அனைத்து தகவல்களையும் (100 சதவீதம்) உடனடிக் கணனி முறையில் வினைத்திறன்மிக்க முறையில் பிழையற்ற தரவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என நம்புகிறது.

ஆ) நாணய மாற்றுனர்களினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் அறிக்கையிடும் முறையினை மேம்படுத்துவதற்காக மென்பொருள் தொகுதியொன்றினை நிறுவுதல்.

இ) அதிகாரமளிக்கப்படாத மூலதன மாற்றல்கள் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் அல்லது பணம் தூயதாக்கல் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட நிதிகள் என்பனவற்றைக் கண்டறிவதற்காக இலத்திரனியல் நிதியமாற்றல் அட்டைகளைக் கண்காணித்தல்.

ஈ) ஏற்றுமதிப் பெறுகைகளின் கண்காணிப்பு தொடர்பான காத்திரமான தன்மையினையும், பதிலிறுப்புக்களையும் உயர்த்தும் பொருட்டு ஏற்றுமதியாளர்களுக்காக மின்னஞ்சல் அறிக்கையிடும் வசதியினை அறிமுகப்படுத்தல்.

உ) பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபா கணக்கு மற்றும் திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாய்க் கணக்கு என்பனவற்றின் தொழிற்பாடுகளை கணனி வழியாக உடனடியாகக் கண்காணித்தல்.

### 9.5 செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது பற்றிய புலனாய்வுகள்

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், தனிப்பட்டவர்கள் மற்றும் கம்பனிகள் போன்ற பல்வேறு தரப்பினராலும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்தமை 2007இல் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் முக்கிய நடவடிக்கையாகக் காணப்பட்டது. 2007இல் கிட்டத்தட்ட 110 புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 46 புலனாய்வுகள் இவ்வாண்டில் முடிவடைந்ததுடன் உரிய தரப்பினரின் மீது விதிக்கப்பட்ட தண்டப் பணமாக ரூ.14.0 மில்லியன் சேகரிக்கப்பட்டது. புலனாய்வுகள் முக்கியமாக, உள்நாட்டுக் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற அதிகாரமளிக்கப்படாத நிதிய மாற்றல்கள், இலங்கைக்கு வெளியே வதிபவரின் சார்பில் வெளிநாட்டு நாணயங்களை உடமையில் வைத்திருத்தல், முன் அனுமதியில்லாமல் வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பெறுதல் மற்றும் முன் ஒப்புதல் இல்லாமல் வெளிநாட்டுக் கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்தல் ஆகிய விடயங்களில் அடையாளம் காணப்பட்ட ஏற்பாடுகளை மீறியவற்றையே உள்ளடக்கியிருந்தன.

### 9.6 ஏனைய நடவடிக்கைகள்

வங்கித்தொழில் மற்றும் ஏனைய முறைசார்ந்த துறைகளினூடாக தொழிலாளர் பணவனுப்பல்களை மேம்படுத்துவதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டது. இது தொடர்பாக, வர்த்த வங்கிகளின் அலுவலர்களுக்காகவும், வெளிநாடுகளில் தொழில் புரிபவரின் குடும்ப உறுப்பினர்களுக்காகவும் இரண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்தளையிலும், மாதம்பையிலும் நடத்தப்பட்டன. மேலும் தொழிலாளர் பணவனுப்பல்களை உயர்த்துவதற்கும், அதிகாரமளிக்கப்படாத நிதிய மாற்றல் ஒழுங்குகளை ஊக்கமிழக்கச் செய்வதற்குமான உபாயங்களைக் கண்டறிவதற்காகவும் வர்த்தக வங்கிகள், சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவராண்மைகளின் அலுவலர்களுடன் தொடர்ச்சியான கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 10. நிதியியல் உளவறிதல் பிரிவு

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ், 2006 மார்ச்சில் நிதிசார் உளவறிதல் பிரிவானது, மேதகு சனாதிபதியின் கட்டளையின் நியதிகளில் மத்திய வங்கியின் ஒரு பிரிவாக நிறுவப்பட்டு நிதிசார் உளவறிதல் பிரிவு எனக் குறித்துரைக்கப்பட்டு தொழிற்பட்டு வருகின்றது. நிதிசார் உளவறிதல் பிரிவின் தொழிற்பாடுகளை உயர்த்தும் பொருட்டும், கொள்கை உருவாக்கம் மற்றும் மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தும் இயலாற்றல் என்பனவற்றை உயர்த்துவதன் மூலம் அதன் நியதித் தொழிற்பாடுகளை வழங்குவதில் வினைத்திறனுடன் தொழிற்படுவதற்காகவும் 2007 பெப்புருவரியில் மத்திய வங்கியின் ஒரு திணைக்களமாக மீள ஒருங்கிணைக்கப்பட்டது. நிதிசார் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாக, சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுடன் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல் மற்றும் பெறுதல்; அத்தகைய தகவல்களின் அடிப்படையில் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் பற்றி புலனாய்வு செய்தல்; அத்தகைய தகவல்களையும் புலனாய்வின் விபரங்களையும் சந்தேகத்திற்குரிய தரப்பினருக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க அல்லது நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்து வதற்கேதுவாக சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கும், தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளுக்கும் பரப்புதல்; மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நிதியியல் முறைமையை பயன்படுத்துவதிலிருந்தம் குறிப்பிட்ட தரப்பினரைத் தடுப்பதற்கான ஒழுங்குவிதிகளை வழங்குதல் என்பன காணப்பட்டன. 2007ஆம் ஆண்டில் நிதிசார் உளவறிதல் பிரிவு முக்கியமாக அதன் தொழிற்பாடுகளை நிதியியல் நிறுவனங்களினூடாக பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றினை ஒழித்தல் மீது செலுத்தியது.

### 10.1 தகவல்களை சேகரித்தல் மற்றும் புலனாய்வு செய்தல்

நிதிசார் உளவறிதல் பிரிவினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளின் நியதிகளில், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் என்பன ரூ.500,000 அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சிய அனைத்து காசுக் கொடுக்கல்வாங்கல்களையும் எந்தவித கீழ்மட்ட அளவையும் கருத்திற் கொள்ளாமல் இலத்திரனியல் நிதிய கொடுக்கல் வாங்கல்களையும் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றுடன் தொடர்பான சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களையும் தொடர்ந்தும் அறிவித்தல் வேண்டும். 2007ஆம் ஆண்டின் முடிவிலுள்ளவாறு, நிதிசார் உளவறிதல் பிரிவின் தரவுத்தளம் நிதியியல் நிறுவனங்களினால் அறிவிக்கப்பட்ட ஏறத்தாழ 3 மில்லியன் கொடுக்கல் வாங்கல்களைக் கொண்டிருந்தது. இதற்கமைய, நிதிசார் உளவறிதல் பிரிவு தொடர்ந்தும் குறிப்பிட்ட சில நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள், பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுடன் தொடர்புபட்டிருக்கின்றதா என்பதனை அடையாளம் காண்பதற்காக நிதியியல் நிறுவனங்களினூடாக பல்வேறுபட்ட ஆரம்ப பகுப்பாய்வுகளையும் புலனாய்வுகளையும் மேற்கொண்டது. மேலும், 2006 மற்றும் 2007இல் இடைநிறுத்தப்பட்ட வங்கிக் கணக்குகள் தொடர்பாக சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் பற்றிய புலனாய்வுகள் சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரசபைகளினூடாக தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. மேலும், பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான புலனாய்வுகள் பற்றிய தொடர்பான தகவல்களை வழங்குதல்/ பரப்புதல் என்பனவற்றில் பல்வேறு உள்ளூர் மற்றும் பன்னாட்டு முகவர்களுக்கு நிதிசார் உளவறிதல் பிரிவு உதவியது.

### 10.2 பணிப்புரைகளை/ ஒழுங்குவிதிகளை வழங்குதல்

நிதிசார் உளவறிதல் பிரிவு பின்வரும் பணிப்புரைகளை/ ஒழுங்குவிதிகளை வழங்கியதுடன் இவை இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

(i) "உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள்" மற்றும் "வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல்" என்பன தொடர்பான விதிகளை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் மற்றும் பிணையங்கள் தொழில்துறை என்பனவற்றிற்கு வழங்கப்பட்டது. இவ்விதிகள் நிதியியல் நிறுவனங்கள், வாடிக்கையாளர் தொடர்பான விபரமான தகவல்களையும் அவர்களது நிதிசார் கொடுக்கல்வாங்கல்களின் தன்மை மற்றும் மூலங்கள் என்பன பற்றிய விபரங்களையும் தேவைப்படுத்தின. மேலும், காப்புறுதி மற்றும் நாணய மாற்றுப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ள விதிகள் ஏற்கனவே வரையப்பட்டுள்ளன.

(ii) சிறுவர்களுக்கான குற்றங்களை ஒழித்துவிடும் பொருட்டு சிறுவர்களுக்கெதிரான குற்றங்களுக்கு பயன்படுத்தப்படும் வெப்தளங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான இலத்திரனியல் கொடுப்பனவுகளுக்காக, உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் என்பன தொடர்பாக மேலதிக வழிமுறைகளை இணைத்துக் கொள்ளுமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கின்ற பணிப்புரையொன்று வங்கிகளுக்கு விடுக்கப்பட்டது. இதற்கமைய எந்தவொரு வாடிக்கையாளரினதும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள், சிறுவர்களுக்கெதிரான குற்றங்களுடன் தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கல் அல்லது பணிகள் பற்றி அறிக்கையிடுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

(iii) நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடுதல் தொடர்பான நடவடிக்கைகளை வலுப்படுத்து வதற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளுக்கும் பல்வேறு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. காலாந்தர அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் இலத்திரனியல் நிதியமாற்றல்கள் என்பன அவற்றுள் சிலவாகும்.

### 10.3 ஏனைய நடவடிக்கைகள்

நிதிசார் உளவறிதல் பிரிவு அதன் செயலாற்றம் மற்றும் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்காக இவ்வாண்டுக் காலத்தில் ஏனைய பல்வேறு நடவடிக்கைகளையும் கீழே காட்டப்பட்டவாறு மேற்கொண்டது.

(i) **மலேசியாவின் மத்திய வங்கியுடன் (நிகரா வங்கி மலேசியா) புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட்டிருக்கிறது:** பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடல் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகள் எல்லை கடந்த கொடுக்கல் வாங்கல்களினூடாக பன்னாட்டு ரீதியாக நன்கமைக்கப்பட்ட தரப்பினர் மற்றும் பயங்கரவாத அமைப்புக்களின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக் கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் அவசியமானதாகும். இது, அத்தகைய நடவடிக்கைகளுக்காக கூட்டாகவும் பெருமளவு ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புடனும் பயன்படுத்தப்பட்டு வரும் நிதியியல் முறையினை தடுப்பதில் உதவி புரிந்திருக்கிறது. எதிர்காலத்தில் இத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றைய கடல்கடந்த அதிகாரசபைகளுடன் மேற்கொள்ள மத்திய வங்கி திட்டமிட்டிருக்கிறது.

(ii) **பல்வேறு கூட்டங்களை நடத்துதல்:** பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றை ஒழிக்கும் முயற்சிகளை மேலும் அதிகரிக்கும் பொருட்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் என்பனவற்றின் இணங்குவிப்பு அலுவலர்களுடன் தொடர்ச்சியான கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும் ஒத்துழைப்பினையும் அதிகரிப்பதற்கும் நிதிசார் உளவறிதல் பிரிவின் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்குமாக இலங்கையிலுள்ள சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்களுடனும் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, பிரான்சு பணம் தூயதாக்கல் பற்றிய ஆசிய

பசுபிக் குழு, பொதுநலவாய செயலகம் என்பனவற்றின் வெளிநாட்டு பேராளர்களுடனும் கிரமமான கூட்டங்கள் நடத்தப்பட்டன.

(iii) **சட்ட சீர்திருத்த குழுவொன்றினை ஏற்படுத்துதல்:** ஏற்கனவேயுள்ள சட்டவாக்கங்களை மீளாய்வு செய்து திருத்துவதற்காக சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம், மத்திய வங்கியின் சட்டத் திணைக்களம் மற்றும் நிதிசார் உளவறிதல் பிரிவு என்பனவற்றின் உறுப்பினர்களை உள்ளடக்கிய விதத்தில் இருக்கும்.

(iv) **இயலளவை கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்:** 2007இல் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கெதிரான நடவடிக்கைகள் மீது பல செயலமர்வுகளும், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன. இது நிதிசார் உளவறிதல் பிரிவு, இலங்கை வங்கியாளர் சங்கம் மற்றும் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, உலக வங்கி, பொதுநலவாய செயலகம், நிதியியல் நிறுவனங்களுக்கான பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழு, வழக்குத் தொடுநர், சுங்கம் மற்றும் குற்றபுலனாய்வுத் திணைக்கள அலுவலர்கள் என்பனவற்றுடன் இணைந்து ஒழுங்கு செய்த பல்வேறு செயலமர்வுகளை உள்ளடக்கியிருந்தது. மேலும், நிதிசார் உளவறிதல் பிரிவு கொழும்பில் 2007 ஒத்தோபரில் பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கை பற்றிய பன்னாட்டு மாநாட்டினை நடத்துவதற்கு பன்னாட்டு உறவுகள் மற்றும் உபாயக் கற்கைகளுக்கான லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவனத்திற்கு உதவியது. மேலும், வங்கிகள் நிதிக்கம்பனிகள் மற்றும் கல்விசார் நிறுவனங்கள் என்பனவற்றிலிருந்து 21 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் மேற்கு, மத்திய, வடமத்திய மற்றும் தென் மாகாணங்களில் நான்கு ஆய்வரங்குகளும் நடத்தப்பட்டன. பொதுமக்களுக்கான விழிப்புணர்வின் ஒரு பகுதியாக சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழில் ஒரு பக்க விளம்பரமொன்று செய்தித் தாள்களில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் சட்டவிரோத நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் பொதுமக்கள் மற்றும் தேசிய நலவுரித்துக்களுக்கும் நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளுக்கு பாரியளவில் தீங்கினை ஏற்படுத்தும் விதத்தில் மற்றைய தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதனால் ஏற்படும் ஆபத்துக்களை பொதுமக்களுக்கு தெரியப்படுத்து வதனையே நோக்கமாகக் கொண்டிருந்தது.

## 11. நிதியியல் முறைமை உறுதிப்பாடு

இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களில் ஒன்றான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பேணும் வகையில் 2007 சனவரி மாதத்தில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் உருவாக்கப்பட்டது.இது, இலங்கையின் நிதியியல் முறைமை பாதுகாப்பானது என்பதனையும் நிதியியல் உறுதிப்பாட்டிற்கான அச்சுறுத்தல்கள் கண்டறியப்பட்டு குறைக்கப்படுவதனையும் உறுதிப்படுத்துகின்றது. எனவே திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக நிதியியல் முறைமைகளுக்கான இடர்நேர்வுகளை ஆரம்பக் கட்டத்திலேயே அடையாளம் காணுதல், நிதியியல் உறுதியின்மையினை தவிர்ப்பதற்கு தடுப்பு மற்றும் மீட்புக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது, மற்றைய வழிமுறைகள் தோல்வி காணுமிடத்து நெருக்கடிகளுக்கு தீர்வுகாண உதவுவது என்பன காணப்படுகின்றன. நிதியியல் சமமின்மைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளின் உள்ளார்ந்த கட்டமைப்பைக் கண்டறிவதற்காக முன்னோக்கிய அணுகுமுறையொன்று பின்பற்றப்படுகின்றது.

இலங்கையின் நிதியியல் முறைமையானது வர்த்தக வங்கிகள், சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், நிதிக் கம்பனிகள், குத்தகைக் கம்பனிகள், முதனிலை வணிகர்கள், காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் தரகர்கள், பங்குத் தரகர்கள், ஓய்வூதிய மற்றும் சேம நிதியங்கள் மற்றும் நுண்பாக கொடுகடன் நிறுவனங்கள் போன்ற நிதியியல் நிறுவனங்களையும், பணச்சந்தை, முறிகள் சந்தை, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மற்றும் மூலதனச் சந்தை போன்ற நிதியியல் சந்தைகளையும் கொடுப்பனவு மற்றும் வர்த்தகப்படுத்தல் தீர்ப்பனவு முறையைக் கொண்ட நிதியியல் உட்கட்டமைப்பையும் கொண்டுள்ளது.

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களமானது நிதியியல் முறைமையிலுள்ள அனைத்து துறைகளின் அபிவிருத்திகளைக் கண்காணிப்பதற்கும், பகுத்தாராய்வதற்கும் என பரந்த முறையிலான அணுகுமுறையொன்றை மேற்கொண்டது. இது பேரண்ட மற்றும் உண்மைப் பொருளாதாரம், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிதியியல் சந்தைகள், முறையியல் சார்ந்த முக்கியத்துவம் மிக்க நிதியியல் நிறுவனங்கள், மற்றும் பிரதான நிதியியல் உட்கட்டமைப்பின் தொழிற்பாடுகள் என்பனவற்றிலான அபிவிருத்திகளின் கண்காணிப்பைக் கட்டாயமாக்கியது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம், திரண்ட நிதியியல் மற்றும் பொருளாதாரத் தரவுகளின் வீச்சுக்களை மதிப்பிட்டமையானது நிதியியல் முறையின் உறுதி மற்றும் உள்ளார்ந்த பாதிக்கப்படும் தன்மைகளை அளவிடுவதற்கு உதவியது. இவை பேரண்டப் பொருளாதாரம், வைப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்கள் ஏனைய நிதியியல் நிறுவனங்கள், கம்பனிகள் மற்றும் வீட்டுடமையாளர்துறை என்பனவற்றுடன் தொடர்பான அளவுசார் நிதியியல் உறுதிப்பாட்டு ஆற்றல் குறிகாட்டிகளின் பரந்த வீச்சினை உள்ளடக்கியிருந்தன. இக் குறிகாட்டிகள் நிதியியல் துறையின் ஆரோக்கியத்தை மதிப்பிடுவதுடன் அதிகாரிகள் மற்றும் பங்குபற்றுநர்களுக்கும் உள்ளார்ந்த இடர்நேர்வுகளின் எச்சரிக்கையினை நேரகாலத்துடன் தெரிவிக்கும் முறைமையாகத் தொழிற்படுகின்றன.

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களமானது வருடாந்தம் வெளியிடப்படும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு அறிக்கைக்கும் பொறுப்புடையது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு இலங்கையின் நிதியியல் முறைமை மற்றும் அது முகங்கொடுக்கும் இடர்நேர்வு என்பனவற்றின் மதிப்பீட்டை வழங்குகின்றது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு மேலும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும்

உள்ளடக்குகிறது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வின் நோக்கம், இடர்நேர்வுகளுக்கேற்ப ஆயத்தமாவதற்கும், முகாமை செய்வதற்கும் வேண்டிய தகவல்களை நிதியியல் நிறுவனங்களுக்கும் சந்தைப் பங்குபற்றுநர்களுக்கும் வழங்குதலும் விழிப்புணர்வை ஊக்குவித்தலும் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பாதிக்கும் விடயங்களையிட்டு விவாதித்தல் என்பனவாகும். நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு 2007ஆனது நவெம்பர் 2007இல் வெளியிடப்பட்டது.

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு பொறுப்பான துணை ஆளுநரால் தலைமை வகிக்கப்பட்ட நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவின் செயலகப் பணிமனையாகவும் தொழிற்படுகிறது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக்குழு மாதாந்தம் கூடி நிதியியல் முறைமை உறுதி தொடர்பான அறிக்கையை நாணயச்சபைக்கு சமர்ப்பிக்கிறது.

## 12. மனிதவளங்கள் முகாமைத்துவம்

2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் மனித வளங்கள் முகாமைத்துவத் திணைக்களமானது அடையாளங் காணப்பட்ட பதவி இடைவெளிகளை நிரப்பும் நோக்கில் ஆட்சேர்ப்புச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக அதனை நோக்கி தனது வளங்களையும் வலுவையும் நெறிப்படுத்தியது. மேலும் திணைக்களமானது வங்கியினால் அடையாளங்காணப்பட்ட மனிதவளத் தேவையை நோக்காகக் கொண்டு பதவியுயர்வுகள், பதவியிலமர்த்துதல், தொடர்ந்து திட்டமிடல், செயலாற்றுகை மதிப்பீடு, வேலைச் சுழற்சிகள், போன்ற தனது ஏனைய தொழிற்பாடுகளையும் மேற்கொண்டது. அதேநேரம் மனிதவளங்கள் திணைக்களமானது வங்கியின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடையும் நோக்குடன் ஊழியர் செயல் நோக்கினை மேம்படுத்தும் உபாய ஆற்றுப் படுத்துகையை மேற்கொண்டது.

### ஆட்சேர்ப்பு

2007இன் புதிய ஆட்சேர்ப்புக்கள் பல்வேறு திணைக்களங் களினதும் அடையாளம் காணப்பட்ட திறமை அடிப்படையிலான தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதனை நோக்காகக் கொண்டிருந்தது. மொத்தமாக 59 முகாமைத்துவப் பயிற்சியாளர்கள் இரண்டு ஆண்டுகாலப் பயிற்சி அடிப்படையிலும், 2 பராமரிப்பு செயற்றிட்ட பொறியியலாளர், உயர் அலுவலர் வகுப்புத் தரம் II இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட அதே வேளையில் 8 ஆங்கில சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர்களும் மற்றும் 2 தகவல் தொழில் நுட்பவியலாளர்களும் இவ்வாண்டில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டனர்.

### பதவியுயர்வுகள்

2007இல் இலங்கை மத்திய வங்கியின் அனைத்து ஊழியர்களினதும் தொழில் செயலாற்றம் கவனத்திலெடுக்கப்பட்டு தரங்களுக்கான உயர்வு மற்றும் பதவி நிலை உயர்வு ஆகியவை வழங்கப்பட்டன. தரங்களுக்கான பதவி உயர்வுகளுக்கு செயலாற்ற மதிப்பீடுகளின் புள்ளிகளும், திணைக்களத் தலைவர்களின் விதந்துரைப்புக்களும் பிரமாணங்களாக பயன்படுத்தப்பட்டன. இந்த அடிப்படையில், உயர் அலுவலர்கள், உயர் அலுவலர்கள் அல்லாத வகுப்பினரும், மற்றும் சிற்றுழியர்களுமாக மொத்தம் 104 அலுவலர்கள் பதவி உயர்த்தப்பட்டனர். பதவிநிலை பதவி உயர்வுகள் விடயத்தில் 3 திணைக்களத் தலைவர்கள் உயர்பதவி சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநர்களாக பதவி குறித்துரைக்கப்பட்டதோடு 11 துணைத் திணைக்களத் தலைவர்கள் உயர் அலுவலர் தரம் IV இற்கு பதவியுயர்த்தப்பட்டதுடன் அவர்களில் ஒரு அலுவலர் பதில் திணைக்களத் தலைவராக நியமிக்கப்பட மீதி 10 பேரும் பதில் மேலதிக திணைக்களத் தலைவர்களாகப் பணியாற்றினர். நாற்பத்தெட்டு உயர் அலுவலர் அல்லாத வகுப்பு தரம் IV மற்றும் V அலுவலர்கள் உயர் அலுவலர் தரம் 1 இற்கு பதவியுயர்த்தப்பட்டதுடன் 53 உயர் அலுவலர் வகுப்பு தரம் III அலுவலர்கள் துணை திணைக்களத் தலைவர்களாக குறித்துரைக்கப்பட்டனர்.

### தொழில்தருநர் - ஊழியர் உறவுகள்

தொழிற் சங்கங்களுக்கும் வங்கி முகாமைத்துவத்திற்கும் இடையிலான கலந்துரையாடல் இவ்வாண்டிலும் தொடர்ந்தது. இதனுடாக முகாமையானது அதன் குறிக்கோள்களை பயனுறுதியுடன் ஆண்டு முழுவதும் அடைந்து கொள்வதற்கான தொழில்துறை அமைதியைப் பேணக் கூடியதாக இருந்தது.

### செயலாற்ற முகாமைத்துவமுறை

2006ஆம் ஆண்டிற்கான அனைத்து ஊழியர்களுக்குமான செயலாற்றுகை மதிப்பீடுகள் இவ்வாண்டில் வெற்றிகரமாகப் பூர்த்தியாக்கப்பட்டன. 2007ஆம் ஆண்டிற்கான தனிப்பட்ட மற்றும் திணைக்கள ரீதியான இலக்கு நிர்ணயமானது வங்கியின் உபாயத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் ஒருங்கிணைவாக மேற்கொள்ளப்பட்டது.

### மனிதவளத் திட்டமிடல்

2007இல் மொத்தமாக 15 ஊழியர்கள் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். இதற்கு மேலாக 12 ஊழியர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக வங்கிப் பணியிலிருந்து தாமாகவே விலகிச் சென்றனர். ஆண்டின் இறுதியில் 558 உயர் பதவி அலுவலர்களும் 481 உயர்பதவியல்லா அலுவலர்களும் 92 சிற்றூழியர்களும் பணியிலிருந்தனர்.

### ஈ - மனிதவள முறைமையினை நடைமுறைப்படுத்தல்

2006ஆம் ஆண்டின் இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வெப் தளத்தினை அடிப்படையாகக் கொண்ட ஈ-மனிதவள முறையானது வங்கி முழுவதும் நடைமுறைப்படுத்தப் பட்டது. ஊழியருடன் தொடர்புபட்ட தரவுகள் ஈ-மனிதவள முறையினுள் பதிவு செய்யப்படுவதுடன் அத் தகவல்களின் பகுப்பானது செம்மை பார்த்தல் 2008ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் பூர்த்தி செய்யப்படவிருக்கிறது. ஈ-மனிதவள முறையினூடாக ஊழியர்கள் தங்களது பணி தொடர்பான தகவல்களைப் பார்த்துக் கொள்ள முடிவதுடன் முகாமைத்துவம் மனித வளத்துடன் தொடர்புடைய விடயங்களில் விரைவாகவும் வினைத் திறனாகவும் தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். இலத்திரனியல்சார் மனிதவள முறையானது

மனிதவள திணைக்களத்தை வங்கியின் உபாயத் திட்டத்துடன் இணைந்து செல்வதை இயலச் செய்துள்ளது.

**உபாய முகாமைத்துவ மன்றம்**

மனிதவளத் திணைக்களமானது வங்கியின் அனைத்து ஆர்வலர்களினதும் பங்குபற்றுதலுடன் உபாயத்திட்டமிடல் மீளாய்வு பயிற்சிப் பட்டறையொன்றை ஒழுங்கமைப்பதற்கு வசதியளித்தது. இந்த மன்றம் அனைத்து பங்கு பற்றுனர்களுக்கும் திணைக்கள ரீதியான திட்டங்களையும் 2008 -2012 காலத்திற்கான உபாயத் திட்டத்தினையும் பற்றிக் கலந்துரையாடி இணங்கிக் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கியுள்ளது.

**புதிய திணைக்களங்களின் உருவாக்கம்**

வங்கித்தொழில் முறையின் தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் 2007 ஆரம்பத்தில் இரண்டு புதிய திணைக்களங்கள் அதாவது நிதிசார் முறைமை உறுதிப்பாட்டு திணைக்களம், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு திணைக்களம் என்பன உருவாக்கப்பட்டன.

**ஆளுநர் பங்கு பற்றிய கூட்டங்கள்**

1. சனவரியில் இந்தியாவில் நடத்தப்பட்ட உலகளாவிய முன்னணி மாற்றங்களின் சிறப்பியலாளர்களின் உச்ச மாநாட்டில் முக்கிய உரையொன்றினை ஆற்றுவதற்காக கலந்து கொண்டார்.

2. பெப்புருவரியில் சிங்கப்பூரில் நடைபெற்ற "புதிய முன்னணியியலாளர்கள்" பற்றிய 2ஆவது ஆசிய தோற்றம் பெற்று வரும் சந்தைகள் மாநாட்டின் குழு கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

3. பெப்புருவரியில் வங்காள தேசத்தில் சமாதானம் சுபீட்சம் மற்றும் இளைய தலைமுறையினர் பற்றிய 9ஆவது தெற்காசிய முகாமைத்துவ மன்றத்தின் ஆரம்ப கூட்டத்தில் விரிவுரையொன்றை ஆற்றுவதற்காக கலந்து கொண்டார்.

4. ஏப்பிறலில், ஐ. இராச்சியத்தில் இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் மற்றும் பிட்ச் தரமிடல் அலுவலர்களுடனுமான கூட்டங்களில் கலந்து கொண்டார்.

5. மேயில், பங்காள தேசத்தில் நடத்தப்பட்ட ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர் சபையின் 36ஆவது கூட்டத்தில் கலந்து கொண்டார்.

6. யூனில், ஐ.அமெரிக்காவில் நடைபெற்ற தரமிடல் அலுவலர்கள் மற்றும் பன்னாட்டு முதனிலை நிறுவனங்களுடனான கூட்டத்தில் கலந்து கொண்டார்.

7. பிஜியில் நடைபெற்ற பிஜி கணக்காளர் நிறுவனத்தின் 35ஆவது ஆண்டு காங்கிரஸ் கூட்டத்தில் முக்கிய உரையாற்றியதுடன் நியூசிலாந்து ஒதுக்கு வங்கியின் துணை ஆளுநரைச் சந்திப்பதற்காகவும் பிஜிக்குச் சென்றார்.

8. யூலையில், தாய்லாந்தில் நடைபெற்ற 42ஆவது தென் கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர் மாநாட்டில் "ஏற்ற இறக்கங்களுடன் வாழுதல்: செலாவணி வீதத்தினை முகாமைப்படுத்தலும் ஆசியாவிற்குள் மூலதன உட்பாய்ச்சலும்" என்பதன் மீதான மாநாட்டிலும் தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர் சபையின் 26ஆவது கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

9. செத்தெம்பரில், பன்னாட்டு முறி வழங்கல் தொடர்பாக ஐ. இராச்சியத்தின் கூட்டு முன்னணி முகாமையாளர் களுடனான கூட்டங்கள்.

10. செத்தெம்பரில், இந்தியாவில் நடைபெற்ற புதுப்புதுச் சாதனங்கள், வினைத்திறன்மிக்க வழங்கல் மற்றும் வாடிக்கையாளர் பெறுமதி முகாமைத்துவம் என்பன மீதான "உலகளாவிய வங்கித்தொழில்: நகர்வதற்கான எடுத்துக்காட்டு" என்பது பற்றிய எவ்ஜசிசிஜ - ஐபீஏ மாநாட்டின் குழு கலந்துரையாடலில் சிறப்புரையொன்றை ஆற்றுவதற்காக கலந்து கொண்டார்.

11. ஒத்தோபரில், சிங்கப்பூர், கொங்கொங், இலண்டன், நியூயோர்க், லொஸ் அன்ஜலிஸ் மற்றும் பொஸ்டன் ஆகிய இடங்களில் இலங்கை அரசினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான முறிவழங்கல் தொடர்பான விளம்பரக் கூட்டங்களிலும், 2007ஆம் ஆண்டிற்கான ஜி 24 ப.நா.நிதியம் மற்றும் உலக வங்கியின் ஆண்டு மற்றும் அபிவிருத்தி கூட்டங்களிலும் வாசிங்டனில் நடைபெற்ற சார்க் நிதியக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

12. ஒத்தோபரில், இந்தியாவில் புதுடெல்லியில் இலங்கையின் பொருளாதாரம் தொடர்பாக முக்கிய வர்த்தக சமூகத்தினரைச் சந்தித்தார்.

13. திசெம்பரில், ஈரானில் நடைபெற்ற ஈரானிய அரசாங்கம் மற்றும் ஈரானிய மத்திய வங்கியுடனான சிறப்புக் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

14. திசெம்பரில், இந்தியாவில் கோவா மாநிலத்தில் கைத்தொழிலாளர்கள் வர்த்தகர்கள், பட்டயக் கணக்காளர்கள், வங்கியாளர்கள், மூத்த அரச அலுவலர்களுடனான கூட்டத்தில் கலந்து கொண்டார்.

**நியமனங்கள் / பதவி உயர்வுகள்**

1. சட்டத்தரணியும் சமாதான நீதவானுமாகிய திருமதி. மனோகரி இராமநாதன் 2007 திசெம்பர் 6ஆம் நாளிலிருந்து நாணயச்சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

2. 2007 திசெம்பர் 03ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் பின்வரும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு பதிவி குறித்துரைக்கப்பட்டது.

   அ. மனிதவளத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. எஸ். எச்.ஏ. எம். அபேரத்ன உயர் அலுவலர் வகுப்பு சிறப்புத் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   ஆ. பொதுப்படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்பாளரும் பதிவாளருமான திருமதி சி. பிரேமரத்ன உயர் அலுவலர் வகுப்பு சிறப்புத் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   இ. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. பி. சமரசிறி உயர் அலுவலர் வகுப்பு சிறப்புத் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்

3. திருமதி. எஸ். என். பெரேரா பதவி உயர்த்தப்பட்டு ஊழியர் சேம நிதியத்தின் பதில் மேலதிக கண்காணிப்பளாராக 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார்.

4. திருமதி. ஆர். தீரசிங்க பதவி உயர்த்தப்பட்டு கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார்.

5. திரு. பி. டி. டபிள்யு. ஏ. சில்வா பதவியுயர்த்தப்பட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார். பின்னர் 2007 திசெம்பர் 03ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

6. திரு. சி. பி. ஏ. கருணாத்திலக பதவி உயர்த்தப்பட்டு நாணயத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார்.

7. திரு. எஸ். லங்காதிலக பதவி உயர்த்தப்பட்டு மனித வளத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் 2007 திசெம்பர் 03ஆம் நாளிலிருந்து மனித வளத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

8. திரு. சி. ஜே. பி. சிறிவர்த்தன பதவி உயர்த்தப்பட்டு பொதுப்படுகடன் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார். பின்னர் 2007 திசெம்பர் 03 நாளிலிருந்து பொதுப்படுகடன் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளராகவும் பதிவாளராகவும் நியமிக்கப்பட்டார்.

9. திரு. ஆர். ஏ. ஏ. ஜயலத் பதவி உயர்த்தப்பட்:டு பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் பதில் மேலதிக பணிப்பாளராக 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார்.

10. திரு. யு. பி. அலவத்தகே பதவி உயர்த்தப்பட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கட்டுப்பாட்டாளராக 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார்.

11. முனைவர் பி. என். வீரசிங்க பதவி உயர்த்தப்பட்டு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார்.

12. திரு. எஸ்.எஸ். ரத்நாயக்க பதவி உயர்த்தப்பட்டு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்கள பதில் மேலதிகப் பணிப்பாளராக 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் 2007 நவெம்பர் 10ஆம் நாளிலிருந்து வங்கியல்லா நிதி நிறுவனங்களின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

13. திரு. எச். ஏ. கருணாரட்ன பதவி உயர்த்தப்பட்டு திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார். 2007 சனவரி 29ஆம் நாளிலிருந்து உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து 2007 மார்ச்சு 12ஆம் நாளிலிருந்து நிதியியல் உளவறிதல் பிரிவின் பதில் மேலதிகப் பணிப்பாளராகவும் 2007 யூன் 1ஆம் நாளிலிருந்து நிதியியல் உளவறிதற் பிரிவின் பதில் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

14. திரு. என். ஜே. பெரேரா ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் கண்காணிப்பாளர், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராக 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார்.

15. திரு. எல். வை. தர்மசேன நலன்புரித் திணைக்களப் பணிப்பாளர் 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நிமிக்கப்பட்டார்.

16. திரு.எஸ். சோமபால, ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளர், 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து புள்ளி விபரத் திணைக்களப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 2007 யூலை 1ஆம் நாளிலிருந்து புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

17. திரு. எம். வி. எம். பெர்னான்டோ நலன்புரித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நலன்புரித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் 2007 யூலை 1ஆம் நாளிலிருந்து நலன்புரித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

18. செல்வி. கே. சரவணமுத்து தொடர்பூட்டல் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர், 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் 2007 யூலை 1ஆம் நாளிலிருந்து நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

19. வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் பதில் பணிப்பாளர் முனைவர். டபிள்யு. எம். ஹேமசந்திர 2007 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

20. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திரு. பி. சமரசிறி 2007 பெப்புருவரி 14ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

21. உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திரு. ஏ. கமலசிறி 2007 மே 15ஆம் நாளிலிருந்து உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

22. திருமதி சி.கே. நாணயக்கார தொடர்பூட்டல் திணைக்களப் பணிப்பாளர், 2007 மே 18ஆம் நாளிலிருந்து செயலகத் திணைக்களத்திற்கு செயலாளராக நியமிக்கப்பட்டார்.

23. 2007 செத்தெம்பர் 12 இலிருந்து கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு பொறுப்பாக

நியமிக்கப்பட்ட சிறப்பு அலுவலர் திரு. எம். எம். அத்தநாயக்க 2007 திசெம்பர் 17ஆம் நாளிலிருந்து கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

24. திரு. எஸ். ஜே. ஏ. கந்தகம, உயர் அலுவலர் வகுப்பு தரம் III அலுவலர் 2007 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்து தொடர்பூட்டல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

25. திரு. பி. எம்.எம். பீரிஸ் சனாபதி சட்டத்தரணி 2007 யூலை 6ஆம் நாளிலிருந்து சட்ட ஆலோசனையாளராக நியமிக்கப்பட்டார்.

**பதவி விலகல்/ ஓய்வு பெறல்**

1. திரு.சி. சண்முகம், நாணயச்சபையின் நியமன உறுப்பினரின் பதவிக்காலம் 2007 யூலை 17ஆம் நாளன்று முடிவடைந்தது.
2. உதவி ஆளுநர் முனைவர். திருமதி. அனிலா டயஸ் பண்டாரநாயக்கா, 2007 ஒத்தோபர் 02ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
3. திரு. ஜோர்ச் என் பர்னாந்து நிதிசார் உளவறிதல் பிரிவின் முதன்மை நிறைவேற்று அலுவலர் 2007 ஏப்பிறல் 15ஆம் நாளிலிருந்து பதவியிலிருந்து விலகினார்.
4. திருமதி. எல். கே. குணதிலக்க, பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், 2007 நவெம்பர் 10ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
5. திரு. என். ஜே. பெரேரா, பணிப்பாளர் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், 2007 திசெம்பர் 16ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

**விடுவிப்பில்/ விடுப்பிலுள்ள அலுவலர்கள்**

1. உதவி ஆளுநர் திரு. ஆர். ஏ. ஜயதிஸ்ஸ மூத்த பொருளியல் மதியுரையாளராகவும், திறைசேரியின் துணைச் செயலாளராகவும் பணியாற்ற நிதிதிட்டமிடல் அமைச்சிற்கு
2. உதவி ஆளுநர். கே.ஜி.டி.டி. தீரசிங்க பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக
3. செயலாளர், திருமதி. ஜே. ஏ. என். திஸ்ஸநாயக்க முறிவடைந்த நிதிக் கம்பனிகளின் விடயங்களை ஆராயும் ஆணைக் குழுவிற்கு
4. திரு. எஸ். ஆர். ஆட்டிக்கல, உயர் அலுவலர் வகுப்பு தரம் III அலுவலர், நிதி திட்டமிடல் அமைச்சிற்கு
5. திரு. பீ. லொக்குரணமுக, உயர் அலுவலர் தரம் II அலுவலர், நிதி திட்டமிடல் அமைச்சிற்கு
6. திரு. எச். பி. எம். வசந்தகுமார, உயர் அலுவலர் தரம் I அலுவலர், நிதி திட்டமிடல் அமைச்சிற்கு
7. திரு. எம். மகிந்தசாலிய, உயர் அலுவலர் தரம் I அலுவலர், நிதி திட்டமிடல் அமைச்சிற்கு
8. திருமதி. ஏ. கே. ஹெட்டியாராச்சி, பிரத்தியேகச் செயலாளர், பன்னாட்டு நாணய நிதியத்திற்கு
9. திருமதி. எம். சி. ஜே. பெர்னாண்டோ, பிரத்தியேகச் செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சிற்கு
10. திருமதி. டி. ஜி. டி. ஐ. எக்கநாயக்க, உயர் அலுவலர் தரம் I அலுவலர், நிதி திட்டமிடல் அமைச்சிற்கு
11. திரு. ஈ. டபிள்யு. கே. ஜே. பீ. எல்லப்பொல, உயர் அலுவலர் தரம் I அலுவலர், நிதி திட்டமிடல் அமைச்சிற்கு
12. திரு. கே. ஏ. யு. எஸ். கே. திலகரத்ன, உயர் அலுவலர் தரம் I அலுவலர், நிதி திட்டமிடல் அமைச்சிற்கு
13. திருமதி எச்.எம்.என். எஸ். குணவர்த்தன ஒப்பந்த அடிப்படையிலான சட்ட அலுவலர் சட்ட நீதி சீர்திருத்த செயற்றிட்டம் கட்டம் II இற்கு
14. திரு. ஈ. ஏ. ஹெட்டியாராய்ச்சி, உயர் அலுவலர் தரம் IV அலுவலர், சம்பளமற்ற விடுப்பில்
15. திருமதி. ஆர். தீரசிங்க, உயர் அலுவலர் தரம் IV அலுவலர், சம்பளமற்ற விடுப்பில்

## 13. தகவல் தொழில்நுட்பம்

மீளாய்விற்குரிய ஆண்டில் தகவல் தொழில்நுட்ப திணைக்களம் முக்கியமாக பெறுமதி கூட்டப்பட்ட தகவல் தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் நோக்கில் கைகளாலான மற்றும் பகுதியளவு தன்னியக்கப்படுத்தப்பட்ட முறைகளை புதிய தொழில்நுட்பத்தைப் பின்பற்றுகின்ற இணையத்தள பிரயோகங்களாக மாற்றுவது தொடர்பாக முக்கிய கவனத்தைச் செலுத்தியது. இதன்படி தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட முதலாவது இணைய பிரயோக மென் பொருளான மத்திய தரவுத்தள பிரயோக மென்பொருளானது பின்வரும் பாவனையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் விரிவாக்கப்பட்டது.

- கொடுப்பனவுகள் செய்தித் திரட்டினை வெளியிடுவதற்குத் தேவையான தகவல்களைச் சேகரிப்பதற்காக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
- காலாண்டு ரீதியான மதிப்பீட்டு ஆய்வுகளுக்காக வங்கிகளின் கடன்கள், முற்பணங்கள் மற்றும் வைப்புக்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
- பாசல் II இன் கீழான புதிய மூலதனப் போதுமைக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்காக வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
- வர்த்தக வங்கிகளின் சட்டநியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் தொடர்பான வாராந்த தகவல்களைச் சேரிகரிப்பதற்காக உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

தகவல் தொழில்நுட்ப உபாயங்களை வங்கியின் ஒட்டுமொத்த வணிக உபாயங்களுடன் ஒழுங்கமைக்கும் விதத்தில் தகவல் தொழில்நுட்ப திணைக்களமானது மையப்படுத்தப்பட்ட கருதுகோளினைப் பயன்படுத்தி ஒரே நிலைக்குக் கொண்டுவரப்பட்ட பல பிரயோகங்களைக் கண்டறிந்தது. மத்திய

தரவுத்தள முறையில் முதலாவதாக நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டக் கருத்தானது பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மீள் நிதியிடல் மற்றும் கொடுகடன் உத்தரவாதக் கடன் திட்டங்களைக் கையாளுவதற்கான மென்பொருள் தீர்வை அபிவிருத்தி செய்வதற்காக விரிவாக்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டம் 2007ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தச் செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டமாக புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கடன் திட்டத்தை கணனிமயப்படுத்தல் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதேவகையில் இந்த ஒருங்கிணைக்கப்பட்ட கருத்தின் கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் வேண்டுகோள்கள் கவனத்தில் எடுக்கப்பட்டதோடு இச் செயற்றிட்டத்தின் முதல்படி நிலையின் கீழ் கண்டறியப்பட்ட பிரயோகங்கள் முன்மொழியப்பட்டன. இதன்படி,

- ஏற்கனவேயுள்ள வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் பிரயோகமானது பரந்த உள்ளடக்கப்பரப்பை வழங்கும் நோக்கில் வெப்தள பிரயோகமாக மாற்றப்படும்
- இலத்திரனியல் நிதிகள் பரிமாற்ற அட்டைகளின் ஊடான வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணிப்பதற்கான புதிய இணைய பிரயோகம் அபிவிருத்தி செய்யப்படும்.

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட பிரயோகமானது 2008 நடுப்பகுதியில் பாதுகாப்பானதும் பயன்படுத்துநர் சிநேகபூர்வ பிரயோகமாகவும் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கிக்கு அதனது மையக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கும் முகவர் தொழிற்பாடுகளை முன்னேற்றுவதற்கும் மற்றும் ஆண்டுக் காலத்தில் கீழ்வரும் பாரிய தகவல் தொழில்நுட்ப முறைகளை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படுகின்ற தொழிற்பாட்டு கிரயங்களைக் குறைப்பதற்காகவும் அதன் கூட்டிணைந்த பணிகளை மேலும் தன்னியமாக்குதல் போன்ற துணைப்பணிகளை வழங்கியது.

(i) வெப் தளத்தை அடிப்படையாகக் கொண்ட தலத்திற்கு வெளியேயான தரவு கண்காணிப்பு அறிக்கையிடல் முறையின் விரிவாக்கம்

(ii) லினக்சு அடிப்படையிலான மின்னஞ்சல் முறையினை நடைமுறைப்படுத்தல்

(iii) நாடளாவியரீதியிலான தரவு சேகரித்தல் முறையினை நடைமுறைப்படுத்தல்

(iv) நாணயத் திணைக்களத்தின் தன்னியக்க செயற்றிட்டத்தை விரிவுபடுத்தல்

(v) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் செயற்பாடுகளைத் தன்னியக்கப்படுத்தல்

(vi) சுவிப்ற் செய்தி மாற்றல்களுக்காக தன்னியக்க கோவை மாற்றல் வசதி

(vii) முதனிலை வணிகர்களுக்கான அரச பிணையங்களின் இரண்டாம் தரச்சந்தை விற்பனைகளுக்கான இணைய அடிப்படையிலான அறிக்கையிடும் முறை

(viii) உள்நாட்டுப் பொதுப்படுகடனைப் பேணுவதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட முறை

(ix) அரச பிணையங்களை வியாபாரப்படுத்தும்போது ஏற்படக் கூடிய எதிர்பாரா நிகழ்விற்கான பின்வாங்கும்முறை

(x) விரிந்த வலையமைப்பினூடாக வர்த்தக வங்கிகளால் நாளாந்த பணச்சந்தை வீதங்களை அறிக்கையிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கனனி பிரயோகத்தை மீள வடிவமைத்தல்

(xi) தன்னியக்க நேர்மாற்று வசதியுடன் ஓரிரவு வாடிக்கையாளர் மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை கையாளுவதற்கான இணையப் பிரயோகத்தின் நடைமுறைப்படுத்தல்

(xii) தகவல் தொழில்நுட்ப கணக்காய்வாளர்களால் வழங்கப்பட்ட விதந்துரைப்புக்களை நடைமுறைப் படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப உதவிப் பீடத்தில் நிகழ்வு அறிக்கையிடல் மற்றும் கையாளும் முறையை நடைமுறைப்படுத்துதல்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது தகவல்களை சேமித்து வைக்கும் தலத்தில் அனர்த்த மீட்பு வசதிகளை முன்னேற்றியதன் மூலம் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை உறுதிப்படுத்தும் முயற்சியைத் தொடர்ந்தது. ஏனைய வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களின் பங்குபற்றல்களுடன் வேலை நாட்களில் அனர்த்த மீட்புத் தளத்திலிருந்தான மிக முக்கியமான தொழிற்பாடுகள் மூன்று சந்தப்பங்களில் நடாத்தப்பட்டன. அவசர நிலைமைகளில் பயன்படுத்தவதற்கான முன்னேற்பாடான ஒழுங்காக, அனர்த்த மீட்புத் தளத்திற்கு மாற்றுப்பணி வழங்குனரிடமிருந்து தனியான இணையத் தொடர்பு வழங்கப்பட்டது. தடங்கலற்ற வியாபாரத் திட்ட ஆவணமானது மீளய்வு செய்யப்பட்டு இவ்வாண்டில் மாற்றங்கள் புகுத்தப்பட்டதன் மூலம் பூரணப்படுத்தப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது சாத்தியமான இடங்களிலெல்லாம் திறந்த மூல தீர்வுகளை நோக்கி நகரும் செயற்பாட்டை ஆரம்பித்தது. மென்பொருள் அனுமதிப்பத்திர செலவினை மேலும் குறைக்கும் எண்ணத்தில், இலங்கை மத்திய வங்கியானது மைக்கிரோசொவ்ட் நிறுவனத்துடன் குறைக்கப்பட்ட விலையில் அனுமதியளிக்கப்பட்ட மென் பொருளைப் பெற்றுக் கொள்வதற்கான வணிக மற்றும் பணிகள் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டது. இலங்கை மத்திய வங்கி வலையமைப்பானது அனுமதியின்றி அணுக முடியாத தன்மை, உள்புகும் பாதுகாப்பு தடுப்புமுறை போன்ற பாதுகாப்பு கருவிகளை இணைத்ததன்மூலம் மேலும் வலுவாக்கப்பட்டது.

திட்டமிடப்பட்ட சுவிப்நெட் கட்டம் II வெளிச் செல்வதனை இலகுபடுத்துவதற்காக தனியான கணனிச் சேமிப்புக்களில் சுவிப்ட்துணை மென்பொருள் இணைக்கப்பட்டது. இந்த மாற்றத்திற்கு ஒத்திசையும் வகையில் லங்கா செட்டில் மற்றும் லங்கா செகுயர் முறைகளில் பயன்படுத்தப்பட்ட செயற்பாட்டுமுறை மற்றும் பிரயோக மென் பொருள் தொகுதி, சிஏஎஸ் 3.3 ஆனது தேசிய கொடுப்பனவு முறையின் முறையான பேணுகைகளின் ஊடான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக விற்பனையாளர்களால் பரிந்துரைக்கப்பட்ட சிஏஎஸ் 3.4 ஆக மாற்றியமைக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது ஏனைய வர்த்தக

வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களின் வேறிடத்தில் தரவுகளைச் சேமிக்கும் முறையின் ஒழுங்குகளை மதிப்பிடுவதில் ஈடுபட்டது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது தேசிய நன்மையின் பொருட்டான செயற்றிட்டங்களுக்கு தொழில்நுட்ப உதவி வழங்கும் தனது முயற்சியைத் தொடர்ந்தது. இவை லங்கா நிதியியல் பணிகள் பணியகத்தின் உருவாக்கம், பொதுவான கொடுப்பனவு முடுக்கி, பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதை ஒழித்தல் மற்றும் பணம் தூய்மையாக்குதலுக்கெதிரான நடவடிக்கை என்பனவற்றுக்கான மென்பொருள் தீர்வுகளின் நடைமுறைப்படுத்தலுக்கான முன்மொழிவுகளை மதிப்பிடுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. மேலும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது வருமான வரியின் கணனிமயப்படுத்தல், கடன் தகவல் பணியகம், அரச ஈட்டு முதலீட்டு வங்கிமுறை மற்றும் கிராமிய வங்கிகளின் பல செயற்றிட்டங்கள் போன்ற தேசிய செயற்றிட்டங்களுக்கு தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக பல தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் பங்கு பற்றியது.

திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்கிடையிலும் மற்றும் நிதி நிறுவனங்களின் ஊழியர்களுக்கிடையிலும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் திறமையினை உயர்த்துவதற்கு, தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான பயிற்சி விழிப்புணர்வு திட்டங்களை நடாத்துவதற்கு வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்திற்கு வள ஆளணியினரை வழங்கியது. அரசாங்கத்தின் மொழிக் கொள்கைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தகவல் பாதுகாப்புக் கொள்கையின் பயன்படுத்துனர் வாசகத்தை ஆங்கில மற்றும் சிங்கள மொழிகளுக்கு மேலதிகமாகத் தமிழிலும் வெளியிட்டது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது இந்த வருடத்தில் ஊழியர் சேமலாப நிதிய முறைமையைத் தொடர்ந்து பேணியதுடன், முறைமையின் கிடைப்பனவு அண்ணளவாக 100 சதவீதமளவில் அடையக்கூடியதாகவிருந்தது. தகவல் தொழில்நுட்ப ஊழியர்கள் இலத்திரனியல் ஊடாக பங்களிப்பு சேகரிப்பு மேம்படுத்தல் தொழிற்பட்டறைகளில் வினைத்திறனுடன் பங்குபற்றினர். தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் மேலும் ஊழியர் சேமலாபநிதி மீள் பதிவு செயற்றிட்டத்திற்கு அவசியமான தொழில்நுட்ப உதவியை வழங்கியதுடன், இணையப் பணிகளூடாக உறுப்பினர்களுக்கு துணைப்பணிகளை விரிவாக்குதல் தற்பொழுது செயல்முறையிலுள்ளது.

## 14. பன்னாட்டு தொழிற்பாடுகள்

### 14.1 வெளிநாட்டு செலாவணி ஒதுக்கு முகாமைத்துவம்

இலங்கை ரூபாவின் வெளிநாட்டு உறுதித் தன்மையினை பேணுவதற்கும் நாட்டின் பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்களில் சாத்தியமானளவிற்கு பெருமளவு சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்குமான வசதிகளை வழங்கும் பொருட்டும், மத்திய வங்கி திரவ நாணயங்களில் போதுமான பன்னாட்டு ஒதுக்குகளை பேணுவதற்கும் மைய ஒதுக்குகளைத் தங்கத்தில் பேண வேண்டுமெனவும் நாணயச்சட்ட விதி தேவைப் படுத்துகின்றது. மேற்குறிப்பிட்ட குறிக்கோளினை எய்தும் பொருட்டு, நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைப் பேணுகின்ற பொறுப்பு பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

2007இல் வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகள் ஐக்கிய அமெரிக்க டொலர்கள், யூரோ, ஸ்ரேலிங் பவுண்கள், அவுஸ்திரேலியன் டொலர்கள் போன்ற நாணயங்களையும் தங்கத்தினையும உள்ளடக்கியிருந்த வேளையில், ஒதுக்குகள் முக்கியமாக நிலையான வருமானப் பிணையங்கள் மற்றும் பணச் சந்தைக் கருவிகள் ஆகிய இரு சொத்து வகைகளில் முதலீடு செய்யப்பட்டன. வங்கியின் நிலையான வருமானப் பிணையங்களின் சொத்துப்பட்டியல் உயர்ந்தளவில் தரமிடப்பட்ட நாட்டிற்கான அரச பிணையங்கள், அரசினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள் மற்றும் அரச முகவர்களினதும் நாடுகளின் அதிகாரங்களுக்கப்பாற்பட்ட நிறுவனங்களினதும் பிணையங்கள் என்பனவற்றினை உள்ளடக்கியிருந்தன. ஒதுக்கு முகாமைத்துவத்தில், இரண்டு சொத்து வகைகளினதும் உயர்ந்த திரவ குறுங்கால கருவிகளில் ஒதுக்குகளின் போதுமான விகிதத்தினைப் பேணுவதனூடாக திரவத்தன்மை தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. ஒதுக்கு முகாமைத்துவத்துடன் தொடர்பான அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட வரையறை அமைப்பினைக் கடைப்பிடிக்கும் விதத்திலும் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் அத்தகைய சொத்துக்கள் மீதான வருவாய் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டும் ஒப்புதலளிக்கப்பட்ட இணைக்கிணைத் தரப்பினரூடாக மட்டும் மேற்கொள்ளப்பட்டன.

ஒதுக்குகள் முகாமைத்துவ தொழிற்பாடுகள் முழுவதுமே நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்கவே மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டு காலத்தில் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவ வழிகாட்டல்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ குழுவானது வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவத்தின் ஒட்டு மொத்த தொழிற்பாடுகளையும் தொடர்ந்தும் மேற்பார்வை செய்ததுடன் பொருத்தமான விதத்தில் தேவையான வழிகாட்டல்களையும் வழங்கியது. ஒதுக்கு முகாமைத்துவத்தின் காலாந்தர செயலாற்றமானது, இடர்நேர்வுகளைத் தாங்கக்கூடிய வங்கியின் மட்டத்தினைப் பிரதிபலிக்கின்ற நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை அளவுக் குறியீட்டின் அடிப்படையில் அளவிடப்பட்டது.

2007ஆம் ஆண்டில், குறிப்பாக இரண்டாம் அரையாண்டில், ஐக்கிய அமெரிக்க துணை முதன்மை ஈட்டு நெருக்கடிகளின் மூலமாக ஏற்பட்ட நிதியியல்சந்தை குழப்ப நிலையங்களினால் தோன்றிய கொடுகடன் நெருக்கடி மெதுவான உலகளாவிய வளர்ச்சிக்கு வழிவகுத்தது. ஐ.அ.டொலர் 51 இலிருந்து ஐ.அ. டொலர் 99 (அடிப்படை அளவு குறியீட்டிற்கு மேற்கு டெக்டாஸ் இடைநிலை வகை) வரை தளம்பலடைந்த உயர்ந்த எண்ணெய் விலைகள், உலகளாவிய முதன்மைப் பணவீக்கத்தினை எட்டுவதற்கு வழிவகுத்த மிக உயர்ந்த உலக உணவு விலைகள் என்பன கொள்கை வகுப்போருக்கும் முதலீட்டாளர்களுக்கும் புதிய அறைகூவல்களையும்

சர்ச்சைகளையும் தோற்றுவித்துள்ளன. இது ஒதுக்கு முகாமைத்துவ தொழிற்பாடுகளுக்கு தொடர்ச்சியான அறைகூவலை ஏற்படுத்தும் சூழ்நிலையொன்றை உருவாக்கியிருக்கிறது.

இலங்கையின் முதலாவது பன்னாட்டு முறிகள் ஐ.அ.டொலர் 500 மில்லியனுக்கு வழங்கப்பட்டமையின் மூலம் கிடைத்த பெறுகைகளின் பெறுபேறாக வங்கியின் ஒதுக்கங்கள் 2007இன் இறுதிப்பகுதியில் கணிசமாக அதிகரித்தன. தெரிந்தெடுக்கப்பட்ட நாணயங்கள்/ நாடுகளிலுள்ள சந்தை மற்றும் பொருளாதார அடிப்படைகளை தொடர்ச்சியாக மீளாய்வு செய்து வங்கியின் இடர்நேர்வு விருப்புக்களுடன் இணைந்து செல்லும் விதத்தில், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், காலத்திற்குக் காலம் பன்னாட்டு ஒதுக்குகளின் நாணயம் மற்றும் சொத்து உள்ளமைப்பில் தேவையான மாற்றங்களைச் செய்கிறது. ஒதுக்குச் சொத்துப்பட்டியலின் சொத்து மற்றும் நாணய உள்ளமைப்பினை தீர்மானிப்பதில் வங்கியின் திரவ தேவைப்பாடுகள், அரச படுகடன் மீள்கொடுப்பனவுகள், இடர்முகாமைத்துவ வரையறைகள் மற்றும் வருமான உருவாக்க இயலாற்றல் என்பன பரிசீலனையில் கொள்ளப்படுகின்ற முக்கிய விடயங்களாக விளங்குகின்றன.

**அட்டவணை - I**
**வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு - 2007**

ஐ.அ.டொலர் மில்லியன்

| மாதம் | உடன் | நாளை | காசு | முன்னோக்கிய | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 352.70 | 48.92 | 62.85 | 205.95 | 670.42 |
| பெப்புருவரி | 278.25 | 64.20 | 63.15 | 164.63 | 570.23 |
| மாச்சு | 655.05 | 109.85 | 82.60 | 266.31 | 1,113.81 |
| ஏப்பிறல் | 386.65 | 111.05 | 78.22 | 238.44 | 814.36 |
| மே | 350.80 | 101.20 | 75.35 | 202.39 | 729.74 |
| யூன் | 248.65 | 90.25 | 59.37 | 259.00 | 657.27 |
| யூலை | 93.45 | 89.30 | 61.35 | 111.01 | 355.11 |
| ஓகத்து | 147.92 | 75.00 | 68.80 | 182.14 | 473.86 |
| செத்தெம்பர் | 206.25 | 107.97 | 48.92 | 193.66 | 556.80 |
| ஒத்தோபர் | 586.45 | 171.77 | 64.55 | 332.64 | 1,155.41 |
| நவெம்பர் | 468.62 | 99.32 | 107.42 | 336.39 | 1,011.75 |
| திசெம்பர் | 581.45 | 147.30 | 105.90 | 331.81 | 1,166.46 |
| | **4,356.24** | **1,216.13** | **878.48** | **2,824.37** | **9,275.22** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை - II**
**மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனை பற்றிய மாதாந்த தொகுப்பு - 2007**

ஐ.அ.டொலர் மில்லியன்

| மாதம் | கொள்வனவு | விற்பனை | தேறிய |
|---|---|---|---|
| சனவரி | 60.50 | 8.00 | 52.50 |
| பெப்புருவரி | 15.00 | - | 15.00 |
| மாச்சு | 112.50 | 83.00 | 29.50 |
| ஏப்பிறல் | 97.00 | 33.55 | 63.45 |
| மே | 18.50 | 69.15 | (50.65) |
| யூன் | 34.00 | 63.90 | (29.90) |
| யூலை | 4.00 | 65.70 | (61.70) |
| ஓகத்து | - | 105.60 | (105.60) |
| செத்தெம்பர் | 24.78 | 48.60 | (23.82) |
| ஒத்தோபர் | 131.20 | 77.00 | 54.20 |
| நவெம்பர் | 46.65 | 121.90 | (75.25) |
| திசெம்பர் | 48.50 | 39.45 | 9.05 |
| | **592.63** | **715.85** | **(123.22)** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இக்காலப்பகுதியில் வங்கியின் வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 2,323 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 2,881 மில்லியனுக்கு அதிகரித்திருக்கிறது.இவ்வாண்டுக் காலத்தில், ஒதுக்கு முகாமைத்துவ தொழிற்பாடுகள் ஐ.அ.டொலர் 125.3 மில்லியன் அல்லது ரூ.13,861.9 மில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தை உருவாக்கியுள்ளதுடன் இது முன்னைய ஆண்டின் வருமானமான ஐ.அ.டொலர் 100.5 மில்லியனை விஞ்சிக் காணப்பட்டது. வருமானத்தினை அதிகரிக்கும் பொருட்டு பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் 2007இல் அதன் முறிகடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தினை வலுப்படுத்தியது. வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ஒதுக்குகள் மற்றும் வட்டி வீதங்கள் இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் இணைந்த விளைவாகும்.

### 14.2 இடர்நேர்வு முகாமைத்துவம்

வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளுடனும் அவற்றின் முதலீட்டு அளவுகளுடனும் பல்வேறு இடர்நேர்வுகளும் இணைந்து காணப்படுகின்றன. இது வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு, வட்டிவீத இடர்நேர்வு, கொடுகடன் இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு போன்ற முக்கிய வகைகளை உள்ளடக்கியிருந்தது. வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளினதும் அவற்றின் முதலீடுகளினதும் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகள் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மத்திய அலுவலகத்தினால் கண்காணிக்கப்படுகின்றன.

செலாவணி வீதங்களில் ஏற்படுகின்ற தளம்பல்களின் விளைவாக ஏற்படுகின்ற இழப்புக்களின் இடர்நேர்வு அல்லது **வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு** நாணயப் பன்முகப்படுத்தலினூடாக முக்கியமாக முகாமைப்படுத்தப்படுகின்றது. சொத்துப்பட்டியலின் காலப்பகுதியின் பொருத்தமான சீராக்கங்களின் மூலம் வட்டிவீத அசைவுகளுக்கு அல்லது **வட்டிவீத இடர்நேர்வுகளில்** ஏற்படும் அசைவுகளுக்கேற்ப வங்கியின் ஒதுக்குகளின் சொத்துப் பட்டியலின் வெளிப்படுத்துகைகள் முகாமைப்படுத்தப் பட்டன. வங்கி அதன் இணைக்கிணைத் தரப்பினரின் கொடுகடன் இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்காக அதனால் பயன்படுத்தப்பட்ட நியம பிரமாணங்களைப் பயன்படுத்தி கொடுகடன் இடர்நேர்வு குறைக்கப்பட்டது. நிர்ப்பந்த ரீதியான திரவத்தன்மை நிகழ்வுகளின் போது ஏற்படுகின்ற மூலதன இழப்புக்களைக் கொண்ட இடர்நேர்வான திரவத்தன்மை இடர்நேர்வு திரவத்தன்மை தேவைப்பாடுகளை நிறுவுவதன் மூலம் முகாமைப்படுத்தப் படுகிறது. மனித தவறுகள் கணனி முறையின் தவறுகள், போதுமானதற்ற நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றின் விளைவாக ஏற்படும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் பல்வேறு வழிமுறை அமைப்புக்களினூடாக முகாமைப்படுத்தப்படுகின்றன.

### 14.3 உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை அபிவிருத்திகளைக் கண்காணித்தல்

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சுமுகமான தொழிற்பாட்டினை மேம்படுத்துவதற்காகவும், வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் ஒழுங்கான சீரமைப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது உள்நாட்டு வெளிநாட்டு செலாவணி சந்தை,

வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவு தேறிய வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகள் என்பனவற்றை தொடர்ச்சியாகவும் நெருக்கமாகவும் கண்காணித்து வருகின்றது.

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் 2007 ஆண்டுப்பகுதியில் செலாவணி வீதத்தின் பெரும் ஏற்றத் தாழ்வுகளைத் தவிர்ப்பதில் பெரும் பங்கினை ஆற்றியது. 2007 திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் ஒன்றிற்கான செலாவணி வீதம் ரூ.108.72 ஆக விளங்கி, 2006ஆம் ஆண்டின் 5.19 சதவீதம் கொண்ட பெறுமான தேய்வுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ஐ.அ.டொலருக்கெதிராக 0.93 சதவீத பெறுமான தேய்வினை மட்டுமே பதிவு செய்தது. செலாவணிவீத உறுதிப்பாட்டிற்கு குறிப்பாக, தலையீடுகளுடான வெளிநாட்டு நாணயங்களின் உட்பாய்ச்சல், நாட்டிற்கான முறி வழங்கப்பட்டமை மற்றும் இருப்பில் குறைந்தபட்சம் 10 சதவீதமான அரச திறைசேரி முறிகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு திறந்து விடப்பட்டமை என்பன பக்கபலமாக விளங்கின.

2006ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 10,972 மில்லியனாக விளங்கிய வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2007இல் ஐ.அ.டொலர் 9,275 மில்லியனுக்கு 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் உள்நாட்டுச் சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவுகளும் அதற்கான விற்பனைகளும் முறையே ஐ.அ.டொலர் 593 மில்லியனாகவும் ஐ.அ.டொலர் 716 மில்லியனாகவும் காணப்பட்டன.

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய தரப்பினருக்கும் மற்றைய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் செலாவணி வீதங்களை வழங்குகின்ற செயற்பாடு 2007இலும் தொடர்ந்தது.

## 15. சட்டம்

மீளாய்விற்குரிய ஆண்டில், சட்டத் திணைக்களமானது மத்திய வங்கி தனது குறிக்கோள்களை உத்தம இயலளவில் அடைந்து கொள்ளும் வகையில் பொருத்தமான சட்டக் கட்டமைப்பின் உருவாக்கத்தை இலகுவாக்குவதை நோக்கிச் செயற்பட்டது. மேலும் இது குறித்த கட்டமைப்பிற்குள் மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை இலகுவாக்கியது.

இதன்படி, திணைக்களம் சட்ட விடயங்களில் வங்கிக்கு மதியுரைகளை வழங்குதல், நீதிமன்றங்களிலும் மற்றைய சட்ட மன்றங்களிலும் வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தல், என்பனவற்றுடன் வங்கித் தொழில் மற்றும் நிதியியல் துறைகளின் சட்ட மறுசீரமைப்பிற்கும் அதன் பங்களிப்புக்களைத் தொடர்ந்தும் வழங்கியது.

2007இல் பல சட்டவாக்கங்களுக்கான திருத்தங்கள் திணைக்களத்தால் பின்பற்றப்பட்டன. மேலும் இத்துறைக்குப் பொருத்தமான பல சட்டவாக்கங்களின் கீழ் விதிகள் ஒழுங்கு விதிகள் ஆகிய சட்ட ஆவணங்களை தயாரிப்பதில் இத்திணைக்களம் தீவிர பங்காற்றியது. குறிப்பாக, வங்கித் தொழிற்சட்டம், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகள் சட்டம் மற்றும் கொடுப்பனவு கருவிகள் மோசடிச்சட்டம் என்பனவற்றின் கீழ் துணைச் சட்டவாக்கங்கள் போன்றவற்றைத் தயாரிப்பதில் சட்டத் திணைக்களம் ஈடுபட்டது.

## 16. முகாமைத்துவக் கணக்காய்வு

வங்கியின் தொழிற்பாடுகளையும் கட்டுப்பாட்டு முறைமைகளையும் முன்னேற்றுவதற்கான விதந்துரைப் புக்களைச் செய்வதன் மூலமாக அதனது உபாயம் மிக்க குறிக்கோள்களை எய்துவதில் வங்கியை வசதிப்படுத்துவதற்கு முகாமைக் கணக்காய்வுத் திணைக்களம் 2007இல் அதன் உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவப் பணியின் தொழிற்பாடுகளை மேற்கொண்டது. இடர்நேர்வு அடிப்படையிலான கணக்காய்வு அணுகுமுறையில் பிரதான கவனம் செலுத்தப்பட்டது. இத் திணைக்களமானது நாணயச்சபையின் கணக்காய்வுக்குழுவின் செயலகமாகவும், வங்கி ரீதியான வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவாகவும் பணியாற்றியது.

2007 கணக்காய்வுத் திட்டத்தின்படி, உள்ளார்ந்த இடர்நேர்வுகளிலிருந்து மத்திய வங்கியைப் பாதுகாப்பதற்கென அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமாந் தன்மையை மீளாய்வு செய்வதற்கு பல கணக்காய்வு ஒப்படைகள் நடாத்தப்பட்ட அதே வேளையில் உருவாக்கப்பட்ட கட்டுப்பாடுகள் விரும்பிய வகையில் தொழிற்படுவதை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வு இணக்கங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆண்டில் கணக்காய்வு செய்முறைக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன் திணைக்களமானது செய்முறைப் படுத்துதல் தொடர்பான குறிப்பிடத்தக்க பிரச்சனைகள், மற்றும் கணக்காய்வுத் திட்டத்தின் நிலை மற்றும் பெறுபேறுகள் தொடர்பான காலந்தர தகவல்களை அறிக்கையிட்டது.

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களமானது 2007ஆம் ஆண்டுக் காலத்தில் கணக்காய்வுத் திட்டத்திற்குப் புறம்பாக வங்கியின் தொழிற்பாடுகளின் ஆற்றல், சிக்கனத்தன்மை, செயல் விளைவுத்தன்மை என்பவற்றை மேம்படுத்தும் குறிக்கோளுடன் பல முகாமைத்துவ மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொண்டது. முக்கியமான முகாமைத்துவ மதிப்பீட்டு ஆய்வுகளாக பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் ஒதுக்கு முகாமைத்துவ தொழிற்பாடுகளின் செயலாற்றம் மீதான ஆய்வு, நிலையான சொத்துக்களின் சரிபார்ப்பும் சொத்துடைமையும், வங்கிக்குள்ளேயுள்ள இடங்களைப் பகிர்ந்தளித்தல், விடுப்பு பதிவேடுகளில் காணப்படும் குறைபாடுகளை வகைப்படுத்தல் மற்றும் கணியப்படுத்தல், வங்கித் தொழில் ஆய்வு நிலையத்திலுள்ள கட்டடத்தினைப் புதுப்பித்தல், நாணய நிலவறையிலுள்ள வார்ப்பு நாணயக் குத்திகள் மற்றும் தாள் நாணயங்கள் பற்றிய அளவீடு என்பன விளங்கின. மேலும் வங்கியின் வழமையான தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய சாதாரண உள்ளகக் கணக்காய்வு வேலையும் இந்த ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது.

2007ஆம் ஆண்டில் திணைக்களம் வங்கிரீதியான இடர்நேர்வு முகாமைத்துவ முறையை முன்னேற்றுவதைத் தொடர்ந்தது.

இடர்நேர்வு முகாமைத்துவ செய்முறையில் மற்றைய திணைக்களங்களின் ஈடுபாடு இடர்நேர்வு முகாமைத்துவ வினாக் கொத்து மூலம் திரட்டப்பட்டதுடன் இடர்நேர்வு அலுவலர்களின் அறிவை விருத்தி செய்வதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது. இடர்நேர்வு அலுவலர்களால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் ஒரு உள்கட்டுமான அபிவிருத்தியாக இடர்நேர்வுப் பதிவேட்டில் முன்னேற்றங்கள் செய்யப்பட்டன.

மேலும் இடர்நேர்வு அறிக்கையிடும் முறையை அபிவிருத்தி செய்வதற்காக கைகளால் செய்யும் இடர்நேர்வு நிகழ்வுகளின் அறிக்கையிடும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தோடு திணைக்கள நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தாங்கக்கூடிய இடர்நேர்வு மட்டங்கள் மற்றும் தொடர்புடைய இடர்நேர்வு முகாமைத்துவ நடவடிக்கைகள் வரைவிலக்கணம் செய்யப்பட்டன.

இந்த ஆண்டில் வங்கி முழுவதற்குமான இடர்நேர்வை கண்டறிதல் மற்றும் அறிக்கையிடலை மேலும் உறுதிப்படுத்துதற்காக, திணைக்களமானது வெளி மூலங்களிலிருந்து (உள்நாடு மற்றும் வெளிநாடு இரண்டும்) வங்கிக்கு தோன்றக் கூடிய இடர்நேர்வுகளைக் கண்டறியவும், மதிப்பிடவும் மற்றும் அறிக்கையிடவும் இடர்நேர்வு அலுவலரை நியமிப்பதில் இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கு உதவி செய்தது. அத்துடன் திணைக்களமானது வங்கி முழுவதற்குமான இடர்நேர்வு குறிப்பு மற்றும் வங்கியின் இடர்நேர்வு குறிப்புகளின் மாற்றங்களை அறிக்கையிடுவதற்கான திட்ட வரைவை வடிவமைத்தல் என்பனவற்றுக்காக உதவி ஆளுநர்களைக் கொண்ட துணைக் குழுவொன்றை நியமிப்பதில் இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கு உதவி செய்தது.

மேலே குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக திணைக்களமானது வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவினதும், தடங்கலற்ற வியாபார திட்டக் குழுவினதும் பார்வையாளராகவும், அளவீட்டுச்சபையின் உறுப்பினராகவும் தொழிற்பட்டது.

வங்கியானது அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் உள்ளகக் கணக்காய்வாளர் (ஐ.ஐ.ஏ) நிறுவனத்திற்கு இலங்கையில் தமது பரீட்சைகளை நடாத்துவதற்கு குறிப்பாக உள்ளக மற்றும் முகாமைத்துவ கணக்காய்வில் தொழில்சார் நிபுணத்துவத்தைப் பேணுவதற்கான ஒழுங்குகளைத் தொடர்ந்தும் செய்து வந்தது. திணைக்களம் அதன் கற்கை நெறிகளை முன்னேற்றுவதற்கு உள்ளகக் கணக்காய்வாளர் நிறுவனத்தின் இலங்கையின் அத்தியாயம் பிரிவு IIஅ உடன் தீவிரமாக ஒத்துழைத்தது. இதன்படி மத்திய வங்கி அதன் ஆளுநர் சபையின் மூன்றாவது வெற்றிகரமான ஆண்டைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

## 17. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது, முறையான முக்கியத்துவம் வாய்ந்த பெறுமதியுடைய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையான அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடு; அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையினூடாகச் செயற்படுத்தப்படும் மத்திய வங்கியின் கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்ப்பனவு வாயிலை தொழிற்படுத்தல்; வெளிநாட்டு செலாவணி ஒதுக்கீட்டு முகாமைத்துவம், திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்காக பின்தள அலுவலக செயற்பாடுகளை தொழிற்படுத்தல், மத்திய வங்கியின் சுவிப்ற் கொடுக்கல் வாங்கல்களை வினைத்திறனாக்கல், ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தினூடாக இலங்கையின் கொடுக்கல் வாங்கல்களைக் கையாளல் கொள்கை உருவாக்கம்; மற்றும் நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல் போன்றன தொடர்பாக தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

### 17.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடு

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை தொழிற்பாட்டுப் பிரிவானது 2007ஆம் ஆண்டு காலத்தில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் தொழிற்பாடுகளைத் தொடர்ந்ததுடன் பங்கேற்பாளர்களுக்கான உதவிப்பீட பணிகளையும் வழங்கியது. இந்தப் பிரிவானது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் குறிப்பிடத்தக்க உயர்ந்ததும், நிலையான மட்டத்திலான தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைப் பேணுவதிலும் கூடிய கவனம் செலுத்தியது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை 2007இல் சுமூகமாகத் தொழிற்பட்டதுடன் முறைமையின் கிடைப்பனவு 2006இன் 99.6 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 99.7 சதவீதத்திற்கு முன்னேற்றமடைந்தது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினூடாக இந்த ஆண்டில் தீர்க்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை 11 சதவீதத்தால் அதிகரித்து 194,619 ஆக இருந்த அதேவேளையில் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி 17 சதவீதத்தால் அதிகரித்து ரூ.21,266 பில்லியனாகக் காணப்பட்டது. 2007இல் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையானது ஒரு நாளுக்கான கொடுக்கல்வாங்கல்களில் அதனது என்றுமில்லாத உயர்ந்த எண்ணிக்கையினையும், (1,217 கொடுக்கல் வாங்கல்கள்) உயர்ந்த பெறுமதியினையும் (ரூ.224 பில்லியன்) பதிவு செய்தது. 2007இல் கொடுக்கல்வாங்கல்களின் நாளாந்த சராசரி அளவு மற்றும் பெறுமதி முறையே 801 மற்றும் ரூ.88 பில்லியனாக இருந்தன.

சுவிப்ற் உட்கட்டமைப்பின் மாற்றங்களுடன் இணைந்து செல்லும் வகையில், அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையானது 2007ஆம் ஆண்டில் சிஏஎஸ் 3.40 வாசகத்திற்கு தரமுயர்த்தப்பட்டது. இதன்படி அதேநேரே மொத்தத் தீர்ப்பனவு முறைமையால் பயன்படுத்தப்பட்ட கிடைப்பனவுத் தரவுத் தளம் 'வின்டோஸ் 2003' வாசகமாக மாற்றப்பட்டது.

2007 திசெம்பர் இறுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் மத்திய வங்கி, 23 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 8 வங்கியல்லா முதனிலை வணிகர் கம்பனிகள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் வரையறுக்கப்பட்ட தனியார் மத்திய வைப்பக முறைமை என்பவற்றை உள்ளடக்கிய 34 பங்குபற்றுனர்கள் காணப்பட்டனர்.

### 17.2 வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவத்தின் கீழான வணிகங்களின் தீர்ப்பனவுகள்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் வெளிநாட்டு நாணயமாற்று, தங்கம் மற்றும் வெளிநாட்டு பிணையங்கள் தீர்ப்பனவு பிரிவு, பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காக பின்தள காரியாலய செயற்பாடுகளில் திறைசேரி வியாபார அறை முகாமைத்துவ முறையினூடாக தொழிற்பாட்டை முன்னெடுத்தது.

பிரிவானது 7,320 தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை அமுல்படுத்தியதுடன் தீர்ப்பனவுப் பிரச்சனைகளையும் தீர்த்தது. 2007ஆம் ஆண்டுக் காலத்தில் பிரிவானது திறைசேரி வணிக அறை முகாமைத்துவ முறையின் பின்தள காரியாலய அளவீட்டைப் பூரணப்படுத்துவதிலும் ஈடுபட்டது.

### 17.3 திறந்த சந்தை தொழிற்பாடுகளின் கீழ் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவு

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவானது மத்திய வங்கியுடன் இணைந்து லங்கா தீர்ப்பனவு பங்குபற்றுனர்களினால் மேற்கொள்ளப்பட்ட திறந்த சந்தைத் தொழிற்பாட்டுக் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பதை 2007இலும் தொடர்ந்தது. இப்பிரிவானது ரூ.1,234 பில்லியன் பெறுமதியான 3,260 மீள் கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள், ரூ.172 பில்லியன் பெறுமதியான 235 நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ரூ.116 பில்லியன் பெறுமதியான 630 உடனடி விற்பனைகளைத் தீர்ப்பனவு செய்தது. இப்பிரிவானது மேலும் லங்கா செட்டில் பங்குபற்றுனர்கள் பெற்றுக் கொண்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதித் தீர்ப்பனவின் கண்காணிப்பைத் தொடர்ந்தது.

### 17.4 சுவிப்ற் தொடர்பூட்டல்கள்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் சுவிப்ற் தொடர்பூட்டல் பிரிவானது மத்திய வங்கியின் வெளிச் செல்லும் மற்றும் உள்வரும் சுவிப்ற் தகவல்களுடன் தொடர்புடைய செயற்பாடுகளை 2007இலும் தொடர்ந்து கையாண்டது. மீளாய்வின் கீழான ஆண்டில் மத்திய வங்கியால் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் மொத்த எண்ணிக்கை 22 சதவீதத்தால் அதிகரித்தது. பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தத் தகவல்களில் 15 சதவீதமானவை மத்திய வங்கியின் சொந்தக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடையவை. மிகுதி லங்கா செட்டில் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புபட்டிருந்தன. மத்திய வங்கியால் வெளி அனுப்பப்பட்ட செய்திகளின் மொத்த எண்ணிக்கை 20 சதவீதத்தினால் அதிகரித்தது.

இந்தப் பிரிவானது தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட மத்திய வங்கியின் சுவிப்ற் கட்டமைப்பின் கீழ்வரும் நவீனமயப்படுத்தல் கருதி உதவி செய்தது.

- சுவிப்ற் இணைவு நுழைவு வாசகம் 6.0.0 ஐ நிறுவுதல்;
- எஸ்ஏஏ/ எஸ்ஏஈ/ ஆர்எம்ஏ தொகுதி வாசகம் 6.0.30 ஐ பூரணப்படுத்தல்;
- இருபுடைய முதன்மை செலாவணியிலிருந்து பகிரங்க முதன்மை உட்கட்டமைப்பிற்கு மாறுதல்; அத்துடன்
- சுவிப்ற் வலையமைப்பு கட்டம் 2இன் கீழ் மத்திய வங்கியின் பரிசோதனை மற்றும் பயிற்சி செயன்முறைக்காக தொடர்புடமை முகாமைத்துவ பிரயோகங்களை பயன்படுத்துதல்.

**அட்டவணை**

**ஏனைய ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளுடனான இலங்கையினுடைய வர்த்தகம் மற்றும் ஆ.தீ.ஒ கொடுக்கல் வாங்கல்கள்**

| | 2006 | 2007 |
|---|---|---|
| ஆ.தீ. ஒன்றியத்தினூடாக வழிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள் | 267.9 | 337.1 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் | 67.9 | 78.7 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளிலிருந்தான இலங்கையின் இறக்குமதிகள் | 321.2 | 403.7 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளுடனான இலங்கையின் மொத்த வர்த்தகம் | 389.1 | 482.4 |
| தேசிய ஆ.தீ. ஒன்றிய தீர்ப்பனவுகள் | 235.9 | 293.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### 17.5 ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல் வாங்கல்கள்

ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக மேற்கொள்ளப்பட்ட இலங்கை கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2006இன் ரூ.268 பில்லியனிலிருந்து 2007இல் ரூ.337 பில்லியனாக 25.8 சதவீதத்தால் அதிகரித்தது. இது பிரதானமாக இந்தியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளிலிருந்தான அதிகரித்த எண்ணெய் இறக்குமதிகளால் ஏற்பட்டதாகும்.

2006 காலப்பகுதியில் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியப் பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் மொத்த ரூபாய்ப் பெறுமதி 24.4 சதவீதத்தால் அதிகரித்துடன் 2007இல் பெறுமதி ரூ.293.5 பில்லியனாகக் காணப்பட்டது.

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் 36வது கூட்டம் 2007 மேயில் டாக்காவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பின்வருவனவற்றைப் பரீட்சிப்பதற்காக அனைத்து உறுப்பினர் நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகளைக் கொண்ட தொழில்நுட்பக் குழுவொன்றை அமைப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அ) ஆ.தி. ஒன்றிய கொடுக்கல் வாங்கல்களுக்காக பல்நாணயத் தீர்ப்பனவுத் தெரிவின் சாத்தியம் ஆ) ஆ.தி.ஒன்றிய கணக்குகளில் போதுமான மீதியைப் பேணும் பொருட்டு, அங்கத்துவ நாடுகளிலுள்ள வர்த்தக வங்கிகள் தங்களுடன் கணக்குகளைப் பேணும் ஏனைய வர்த்தக வங்கிகளின் கணக்கிற்கு வட்டி வழங்குவதை ஊக்குவிப்பதற்காக வழங்கப்படக்குகூடிய ஊக்குவிப்புப் பொதிகள் தொடர்பான முன்மொழிவு. ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய

தொழில்நுட்பக் குழுக்கூட்டம் இலங்கை மத்திய வங்கியில் 2007 யூலை 5 அன்று நடைபெற்றதோடு கீழ்வரும் நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

(அ) தொழில்நுட்பக் குழுவினால் செய்யப்பட்ட விதந்துரைப்புகளை, தொடர்பான ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளின் ஆர்வலர்களுடன் (வங்கிகள், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள், வர்த்தக சபைகள்) கலந்துரையாடுவது.

(ஆ) நாணயக்கொள்கை, மேற்பார்வை வாய்ப்புக்கள் அதேபோன்று தொழிற்பாட்டு இடர்நேர்வைக் குறைக்கும் நோக்கில் ஆ.தீ.ஒன்றிய பொறிமுறையின் கீழ் தீர்ப்பனவு மீதிகளின் பிற்போடப்பட்ட தேறிய தீர்ப்பனவுகள் தொடர்பான பிரச்சனைகளை, தொடர்பான மத்திய வங்கிகளில் கலந்துரையாடுவதற்கு ஆரம்பித்தல்.

(இ) பெறுபேறுகளையும் அவசியமானவிடத்து திருத்தப்பட்ட விதந்துரைப்புக்களையும் எதிர்காலக் கூட்டங்களில் தொழில்நுட்பக் குழுவிற்கு அறிக்கையிடல்.

(ஈ) ஏற்றுக் கொள்ளப்பட்ட விதந்துரைப்புக்களை ஆ.தீ.ஒன்றிய பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடல்.

மேற்கூறிய தீர்மானங்களின் நடைமுறைப்படுத்தலில் இலங்கை மத்திய வங்கியானது, ஆ.தீ.ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் அனைத்து ஆர்வலர்களுக்கிடையில் (ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள், வர்த்தக வங்கிகள் மற்றும் மத்திய வங்கியின் பொருத்தமான உள்ளகப் பகுதியினர்) 3 தொகுதி வினாக் கொத்துக்களை விநியோகிப்பதற்காக வடிவமைத்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் ஆ.தீ.ஒன்றிய பிரிவு இந்த வினாக் கொத்துக்களை ஆர்வலர்களுக்கிடையில் விநியோகித்ததுடன் ஒவ்வொரு வகை ஆர்வலர்களிடமிருந்தும் பதில்களைப் பெற்றுக் கொண்டது. இலங்கை மத்திய வங்கியானது 2008இல் இந்தியாவில் நடத்தத் திட்டமிட்டிருக்கும் அடுத்த ஆ.தீ.ஒன்றிய தொழில்நுட்பக் குழுக் கூட்டத்தின் புதிய கொள்கை வடிவமைப்பை வசதிப்படுத்தும் பொருட்டு இத்தகைய பதில்களை தொழில்நுட்பக் குழுவின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் விநியோகித்தது.

## 17.6 கொடுப்பனவு முறைமைக் கொள்கை மற்றும் மேற்பார்வை

மத்திய வங்கியின் உபாயத்திட்டத்துடன் இணைந்து செல்லத்தக்க வகையில் 2007 காலப்பகுதியில் கொடுப்பனவுகள் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் கொடுப்பனவு முறைமைக் கொள்கை மற்றும் மேற்பார்வைப் பிரிவானது மத்திய வங்கியின் கொடுப்பனவு முறைமைக் கொள்கை மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பை உறுதிப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்தியது.

- முறையான முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையான லங்கா தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாட்டு ஆற்றலை மேலும் வலுப்படுத்தல்.
- ஆதிக்கம் செலுத்துகின்ற காசு அல்லது பத்திரம் அடிப்படையிலான சில்லறை கொடுப்பனவுகளிலிருந்து இலத்திரனியல் கொடுப்பனவுகளை நோக்கி செல்வதை மேலும் மேம்படுத்தல்
- வங்கிகள் மற்றும் அவற்றின் வாடிக்கையாளர்கள் ஒப்பீட்டளவில் குறைந்த இடர்நேர்வைக் கொண்ட கொடுப்பனவுக் கருவிகள் மற்றும் முறைமைகளைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தல்
- கொடுப்பனவுகள் தீர்ப்பனவுகள் முறைமையின் செலவுச் சிக்கனம் மற்றும் வினைத்திறன் நன்மைகள் வாடிக்கையாளருக்கு கிடைக்கும் விதத்தில் வங்கிகள் நடந்து கொள்ளுதல்.

லங்கா செட்டில் முறைக்கான இடர்நேர்வு உருவாக்கத்திற்கான பங்கேற்பாளர்களின் தொழிற்பாடுகள் தோல்வியுறுவதற்கான சாத்தியங்களைக் கருத்திற் கொண்டு, கொடுப்பனவு மற்றும் மைய வங்கித்தொழில் போன்ற இன்றியமையாத தொழிற்பாடுகள் தொடர்ச்சியாக தடங்கலுக்குட்படும் நிலைமைகளில் ஒவ்வொரு பங்கேற்பாளர்களினதும் தயார் நிலைமையை மதிப்பிடும் விதத்தில் மேற்பார்வை நடவடிக்கைகள் நெறிப்படுத்தப்பட்டன. 2007ஆம் ஆண்டு காலத்தில் கொள்கை மற்றும் மேற்பார்வைப் பிரிவானது லங்கா செட்டில் பங்குபற்றுனர்களின் தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தை மதிப்பிட்டதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களின் தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தை முன்னேற்றுவதற்கு அவர்களை வழிநடத்தியது. 2007 செத்தெம்பரில் பிரிவானது மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப திணைக்களம் மற்றும் வங்கி மேற்பார்வைத் திணைக்கள அலுவலர்களின் உதவியுடன் லங்கா செட்டில் பங்குபற்றுனர்களின் அனர்த்த மீட்பு தளங்களைத் தலக் கண்காணிப்புச் செய்தது.

காசோலைப் பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் பொருத்தமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தும் நோக்கில் கொள்கை மற்றும் கண்காணிப்புப் பிரிவானது, காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் தெளிவானதும் விளக்கமானதுமான விதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கைநூலை வழங்குவதற்கு லங்கா கிளியரிற்கு ஆலோசனையையும் உதவியையும் வழங்கியது.

காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறையின் கீழ், வாடிக்கையாளர்கள் காசோலைப் பெறுகைகளை ரி + 1 இற்கிடையில் (ரி என்பது காசோலையொன்று தீர்ப்பனவிற்காக லங்கா கிளியரில் பெறப்படுகின்ற நாளாகும் 1 என்பது அடுத்த வியாபார நாளைக் குறிக்கும்) பெறுவதற்கான வசதியளிக்கும் பொதுமக்கள் கொள்கை குறிக்கோளினை கருத்திற் கொண்டு தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைப் பெறுகைகளை அவர்களின் வாடிக்கையாளர் கணக்குகளில் ரி + 1 அன்று வரவு வைப்பதனை உறுதிப்படுத்துவதற்காக 2007 நவெம்பரில் பங்கேற்கும் வங்கிகளின் காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக்குறைப்பு முறைக்கு பணிப்புரைகளை வரைந்து வழங்குவதில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் ஈடுபட்டிருந்தது.

மேலும், கொள்கை மற்றும் மேற்பார்வைப் பிரிவு, நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பின் அபிவிருத்தியினை பேணும் நோக்குடன் வழிகாட்டல் (2007 -

2010)இன் நடவடிக்கைத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்கு வசதியளிப்பதற்காக கூடியளவு நேரத்தினை ஒதுக்கியது.

வழிகாட்டலை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் விதத்தில் 2007இல் பிரிவானது பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொண்டது:

- லங்கா செட்டில் முறையின் தொடர்பூட்டல் உட்கட்டமைப்பான சுவிப்ற் வலையமைப்புடன் தொடர்பூட்டுவதற்காக, லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் முதனிலை மற்றும் அனர்த்த மீட்பு தலங்களில் கூடியளவு சிக்கனமானதும் பாதுகாப்பானதுமான பொது தொடர்பூட்டல் நிலையமொன்றினை வழங்குவதற்காக உள்நாட்டு சுவிப்ற் பணியகமென வரையறுக்கப்பட்ட நிதியியல் பணிகள் பணியகத்தினை நிறுவுவதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியது.
- விரைவாக மாற்றமடைந்து வரும் பணம், கொடுப்பனவு, தீர்ப்பனவு மற்றும் தீர்த்தல் பணிகளை வழங்குவோரை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டிய தேவை, மற்றும் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகள் சட்டத்தில் இத்துறைகள் தொடர்பாக மத்திய வங்கியின் அதிகாரம் தொடர்பாக தெளிவான தன்மை போதாமல் இருந்தமை நிதிதிட்டமிடல் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைச் சட்டத்தினால் அமைச்சருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணம், கொடுப்பனவு தீர்ப்பனவு மற்றும் தீர்ப்பனவு பணிகள் வழங்குவோர் ஒழுங்குவிதிகள் மேதகு சனாதிபதியினால் விடுக்கப்பட்டன. இவ்வொழுங்கு விதிகள் 2007 யூன் 27ஆம் திகதிய அரச வர்த்தமானி இலக்கம் 1503/11இல் வெளியிடப்பட்டன; அத்துடன்
- இவ்வொழுங்கு விதிகளினால் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கொள்கை மற்றும் மேற்பார்வைப் பிரிவு, அட்டைகளை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் செய்முறைப்படுத்தப்பட்டு, தீர்ப்பனவு செய்யப்பட்டு தீர்க்கப்படுகின்ற அட்டைகளினதும் முறைகளினதும் பாதுகாப்பு மட்டத்தினை உயர்த்துவதற்காக இலங்கையில் அனைத்து பணி வழங்குவோர் மீதான குறைந்தபட்ச முன்மதியுடைய தேவைப்பாடுகளை நிர்ணயிப்பதற்காக அட்டையை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு கருவிகளின் மீதான பணிப்புரை ஒன்றினை வரைந்திருக்கிறது. இப்பணிப்புரை 2008இன் ஆரம்பத்தில் விடுக்கப்படவுள்ளது.

சார்க் உறுப்பினர் நாடுகள் அவர்களது தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையினை சீர்திருத்துவது தொடர்பாக அதிகரித்து வரும் ஈடுபாடு, சார்க் பிராந்திய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுமுறை அபிவிருத்திகளைப் பேணுவதற்கான கூட்டு பிராந்திய முயற்சியின் நன்மைகளை அங்கீகரிப்பது தொடர்பாக வளர்ந்து வரும் கரிசனை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு பிராந்திய கொடுப்பனவு முனைவுகள் தொடர்பான சார்க் நிதிய மாநாடு ஒன்றினை 2007 யூலையில் நடத்துவதற்கு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் ஒழுங்குகளைச் செய்தது. சார்க் பிராந்திய கொடுப்பனவு முனைவினை உருவாக்குகின்ற முன்மொழிவிற்கு சார்க் நிதிக் குழுவின் ஆளுநர்கள் ஒப்புதலளித்தமையின் காரணமாக இம்மாநாடு சார்க் பிராந்தியத்தின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறை அபிவிருத்தியில் ஒரு மைல் கல்லாக விளங்குகின்றது. 2008இல் மத்திய வங்கி சார்க் கொடுப்பனவு சபையின் இணைத் தலைமை மற்றும் மத்திய வங்கியில் அதன் செயலகத்தினை நிறுவுதல் என்பனவற்றின் மூலம் சார்க் பிராந்திய கொடுப்பனவு முனைவினை உருவாக்குவதில் முன்னிலை வகிக்கும்.

## 18. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது 2007 சனவரி 1 இல் உருவாக்கப்பட்டது. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் குறிக்கோள்கள் இரண்டு பிரிவுகளைக் கொண்டிருந்தன. வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளை அவற்றின் பயனுறுதியை முன்னேற்றும் நோக்கில் அவற்றின் தாக்கத்தினை மீளாய்வு செய்தலும் மதிப்பிடலும் மற்றும் மத்திய வங்கியின் உபாயத் திட்டத்தின் வளர்ச்சியை உரியகாலத்திலும் முகாமைத்துவத்தின் தரம் சார்ந்த எதிர்பார்ப்புகளுக்கு அமைவாகவும் நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யும் நோக்கில் கண்காணித்தலும் மீளாய்வு செய்தலும் என்பன அவ்விரண்டு குறிக்கோள்களாகும்.

வங்கி 2007 - 2011 காலப்பகுதிக்காக நடுத்தரகால உபாயத்தித்திட்டத்தை வடிவமைத்துள்ளது. இது உபாயக் கொள்கைகளின் அடிப்படையில் வங்கிகள் அதன் பிரதான வணிகத்துறைகளில் பின்பற்றத் திட்டமிட்டிருக்கின்ற உபாயங்களை அடையாளங் கண்டது. இலக்குகள் காலவரையறைக்குள்ளும், ஒவ்வொரு துறையினதும் செயற்பாடுகளை அளவிடக்கூடிய வகையிலும் நிர்ணயிக்கப் பட்டன. இத் திட்டத்தின் வளர்ச்சியானது குறிப்பாக கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புக்குப் பொறுப்பான துணை ஆளுநரால் தலைமை வகிக்கப்பட்ட ஒவ்வொரு திணைக்களத் தலைவருடனுமான காலாந்தரகூட்டங்களின் ஊடாக, கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தால் மீளாய்வு மற்றும் காலாந்தர கண்காணிப்புச் செய்யப்பட்டது. இந்த முன்னேற்றமானது ஆளுநரால் தலைமை வகிக்கப்பட்ட வங்கியின் கம்பனி முகாமைத்துவத்தை உள்ளடக்கிய உபாயத்திட்ட மீளாய்வுக்குக் குழுவுக்கு அறிக்கையிடப்பட்டது. 2007இல் அத்தகைய இரண்டு சுற்றுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்தக் கூட்டங்கள் குறிப்பாக விலகிச் செல்லும் தன்மைகளை அடையாளங்கண்டு சரியான பாதையில் செலுத்தப்படுவதன் மூலம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதனை உறுதிப்படுத்துவதில் மிகக் காத்திரமான தன்மைகளைக் கொண்டிருந்தன.

இத்திட்ட நடைமுறைப்படுத்தலின் முதலாவது ஆண்டு வளர்ச்சியானது 2007 நவெம்பரில் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் ஆய்வினால் மீளாய்வு செய்யப்பட்டது. தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு திட்டமானது 2012வரை நீடிக்கப்பட்டதுடன் புதிய உபாயத் திட்டம் 2008 - 2012 வடிவமைக்கப்பட்டது.

கொள்கை மீளாய்வு நியதிகளைப் பொறுத்தவரை திணைக்களமானது கீழ்வரும் கொள்கைப் பத்திரங்களைப் பூர்த்தி செய்துள்ளது.

(i) தெரிவு செய்யப்பட்ட நுகர்வோர் பொருட்கள் மற்றும் உந்து ஊர்திகள் தொடர்பில் நாணயக் கடிதத்திற்கெதிரான அளவு வைப்புத் தேவை

(ii) நியதி ஒதுக்கு விகிதத்தின் நிலவறைக் காசுத் தேவைப்பாடுகள்

(iii) எதிர்கால சந்தை மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் வேளாண்மை உற்பத்திகளுக்கான வணிகப் பொருள் பரிமாற்றம் என்பவற்றின் உருவாக்கம் தொடர்பான முன் சாத்திய வள ஆய்வு

இதற்கு மேலதிகமாக, திணைக்களமானது வங்கியியல் நிறுவனங்களின் மேற்பார்வைச் செலவு தொடர்பான ஆய்வையும் பூர்த்தி செய்துள்ளது.

## 19. பணிமனை

வங்கியின் அலுவலர்களுக்கு போக்குவரத்து, தொடர்பூட்டல் போன்ற துணைப் பணிகளை வழங்குவதற்கு மேலதிகமாக, 2007இல் பணிமனைத் திணைக்களம் வங்கிப் பணிமனையினைப் பேணுவதனையும், சுத்தமாக வைத்திருப்பதனையும் தொடர்ந்தும் மேற்கொண்டது.

குறைந்த செலவில் பணிகளை வினைத்திறனுடன் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பேணல் வேலைகளில் பெரும் பகுதியும், போக்குவரத்துப் பணிகளில் ஒரு பகுதியும் வெளி மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

விடுதிக் கட்டடத்தின் கட்டுமான வேலைகள் முன்னேற்றம் கண்டுவரும் நிலையில், வங்கியானது 66 பங்குபற்றுனர் அறைகளுக்கும் குளிரூட்டல் வசதி, சுடுநீர்முறை, தொலைபேசி முறை போன்ற 3 நட்சத்திர தர மட்டத்தில் வசதிகளை மேம்படுத்த விரும்பியதால் கட்டுமான வேலைகள் மாற்றியமைக்கப்பட்டதோடு இது "செவரின் ரெசிடன்சஸ்" என மீளப் பெயரிடப்பட்டது. இந்தச் செயற்றிட்டமானது 2008 மாச்சு இறுதியில் பூர்த்தியாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதோடு முதன்முறையாக வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தில் வதிவிட வசதிகளுடன் கூடிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

அநகாரிக தர்மபால மாவத்தையின் விரிவாக்கத்தின் காரணமாக மாத்தறை பிராந்திய அலுவலகத்தின் ஒரு பகுதி இடிக்கப்பட்டதுடன் இந்த இடிப்பு வேலையுடன் பிராந்திய அலுவலகக் கட்டடம் முழுவதும் ரூ.30 மில்லியன் செலவில் புதுப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கட்டுமான வேலைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கொழும்புக் கோட்டையில் அமைந்துள்ள மாற்றுவேலைச் சதுக்கத்தின் அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டதோடு அங்கு வங்கி பல்மாடி ஊர்திகள் தரிப்பிடத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொண்ட 134 பேர்ச் பரப்பளவிலான நிலத்திற்கான குத்தகை உரிமையை வங்கி கொண்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியானது 400 உந்துஊர்திகள் மற்றும் 10 பேருந்துகளை நிறுத்துவதற்கான தரிப்பிட வசதிகள் மற்றும் 10,000 சதுரஅடி பரப்பளவைக் கொண்ட அலுவலக இடத்தையும் இந்த நிலத்தில் கொண்டிருக்கும்.

இத் திணைக்களம் வங்கித் தலைமையகத்திற்கு அருகாமையில் உள்ள வரலாற்றுச் சின்னமான வெளிச்ச வீட்டு மணிக்கூட்டுக் கோபுரத்தை தொடர்ந்தும் பேணி வருகின்றது.

## 20. பொதுப்படுகடன்

அரசின் முகவர் என்ற ரீதியில் பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் வழங்கல் மற்றும் முகாமை செய்தலுடன் தொடர்புபட்ட அதன் பொறுப்புக்களை முன்னெடுத்து 2007ஆம் ஆண்டு காலத்தில் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் பதிவு செய்தது. மத்திய வங்கியின் உபாயத்திட்டத்துடன் இசைந்து செல்லத்தக்க வகையில் பொதுப்படுகடன் திணைக்களமானது நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ உபாயத்தை 2007இல் வடிவமைத்தது. இந்தப் படுகடன் முகாமைத்துவ உபாயமானது அ) படுகடன் முதிர்வுகளின் நீண்டகாலத் திரட்சியை இலகுபடுத்தல், ஆ) முறிகள் சந்தையின் பிரிவுகளைக் குறைத்தல், இ) அடித்தள அளவு முறி தொடரை அறிமுகப்படுத்தல் மற்றும் அளவுமட்டக்குறி விளைவு வளையியை அபிவிருத்தி செய்தல், ஈ) நம்பகமான திரவத்தன்மை கொண்ட படுகடன் சந்தையை அபிவிருத்தி செய்தல், உ) பன்முகப்படுத்தப்பட்ட படுகடன் கருவிகளை அறிமுகப்படுத்தல், ஊ) முதலீட்டாளர்களின் தளத்தை விரிவுபடுத்தல் மற்றும் எ) முதனிலை வணிகர் முறையை மீள்கட்டமைத்தல் போன்றவற்றுக்கான நடுத்தரகால உபாயங்களைக் கொண்டிருந்தது.

வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன்களின் முதிர்வு அமைப்பானது, குறுகிய முதிர்ச்சியைக் கொண்ட தோற்றமொன்றை நோக்கி குறிப்பிடத்தக்களவிற்கு ஒன்று சேர்ந்த படுகடன் முதிர்வுகள் இருப்பதைக் காட்டியது. இந்த ஒன்று சேர்ந்த திரட்சிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக படுகடன் திரட்சி நிகழ்ச்சித்திட்டமொன்று வடிவமைக்கப்பட்டதுடன் இதன் பாதிப்புத் தன்மையை மதிப்பிடுவதற்காக வெள்ளோட்டம் ஒன்றும் இந்த ஆண்டில் நடாத்தப்பட்டது. கடந்த ஆண்டுகளைப் போலவே பொதுப்படுகடன் திணைக்களமானது முறிகள் சந்தையில் காணப்பட்ட உயர்ந்தளவான பிரிவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான அளவீடுகளை மேற்கொண்டது. இது ஏற்கனவேயிருந்த திறைசேரி முறிகள் தொடரை மீளத்திறக்கும் கொள்கையை தொடர்ந்த அதேவேளை, சந்தைக்கு புதிய முறிகள் தொடர்களை அறிமுகப்படுத்துவதை மட்டுப் பட்டுத்தியது. இதன் விளைவாக திறைசேரி முறித் தொடர்களின் மொத்த எண்ணிக்கை 2006இல் 53 இலிருந்து 2007இறுதியில் 42 ஆகக் குறைவடைந்தது. முதனிலை வணிகர் முறைமையை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, பொதுப்படுகடன் திணைக்களமானது அவர்களின் செயற்பாடுகளை பன்முகப்படுத்தும் பொருட்டு முதனிலை வணிகர் முறையை மீளக் கட்டமைப்பதற்கான முயற்சிகளை எடுத்தது.

2007ஆம் ஆண்டில் அடையப்பட்ட மற்றுமொரு மைல்கல் யாதெனில் முதலாவது பன்னாட்டு முறி வெளியீட்டின் வெற்றிகரமான ஆரம்ப வழங்கலாகும். இது ஐ.அ.டொலர்கள் 500 மில்லியன் அடித்தள அளவீட்டுக் குறியுடனான 8.25 சதவீத நறுக்கு வீதத்துடனும் 5 ஆண்டுகள் முதிர்வு காலத்துடனும் வழங்கப்பட்டது. இந்த முதலாவது பன்னாட்டு

அரச முறி வழங்கல் முழுமையாக வெற்றியளித்ததோடு வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட மூன்று மடங்கிற்கு மேலான உதவுதொகைகளைப் பெற்றது. உள்நாட்டுச் சந்தையின் வட்டி வீதங்கள் மீதான அழுத்தத்தைக் குறைக்கும் நோக்கிலும், அரச பிணையங்கள் சந்தையின் முதலீட்டாளர் தளத்தை விரிவாக்கும் நோக்கிலும் பன்னாட்டு முதலீட்டாளர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவிருந்த ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளின் ஆகக் கூடுதலான எல்லையானது ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்ட ஆகக் கூடுதலான எல்லையான 2006இன் 5 சதவீதத்திலிருந்து 2007 நவெம்பரில் வெளிநின்ற முறிகள் இருப்பில் 10 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. பன்னாட்டு முதலீட்டாளர்கள் நுழைவுத் தடையாக இருந்த குறைந்தபட்சம் ஓராண்டு பிடித்து வைத்தல் காலம், முதிர்வு காலம் மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் முறிகளைப் பயன்படுத்துவது தொடர்பான கட்டுப்பாடுகள் போன்றன 2007ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் விலக்கிக் கொள்ளப்பட்டன. ஓராண்டு காலத்திற்கென முன்னைய ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான முறிகள் 2007 பெப்புருவரியில் முடிவுறுத்தப்பட்டன.

அரச பிணையங்களைப் பதிவுடன் தொடர்புபட்ட பங்குபற்றும் வங்கிகளினதும் முதனிலை வணிகர்களினதும் கொடுக்கல்வாங்கல் செலவுகளைக் குறைக்கும் பொருட்டு, பொதுப்படுகடன் திணைக்களமானது சிறிய பெறுமதி கொண்ட கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்காக சந்தைப் பங்குபற்றுனர்களுக்கு இலங்கை மத்திய வங்கி பரந்த கணனி வலையமைப்பை அறிமுகப்படுத்தியது. இது இலங்கை மத்திய வங்கியில் பேணப்பட்ட மத்திய வைப்பக முறையில் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் பதிவு செய்ததன் மூலம் அரச பிணையங்கள் சந்தையில் காணப்பட்ட சிறிய முதலீட்டாளர்களின் பாதுகாப்பை உயர்த்தியது. இதனோடு ஒத்திசைந்து செல்லும் வகையில் இந்த அதிகார பூர்வ பதிதல் தேவைப்பாடுகளுடன் இணங்காத எவருக்கும் தண்டனை விதிக்கும் வகையில் லங்கா செக்குயர் முறையின் ஒழுங்கு விதிகள் திருத்தப்பட்டன.

அரச பிணையங்களின் முதலீட்டாளர் தளத்தை விரிவாக்கும் நோக்கில் பொதுப்படுகடன் திணைக்களமானது பத்திரிகை விளம்பர பிரசாரங்களுடன் இணைந்ததான தீவிரமான முதலீட்டாளர் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. இந்த விழிப்புணர்வு பிரசாரத்துடன் இணைந்து செல்லத்தக்க விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களமானது பிரதேச மட்டங்களில் அரச பிணையங்களை சில்லறை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கான சில்லறை விற்பனை நிலையங்களை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகளை வரையறுக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைத்துவக் கம்பனி மற்றும் லங்கா கிளியர் லிமிடெட் (தனியார்) என்பவற்றுடன் இணைந்து மேற்கொண்டது. 2007 ஒகத்து 1ஆம் நாளன்று நாடளாவிய ரீதியில் அத்தகைய 13 விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன. 2007ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் மட்டம் மற்றும் முகாமை தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு பரப்பும் நோக்கில் பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் முகாமைத்துவம் தொடர்பான தனது முதலாவது வருடாந்த வெளியீட்டை வெளியிட்டது. மேலும் இது பொதுப்படுகடன் முகாமைத்துவ செயற்பாட்டில் உயர்ந்தமட்ட வெளிப்படையான தன்மையைப் பேண உதவும். கொள்கை வகுப்பாளர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் அரச பிணையங்கள் சந்தையின் தொழிற்பாட்டாளர்கள் ஆகியோரின் அறிவை உயர்த்துவதற்காக பொதுப்படுகடன் திணைக்களம், ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் பசுபிக்கிற்கான பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பின் ஒத்துழைப்புடன் இயலளவைக் கட்டியெழுப்பும் செயலமர்வினை ஒழுங்கு செய்திருந்தது.

மேலும் பொதுப்படுகடன் திணைக்களம் முதற்காலாண்டுப் பகுதியில் இரண்டு பணிகளுக்கு அதாவது நாட்டின் தரமிடல் மீதான பிட்ச் றேட்டிங் மற்றும் ஸ்டான்டட் அன்ட் புவரின் மீளாய்விற்கு வசதியளித்தது.

## 20.1 2007 இன் அபிவிருத்திகள்

### கடன்பாட்டு இலக்குகளும் உபாயமும்

2007ஆம் ஆண்டிற்காக நாடாளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட 2006ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி, மொத்த கடன்பாட்டு எல்லை ரூ. 655 பில்லியனாக நிர்ணயிக்கப்பட்டது. இதில் உள்நாட்டு மூலங்களிலிருந்து ரூ.433 பில்லியனையும், பன்னாட்டு மூலங்களிலிருந்து ரூ. 202 பில்லியனையும் திரட்டுவதற்கு மதிப்பிடப்பட்டுள்ளது. மற்றைய ரூ.20 பில்லியன் எதிர்பாரா நிகழ்வுகளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டு காலத்தில் பொதுப்படுகடன் திணைக்களமானது ஏட்டுப் பெறுமதி ரீதியில் உள்நாட்டு மூலங்களிலிருந்து ரூ.411 பில்லியனையும் பன்னாட்டு மூலங்களிலிருந்து ரூ.199.7 பில்லியனையும் திரட்டியதோடு மொத்தக் கடன்பாடுகளை இலக்கிடப்பட்ட கடன்பாட்டு எல்லைக்குள் பேணியது. இருந்தபோதிலும், உயர்ந்த பணவீக்கம் மற்றும் இறுக்கமான நாணயக் கொள்கையுடன் ஒத்துச்செல்லும் விதத்தில் உள்நாட்டுச் சந்தையில் மேலோங்கிக் காணப்பட்ட உயர்ந்த விளைவு வீதங்களின் விளைவாக பொதுப்படுகடன் திணைக்களம் தனது ஆரம்ப கடன்பாட்டுத் திட்டத்திலிருந்து சிறிதளவு விலகி, குறுங்கால படுகடன் கருவிகள், சந்தைப்படுத்த முடியாத கருவிகள், பன்னாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் கருவிகள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான பன்னாட்டு முதலீடுகள் என்பவற்றில் பெருமளவு தங்கியிருந்தது. ஆகையால், ஆரம்ப கடன்பாட்டு இலக்குகளான ரூ.10 பில்லியன் மற்றும் ரூ.5 பில்லியனுக்கெதிராக முறையே ரூ.23.3 பில்லியன் ரூபாய்க் கடன்களாகவும், ரூ.37 பில்லியன் திறைசேரி உண்டியல்களாகவும் திரட்டப்பட்டது. மேலும், இலங்கை அபிவிருத்தி முறிகளூடாகத் திரட்டப்பட்ட தொகையானது ஆரம்பத்தில் இலக்கிடப்பட்ட ரூ.10.5 பில்லியனோடு ஒப்பிடும் போது ரூ.23.6 பில்லியனாக இருந்தது. இதற்கு மாறாக, திறைசேரி முறிகளினூடாக கடன் பெறுகைகளானது ஆரம்பத்தில் இலக்கிடப்பட்ட ரூ.356 பில்லியனுக்கெதிராக குறைந்த பெறுமதியான ரூ.302 பில்லியனைக் கொண்டிருந்தது. (ஏட்டுப் பெறுமதி நியதிகளில்) இருந்தபோதிலும் இந்த திறைசேரி முறிகளுள் 61 சதவீதமானவை 3 ஆண்டுகளுக்கு மேலான முதிர்வு காலத்தைக் கொண்டிருந்தமையானது பன்னாட்டு முதலீட்டாளர்கள் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களின் காரணமாக நீண்டகால முதலீடுகளில் முதலிட விரும்புவதைக் காட்டியது.

**2007இல் உள்நாட்டுப்படுகடனின் வழங்கலும் முதிர்ச்சியும்**

ரூ. மில்லியன்

| | முதிர்ச்சி | வழங்கல் | மீள்கொடுப்பனவுகள் | தேறிய வழங்கல் |
|---|---|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | 91 நாட்கள் | 358,882 | 354,834 | 4,048 |
| | 182 நாட்கள் | 75,716 | 52,165 | 23,551 |
| | 364 நாட்கள் | 97,810 | 74,454 | 23,356 |
| | ஏனையவை | 284,780 | 286,455 | (1,675) |
| | மொத்தம் | 817,188 | 767,908 | 49,280 |
| திறைசேரி முறிகள் | 1 ஆண்டு | 41,884 | 15,957 | 25,927 |
| | 2 ஆண்டுகள் | 75,614 | 64,531 | 11,083 |
| | 3 ஆண்டுகள் | 37,436 | 55,900 | (18,464) |
| | 4 ஆண்டுகள் | 39,623 | 37,100 | 2,523 |
| | 5 ஆண்டுகள் | 88,909 | 45,170 | 43,739 |
| | 6 ஆண்டுகள் | 85,937 | - | 85,937 |
| | 7 ஆண்டுகள் | 17,105 | - | 17,105 |
| | 11 ஆண்டுகள் | 14,677 | - | 14,677 |
| | மொத்தம் | 401,185 | 218,658 | 182,527 |
| ரூபாக் கடன்கள் | 2 வருடங்கள் | 4,461 | - | 4,461 |
| | 3/4 வருடங்கள் | 1 | - | 1 |
| | 3/6 வருடங்கள் | 6 | - | 6 |
| | 4/6 வருடங்கள் | 2 | - | 2 |
| | 3/7 வருடங்கள் | 2 | - | 2 |
| | 7/8 வருடங்கள் | - | 8,500 | (8,500) |
| | 3/10 வருடங்கள் | 18,824 | - | 18,824 |
| | மொத்தம் | 23,296 | 8,500 | 14,796 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 2 வருடங்கள் | 23,592 | - | 23,592 |
| | மொத்தம் | 23,592 | - | 23,592 |
| வெ.நா.வ.தொ பிரிவுகளிலிருந்தான கடன்கள் | 1 வருடம் | 11,637 | 11,077 | 560 |
| | 2 வருடங்கள் | 443 | - | 443 |
| | 3 வருடங்கள் | - | 3,401 | (3,401) |
| | மொத்தம் | 12,081 | 14,478 | (2,398) |
| மொத்தம் | | 1,277,341 | 1,009,544 | 267,797 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

திறைசேரி முறிகள் மீதான மொத்த பன்னாட்டு முதலீடுகள் ரூ.49.7 பில்லியனாக காணப்பட்டதுடன் இவற்றுள் 54 சதவீதமானவை 3 ஆண்டு காலத்திற்கு மேலான முதிர்வு காலத்தைக் கொண்டிருந்தன.

உள்நாட்டு ரூபாய்ச் சந்தையின் மீதான அழுத்தத்தை தளர்த்துவதற்காக, 2007ஆம் ஆண்டு காலத்தில் பன்னாட்டு நாணயக் கடன்பாடுகள் மீது அதிக நம்பிக்கை வைக்கப்பட்டது. இந்த ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட செயற்றிட்ட/ நிகழ்ச்சித்திட்ட கடன்கள் ரூ.156 பில்லியனாகும். இருந்தபோதிலும், வருட இறுதியில் ரூ.91.8 பில்லியன் பெறுமதியான கடன்கள் மட்டுமே பெற்றுக் கொள்ளப்பட்டது. இதற்கு மாறாக, வர்த்தகக் கடன்கள் ஆரம்ப இலக்கிடலான ரூ.46 பில்லியனைவிட அதிகளவில் அதிகரித்து 2007ஆம் ஆண்டில் ரூ.116.3 பில்லியனாகக் காணப்பட்டது. ரூ.56 பில்லியன் பெறுமதியான பன்னாட்டு முறி வழங்கல், பன்னாட்டவர்களுக்கு வழங்கப்பட்ட ரூ.36.8 பில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகளையும் இலங்கை வங்கி மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட ரூ.23 பில்லியன் பெறுமதியான கூட்டு கடன்களையும் உள்ளடக்கியிருந்தது. மேலும் ரூ.35.7 பில்லியனானது இலங்கை அபிவிருத்தி முறிகளை (23.6 பில்லியன்) வழங்கியதன் மூலமும், வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவு கடன்பாடுகளின் மூலமும் (ரூ.12.1 பில்லியன்) திரட்டப்பட்டது.

## 20.2 படுகடன் கருவிகளின் வழங்கல்

2007இல் பொதுப்படுகடன் திணைக்களம் 52 திறைசேரி உண்டியல்கள் ஏலங்களை நடாத்தியதுடன் மொத்த நியதிகளில் ரூ.817.2 பில்லியன் (முகப்புப் பெறுமதி நியதிகளில்) பெறுமதியானவற்றை வழங்கியது. குறுகியகால உண்டியல்கள் மீதான சந்தையின் வலுவான விருப்பத்தேர்வினைப் பிரதிபலித்து மொத்த வழங்கல்களில் 91 நாள் அல்லது அதற்குக் குறைந்த முதிர்வினைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் 67 சதவீதத்திற்கு வகை கூறின. இதன் விளைவாக, 2007இன் இறுதியில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் 54 சதவீதமானவை 3 மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த முதிர்வு காலத்தைக் கொண்டிருந்தன. பொதுப்படுகடன் திணைக்களமானது திறைசேரி முறி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக 70 ஏலங்களை நடாத்தியதன் மூலம் தனியார் இடமளிப்புகளூடாக ரூ.401 பில்லியனையும் (முகப்புப் பெறுமதியில்) திரட்ட முடிந்துள்ளது. இது ரூ.52 .1 பில்லியன் பெறுமதியான பன்னாட்டு முதலீடுகளையும் உள்ளடக்கியிருந்தது. இதற்கு மேலதிகமாக ரூ.23 பில்லியன் பெறுமதியான ரூபாய்க் கடன்களும் வழங்கப்பட்டன.

இரண்டு ஆண்டுகால முதிர்வைக் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் போட்டித்தன்மை வாய்ந்த விலைகோரல்களினூடாக இந்த ஆண்டில் வழங்கப்பட்டன. இந்த ஏலமானது ஐ.அ.டொலர் 215.25 மில்லியன் பெறுமதியான ஏலத் தொகையுடன் வழங்குவதற்கு முன்வைக்கப்பட்டதிலும் பார்க்க நான்கு மடங்கிற்கும் மேலான பெறுமதியைப் பெற்றதுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட விலைகோரல்கள் ஆறு மாத இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்துடன் 155.24 அடிப்படைப் புள்ளிகளைக் கூடியதான வட்டி வீதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மேலும், ஐ.அ.டொலர் 210 மில்லியன் பெறுமதியுடைய 3 ஆண்டு காலத்தினைக் கொண்ட 3 மாத கால இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்துடன் 155 அடிப்படைப் புள்ளிகளைக் கூட்டிய வட்டி வீதத்தில் ஒரு பன்னாட்டு வர்த்தக பெறுகையானது கூட்டுக் கடனினூடாகப் பெறப்பட்டது. இந்தக் கடனானது இலங்கை வங்கியால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

## 20.3 படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

2007இல் பொதுப்படுகடன் திணைக்களமானது ரூ.482 பில்லியன் பெறுமதியான வெளிநாட்டுப் படுகடன் மற்றும் உள்நாட்டுப் படுகடன்களை தீர்ப்பனவு செய்தது. இது ரூ.176 பில்லியன் பெறுமதியான வட்டிக் கொடுப்பனவுகளையும், ரூ.306 பில்லியன் பெறுமதியான கடன் மீள்செலுத்தல்களையும் உள்ளடக்கியிருந்தது. மொத்த உள்நாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளின் பெறுமதி ரூ.390 பில்லியனாக இருந்த அதேவேயையில் வெளிநாட்டுப்படுகடன் பணிக்கொடுப்பனவுகளின் பெறுமதி ரூ.92 பில்லியனாக இருந்தது.

## 20.4 விளைவு வீதங்களும் இரண்டாந்தர சந்தையின் செயலாற்றமும்

அண்மைய கடந்த காலங்களில் அவதானிக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் மீதான அதிகரித்துச் செல்லும் விளைவு வீதப் போக்கானது 2007இலும் தொடர்ந்தது. உயர்ந்த பணவீக்கம்

மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புகள், இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகள், அரசாங்கத்தின் உயர்ந்தளவான கடன்பெறுகைத் திட்டங்கள் என்பன ரூபாய்ச் சந்தையின் விளைவு வீதங்களின் அதிகரித்த போக்கிற்குப் பங்களிப்புச் செய்த பிரதான காரணிகளாகும். 2007 சனவரியிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியில் 91;182; 364 நாள் முதிர்வுகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதங்கள் முறையே 737, 720 மற்றும் 697 அடிப்படைப்புள்ளிகளால் அதிகரித்தது. அதே காலப்பகுதியில் 2-3 ஆண்டு முதிர்வு காலத்தினைக் கொண்ட திறைசேரி முறிகளது விளைவுகள் 422 அடிப்படைப்புள்ளிகளால் அதிகரித்தது. முதனிலைச் சந்தையின் வட்டி வீதக்கட்டமைப்பின் மேல் நோக்கிய நகர்வுடன் இணைந்ததாக இரண்டாம் நிலைச் சந்தையின் விளைவு வளையியும் இந்த வருடத்தில் அதிகளவால் மேல் நோக்கி இடம் பெயர்ந்தது.

இரண்டாம் தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் கொடுக்கல்வாங்கல்கள் 2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு முன்னேறி, குறுங்கால முதிர்வுகளுக்கான உறுதியான சந்தை முன்னுரிமை மேலோங்கியிருந்தமையைக் காட்டியது. உடனடிச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் கொடுக்கல்வாங்கல்கள் 66 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளையில், மீள்கொள்வனவுச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் கொடுக்கல் வாங்கல்கள் 102 சதவீதத்தினால் அதிகரித்தன. இரண்டாம் தரச் சந்தையில் திறைசேரி முறிகளின் உடனடிக் கொடுக்கல்வாங்கல்களும் முக்கியமாக பன்னாட்டு முதலீட்டாளர்களின் உயர்ந்தளவிலான பங்குபற்றுதல்கள் காரணமாக 30 சதவீதத்தினால் அதிகரித்தது. இருந்தபோதிலும், சந்தைப் பங்குபற்றுனர்கள் தங்களது அதிகரித்த திறைசேரி உண்டியல்களின் வைத்திருப்புக்களை மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்குப் பயன்படுத்தியதன் காரணமாக மீள்கொள்வனவுச் சந்தையில் திறைசேரி முறிகளின் கொடுக்கல்வாங்கல் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

### 20.5 பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையும் மத்திய வைப்பக முறையும் - லங்கா செகுயர்

பொதுப்படுகடன் திணைக்களமானது 23 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 8 வங்கியல்லாத முதனிலை வணிகர்கள், ஊழியர் சேமலாபநிதியம் மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமைகள் (தனியார்) லிமிடெட் என்பவற்றை உள்ளடக்கிய அதன் பங்குபற்றுனர்களுடன் லங்கா செகுயரின் தொழிற்பாடுகளை 2007இலும் தொடர்ந்தது. 2007இல் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினூடாக இடம் பெற்ற மொத்தக் கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கை 2006இன் 184,476 இலிருந்து 295,470 ஆக 60 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளையில் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூ.17,964,103 மில்லியனாக 57 சதவீதத்தால் அதிகரித்தது. மத்திய வைப்பக முறைமையில் பேணப்பட்ட பதிவு செய்த முதலீட்டாளர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை கூட 2006இன் 26,936 இலிருந்து 41,953 ஆக 56 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இந்த அபிவிருத்திகள் பிரதானமாக வலிமைமிக்க விழிப்புணர்வு பிரசாரங்கள், புதிய அரசாங்கப் பிணைகளின் மீள்விற்பனை நிலையங்களைத் திறந்தமை, குறைந்த பெறுமதியான கொடுக்கல்வாங்கல்களை இலவசமாகப் பதிவு செய்வதற்கான இலங்கை மத்திய வங்கியின் பரந்த வலையமைப்பின் அறிமுகம் மற்றும் பொதுப்படுகடன் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஏனைய பல வழிகாட்டல்கள் என்பனவற்றால் ஏற்பட்டனவாகும்.

### 20.6 முதனிலை வணிகர்களது மேற்பார்வை

பொதுப்படுகடன் திணைக்களமானது முதனிலை வணிகர்களது செயற்பாடுகளை தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு மற்றும் தலப்பரீட்சிப்புக்கள் ஊடாக தொடர்ந்தும் மேற்பார்வை செய்துவந்தது. 2007ஆம் ஆண்டு காலத்தில் ஆறு கிரமமான தலப் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் நிதியியல் அறிக்கைகளை மீளாய்வு செய்வதனூடாகவும் முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகளில் முதனிலை வணிகர்களது செயற்றிறனை கண்காணிப்பதனூடாகவும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

## 21. பிரதேச அபிவிருத்தி

2007இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வலுவான செலவுச் சிக்கனமான கொடுகடன்களை வழங்கும் விதத்தில் கொடுகடன் அதிகரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்து நிறைவேற்றுவதன் மூலம் வேளாண்மை, சிறிய, நடுத்தர மற்றும் நுண்பாக தொழில்துறைகள் நிதியினைப் பெற்றுக் கொள்வதனை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு அதன் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது. அனைத்தையுமுள்ளடக்கிய புதிய கொடை வழங்குநரால் நிதியிடப்படும் வறுமை ஒழிப்புத்திட்டம் தொடர்பான பேச்சு வார்த்தைகள் முடிவடைந்துள்ளதுடன் இது 2008இல் தொடங்கப்படவுள்ளது. மேலும், நுண்பாக நிதித்துறையில், வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி நிகழ்ச்சித் திட்டத்தில், இக்கடன் திட்டத்தில் மீளளிக்கப்பட்ட கடன்களை மீள பயன்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட சுழற்சிமுறை நிதியம் 2007இல் தொழிற்பாட்டிற்கு வந்ததுடன் இது நன்மை பெறுநர்களை உயர்ந்த மட்டத்தில் அடையும் விதத்திலும் மூலவளங்களை அவர்களுக்கு வழங்கும் விதத்திலும் வடிவமைக்கப்பட்டது. 2007இல் விலை இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கும், வேளாண்மைத்துறைக்கும் மேலும் நன்மைகளைக் கிடைக்கச் செய்வதற்கான வசதிகளை வழங்கும் பொருட்டு பண்டப்பரிமாற்றமொன்றினை நிறுவுவதற்கான சாத்தியங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் கண்டறிந்தது. மேலும், கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டதன் விளைவாக, அம்மாகாணத்திற்காக மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டமொன்றினை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பங்கேற்றது. இது பிரதேச அபிவிருத்தி விடயங்களில் அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் மதியுரைகளை வழங்கியதுடன், குறிப்பாக வேளாண்மை மற்றும் பாற்பண்ணை செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான சலுகை ரீதியான கொடுகடன் திட்டங்களினை நடைமுறைப்படுத்துவதற்கான இதன் விதந்துரைப்புக்கள் 2008 வரவு செலவுதிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ், பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தொழிற்படுத்துகின்ற மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் கொடுகடன் வழங்கல் நடவடிக்கைகளை இணைத்தல், முன்னோக்கிய விற்பனை

## அட்டவணை 1

## பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரதேச அபிவிருத்திக் கடன் வழங்கல் நிகழ்ச்சித் திட்டங்களின் பண்புகள்

| | செயற்றிட்டமும் நிறைவேற்றுக் காலமும் | நிதியிடல் மூலம் | பணித் திட்டங்கள் | நிதி ஒதுக்கீடு | கடன்பாட்டாளருக்கான ஆண்டு வட்டி வீதம் | பொருத்த மானவிடத்து மீளாய்வு வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | **வேளாண்மைத் துறை** | | | | | |
| 1.1 | இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் 2006-2014 | இலங்கை அரசாங்கம் | நிரந்தரப்பயிர்கள் துறையை வர்த்தக மயப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்று மேடை அபிவிருத்தி, அறுவடையின் பின்னான கையாளல், செயல்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் | ரூபா 1.2 பில்லியன் | 9% | ஏறத்தாழ 90% |
| 1.2 | தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) 2006-2018 | இலங்கை அரசாங்கம் | தேயிலை சிறு உடமையாளர்களின் வருமானத்தை நிலைத்து நிற்கும் அடிப்படையில் அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதிச் சந்தையின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல். இதன் தொடர்பில் தீங்குப் பகுப்பாய்வு மற்றும் மிக முக்கிய கட்டுப்பாட்டு அளவு சான்றிதழைப் பெறும் விதத்தில் தேயிலை தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துவதற்கான அடிப்படை உதவிகள் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. | ரூபா 1.1 பில்லியன் | 9% | ஏறத்தாழ 90% |
| 1.3 | புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் (தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டம்) | பங்கேற்கும் நிதி நிறுவனங்களின் சொந்த நிதியும் அரசாங்கத்தின் வட்டி உதவு தொகையும் | சிறிய வேளாண்மையாளருக்கான தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை வழங்குதல்.<br>- குறுகிய கால உற்பத்திக் கடன்<br>- நாற்றுக்கள் மற்றும் பயிர் மூலப்பொருட்களின் உற்பத்தி<br>- முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் வேளாண்மை பொருட்களை கொள்வனவு செய்தல் | பங்கேற்கும் நிறுவனங்கள் தமது சொந்த நிதி மூலம் வழங்கிய கடன்கள் | 8% | 90% இற்கு மேல் |
| 1.4 | கிருசி நவோதய திட்டம் (2007 மார்ச்சு - 2010 பெப்புருவரி இறுதி) | பங்கேற்கும் நிதி நிறுவனங்களின் சொந்த நிதியும் அரசாங்கத்தின் வட்டி உதவு தொகையும் | வேளாண்மையுடன் தொடர்பான கைத்தொழில் மற்றும் நுண்பாக மற்றும் சொட்டு நீர் பாசன உட்பட வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு நடவடிக்கைகளுக்கான நடுத்தரகால கடன்களின் ஏற்பாடு | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் சொந்த நிதியத்தினைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட கடன்கள் தொழிற்பாட்டு காலப்பகுதியில் வழங்கப்படும் மொத்த கடன்கள் ரூ.3,000 மில்லியன் என எதிர்பார்க்கப்படுகிறது | 8% | — |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **2.** | **சிறிய நடுத்தர தொழில்முயற்சித்துறை** | | | | | |
| 2.1 | மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம் (சுழற்சி நிதியம்) (2007-2009) | வே.அ.ப.நி. | மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு நிதியினை வழங்குவதன் மூலம் கிராமிய மற்றும் வேளாண்மைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துதல் | 2007இற்காக ரூ.77 மில்லியன் ஒதுக்கப்பட்டது. 2008இற்கான மேலதிக ஒதுக்கு எதிர்பார்க்கப்படுகிறது. | 10% | கடன்படுநர்கள் சலுகைக் காலத்தினை பெறுவர் |
| 2.2 | சப்பிரகமுவ மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) (2007-2010) | இலங்கை அரசாங்கம் | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகளை தரமுயர்த்துதல் | ரூபா 100 மில்லியன் | 10% | கடன்படுநர்கள் சலுகைக் காலத்தினை பெறுவர் |
| 2.3 | சுனாமிக்குப் பின்னைய தொடர் கொடுகடன் ஐரோப்பிய முதலீட்டு வங்கி ஒப்பந்தம் பீ கடன் திட்டம் (2006 - 2014) | ஐரோப்பிய முதலீட்டு வங்கி | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரவளவு தொழில் முயற்சிகள் தமது வியாபாரங்களை மீளத் தொடங்குவதற்கு ஆதரவளித்தல் | யூரோ 20 மில்லியன் | 9% | சலுகைக் காலம் |
| 2.4 | கட்டடவாக்கத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் (2007-2015) | ஏஜன்ஸ் பிரான்சைஸ் டெவலப்மன்ட் | கட்டடவாக்கம், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் தரமிடப்பட்ட கம்பனிகளினால் சுனாமிக்குப் பின்னரான கட்டடவாக்கத்திற்காக இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியிடல் | யூரோ 10 மில்லியன் | 9% | |
| **3.** | **நுண்பாக நிதியியல்துறை** | | | | | |
| 3.1 | உலர்வலய ஜீவனோபாய உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் (2006 - 2012) | வே.அ.ப.நி. | மொனராகலை, குருணாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் போன்ற தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள வறிய வேளாண்மையாளர்களுக்கிடையிலான வறுமை ஒழிப்பும், வருமான உருவாக்கமும் | இலங்கை ரூபா 200 மில்லியன் | 10% | |
| 3.2 | சிறு உடமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சியாளர் அபிவிருத்திச் செயற்றிட்டம் (2007-2015) | வே.அ.ப.நி. மற்றும் ஐ.அ. உதவி | நாட்டின் மத்திய பகுதியில் தேயிலை மற்றும் நிரந்தர பயிர்களைப் பயிரிடுகின்ற எல்லைநில சிறு உடமையாளர்களினதும் இறப்பர் பயிரிட விரும்பும் மொனராகலை பிரதேசத்தின் இடைநில வலையத்திலுள்ள உயர்நில உணவுப்பயிர் செய்யும் வறிய வேளாண்மையாளர்களினதும் ஜீவனோபாயத்தினை மேம்படுத்தல் | ஐ.அ.டொலர் 40.7 மில்லியன் | 9% | 90% இற்கு மேல் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3.3 | சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் | இலங்கை அரசாங்கம் | கிராமிய வறிய மக்களுக்கு வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளுக்கு வழக்கமான கொடுகடனை ஏற்படுத்துவதற்கான, வலுவான கொடுகடன் வழங்குதல் நுட்பத்தை அமைத்தலும் நன்மை பெறுவோரின் பொதுநலன்புரி வேலைகளும் | இலங்கை ரூபா 512.7 மில்லியன் | 16% - 20% | |
| 3.4 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் (சுழலும் நிதி) செயற்றிட்டம் | இலங்கை அரசாங்கம் | கிராமிய வறிய மக்களுக்கு வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளுக்கு வழக்கமான கொடுகடனை ஏற்படுத்துவதற்கான, வலுவான கொடுகடன் வழங்குதல் நுட்பத்தை அமைத்தலும் நன்மை பெறுவோரின் பொதுநலன்புரி வேலைகளும்<br><br>இனங்காணப்பட்ட கடன் பெறுநர்களிடையே வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக அவர்களது வறுமையை போக்குதல்<br><br>குறைந்த வருமான குழுக்களினை முறைசார் வங்கியியல் முறையில் இணைப்பதனை ஒழுங்கமைத்தல் | இலங்கை ரூபா 1,250 மில்லியன் | 16% | |

உடன்படிக்கைகளை மேம்படுத்துதல், மற்றும் பிரதேசத்தில் தகவல்களைப் பரப்புதல் என்பனவற்றில் தொடர்ந்தும் முக்கிய பங்கினையாற்றின.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஒன்றில் மீள்நிதியிடல் வழங்கப்பட்ட அல்லது வட்டி உதவு தொகை செலுத்தப்பட்ட பின்வரும் கடன்திட்டங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2007இல் நடைமுறைப்படுத்தியது அல்லது ஒருங்கிணைத்தது.

### 21.1 மீள்நிதியிடல் திட்டங்கள்

**(அ) வேளாண்மைத்துறை**

இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் சுழலும் நிதியக் கடன்திட்டம்

தேயிலை அபிவிருத்தி செயற்றிட்ட சுழலும் நிதிய கடன்திட்டம்

**(ஆ) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறை**

மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டு செயற்றிட்டம்

சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

**(இ) நுண்பாக நிதித்துறை**

சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்ட சுழலும் நிதியத் திட்டம்

வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்ட சுழலும் நிதியத் திட்டம்

வறண்ட வலய ஜீவனோபாய பங்குடமை நிகழ்ச்சி வீதம்

### 21.2 வட்டிவீத உதவுதொகை திட்டங்கள்

**(அ) வேளாண்மைத்துறை**

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்,

கிருசி நவோதய திட்டம் (இலங்கை மத்திய வங்கியின் ஒருங்கிணைப்புடன் லங்கா புத்திர வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் வட்டி உதவுதொகை கொடுப்பனவுகள்)

மேற்குறிப்பிட்ட கடன் திட்டங்களின் விபரங்கள் அட்டவணை 1இல் தொகுக்கப்பட்டுள்ளன.

### 21.3 வேளாண்மைத்துறை

பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் விதந்துரைப்புக்களின் அடிப்படையில், 2007ஆம் ஆண்டுப் பகுதியில், நிதிதிட்டமிடல் அமைச்சு புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் உள்ளடக்குகின்ற பயிர்களின் எண்ணிக்கையை விரிவாக்க உடன்பட்டது. இதற்கமைய அன்னாசி, கரும்பு, வெற்றிலை, இஞ்சி, ஓகிட் மற்றும் அந்தூரியம் (ஏற்றுமதிக்காக) என்பனவற்றின் பயிர்ச் செய்கைக்கும் தேனீ வளர்ப்பு மற்றும் விதை நெல் என்பனவற்றின் உற்பத்திக்கு அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வட்டி உதவுதொகை வழங்கப்படும். புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கொடுகடன் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட பயிர்கள்/ உற்பத்திகளின் மொத்த எண்ணிக்கை இப்பொழுது 37 ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2006/07 பெரும்போகம் மற்றும் 2007 சிறுபோகம் ஆகிய காலங்களில் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி முறையே ரூ.967 மில்லியன் மற்றும் ரூ.869.4 மில்லியனாக விளங்கின.

லங்கா புத்திர வங்கியினால் நடைமுறைக்கிடப்படும் கிருசி நவோதய கொடுகடன் நிகழ்ச்சித்திட்டம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வட்டி உதவுதொகைக் கொடுப்பனவு ஒத்துழைப்புடன் 2007 மார்ச்சில் தொழிற்பாட்டிற்கு வந்தது. புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ், குறுங்கால வேளாண்மைக் கடன்கள் வழங்கப்படுகையில் கிருசி நவோதய திட்டத்தின் கீழ், வேளாண்மை உள்ளீடுகளின் கொள்வனவு வேளாண்மையுடன் தொடர்பான கைத்தொழில்கள் மற்றும் நுண்பாக நீர்ப்பாசன திட்டங்களின் அபிவிருத்தி போன்ற பரந்தளவு நடவடிக்கைகளுக்காக சலுகை ரீதியில் நடுத்தர, நீண்ட காலக்கடன்கள் வழங்கப்பட்டன. நுண்பாக நீர்ப்பாசன திட்டங்களின் அபிவிருத்திக்கான கடன்களின் பெறுமதி ரூ.350,000 இற்கு அனுமதிக்கப்பட்ட வேளையில் மற்றைய அனைத்து நோக்கங்களுக்குமான ஆகக்கூடிய கடன் பெறுமதி ரூ.100,000 ஆக விளங்கியது. வேளாண்மையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, கடன்களை, பெறுமதிகளுக்கேற்பவும் பயிர்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கத்தக்க விதத்திலும் வழங்குவது அவசியமாகவுள்ளதுடன் கிருசி நவோத திட்டம் இதனை குறிப்பிடத்தக்களவிற்கு அடைவதற்கும் எதிர்பார்க்கிறது. 2007 செத்தெம்பர் 30ஆம் நாள் உள்ளவாறு கிருசி நவோதய திட்டத்தின் கீழ் ரூ.297 மில்லியன் மொத்த பெறுமதி கொண்ட 4,573 கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2007இன் முதலரைப்பகுதியில் இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் (சுழலும் நிதியம்) கீழ் பெரும்பாலும் முழு நிதியமும் வழங்கப்பட்டுவிட்டமையின் காரணமாக தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) மற்றும் இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்தி செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) ஆகிய திட்டங்களின் கீழான கொடுகடன் வழங்கல் இவ்வாண்டில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க முன்னேற்றம் கண்டது. தேயிலை அபிவிருத்தி செயற்றிட்ட சுழலும் நிதியத்திட்டம் மற்றும் இரண்டாவது நிரந்தரப் பயிர்கள், அபிவிருத்தி செயற்றிட்டத்தின் சுழலும் நிதியம் என்பனவற்றின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மீள்நிதியிடல் முறையே ரூ.411.4 மில்லியனாகவும் ரூ.540.2 மில்லியனாகவும் காணப்பட்டன. இவ்விரு திட்டங்களினதும் கீழ் வழங்கப்பட்ட மீள்நிதியிடலின் சதவீதம் 87 சதவீதமாக இருந்தது.

உலக சந்தையில் பால் உற்பத்திகளுக்கான விலைகள் மிகக்கடுமையாக உயர்வடைந்ததைத் தொடர்ந்து உயர்ந்த பால்மா விலைகள் குடித்தொகையின் ஊட்டச்சத்து மட்டத்தில் ஏற்படுத்தக்கூடிய எதிர்க்கணிய தாக்கங்களை தவிர்ப்பதற்கும் வெளிநாட்டுச் செலாவணியினை சேமிப்பதற்காகவும் இறக்குமதி செய்யப்படும் பால்மாவிற்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாலினை பதிலீடு செய்ய வேண்டிய அவசர தேவை தோன்றியுள்ளது. இக்குறிக்கோளினை அடைவதற்கு பாரியளவு செய்முறை இயலாற்றலுக்கான தேவை

காணப்படுவதனை அங்கீகரிக்கின்ற விதத்தில், பிரதேச அபிவிருத்தி திணைக்களம் இப்பண்ணைக் கைத்தொழிலுக்காக சலுகை ரீதியான கடன் திட்டமொன்று நடைமுறைக்கிடப்பட வேண்டுமென அரசாங்கத்திற்கு விதந்துரைத்துள்ளது. மேலும், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், கிருசி நவோதய திட்டத்தின் கீழான கடன்களிலும் பார்க்க கூடுதலான நிதித் தொகை தேவைப்படும். சிறிய மற்றும் நடுத்தர வேளாண்மை பதனிடல் தொழில் முயற்சிகளுக்கு சலுகை ரீதியான நிதியிடல் வழங்கப்பட்டிருக்குமாயின் கிராமிய உற்பத்தியாக்கத்தினையும் கிராமிய வருமானத்தினையும் அதிகரிக்கக்கூடிய நன்மைகளை வழங்குமென்பது பற்றி அரசாங்கத்தின் கவனத்தினை பிரதேச அபிவிருத்தி திணைக்களம் ஈர்த்திருக்கிறது. இதன்படி, இவ்விதந்துரைப்புகளுக்கேற்ப கிராமிய உற்பத்தியாக் கத்தினையும் கிராமிய வருமானத்தினையும் உயர்த்துவதற்காக, சிறப்புக் கொடுகடன் திட்டமொன்று 2008இற்கான வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், பின் தங்கிய பிரதேசங்கள் பாற்பண்ணைகளை நிறுவுவதற்காகவும் சிறிய மற்றும் நடுத்தர அளவுப் பயிர்களுக்கும் பால் பதனிடல் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காகவும் வழங்கப்படுகின்ற கடன்களுக்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வட்டி உதவு தொகைகள் வழங்கப்படும்.

வேளாண்மையாளர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கை, இத்திட்டத்தின் கீழ் வேளாண்மை உற்பத்திகளைக் கொள்வனவு செய்பவர்களுக்கு அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் நிதியத்தின் உதவியுடன் தொடர்ந்தும் தொழிற்பட்டு வருகின்றது. எனினும் முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கையின் கீழும் கூட, சில சமயங்களில் வேளாண்மையாளர்கள் உடன்பாடு காணப்பட்ட விலையிலும் பார்க்க குறைந்த விலைகளுக்கு தமது உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதனை சில சமயங்களில் அவதானிக்க முடிகிறது. இதற்கு உடன்பாடு காணப்பட்ட விலைகள் அப்பொழுது திறந்த சந்தையில் காணப்படுகின்ற விலைகளிலும் பார்க்க மிக உயர்வாக இருக்கும் சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்வோர் உடன்பாடு காணப்பட்ட விலைகளில் பொருட்களை வாங்க விரும்பாமையே காரணமாகும். இதேபோன்று உடன்படிக்கை செய்யப்பட்ட விலைகளிலும் பார்க்க சந்தை விலைகள் உயர்வாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் வேளாண்மையாளர்கள் உடன்பாடு காணப்பட்ட விலைகளில் பொருட்களை வழங்க தயக்கம் காட்டுகின்றனர். ஆகவே விலை இடர்நேர்வு முகாமைத்து வத்திற்கு மிக வலுவான பொறிமுறையொன்றினை நடைமுறைக்கிட வேண்டிய தேவையினை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஏற்றுக் கொண்டிருப்பதுடன், விலை இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு வசதிகளை வழங்குவதற்கும் வேளாண்மைத் துறைக்கான மற்றைய நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்குமாக இலங்கையில் பண்டப் பரிவர்த்தனை யொன்றினை உருவாக்குவதற்கான சாத்தியத்தினைக் கண்டறிவதற்கு தீர்மானித்தது. பண்டச் சந்தையில் பரந்தளவு அனுபவத்தினைக் கொண்ட ஆட்களை உள்ளடக்கிய பணிக் குழுவொன்று இந்நோக்கத்தினை அடைவதற்காக நியமிக்கப்பட்டது. ஆரம்ப நடவடிக்கையாக இந்தியாவின் தேசிய பண்டம் மற்றும் பெறுதிகள் பரிவர்த்தனையைச் சேர்ந்த இரு நிபுணர்களால் நிறுவப்பட்டுள்ள பண்ட பரிவர்த்தனை பற்றிய சாத்திய ஆய்வுகளை பிரதேச அபிவிருத்தி திணைக்களம் ஒருங்கிணைத்தது.

## 21.4 சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் துறை

மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டு செயற்றிட்ட சுழலும் நிதியத் திட்டத்தின் கீழ் கிடைக்கச் செய்யப்பட்ட நிதியங்களுக்கு குறிப்பிடத்தக்களவு கேள்வி காணப்பட்டதுடன், 2007இல் ரூ.77 மில்லியன் கொண்ட மொத்த தொகை வழங்கப்பட்டது. ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் சுனாமிக்கு பின்னைய தொடர் கொடுகடனின் கீழ் (உடன்படிக்கை 'ஆ' திட்டம்) 2007.11.30ஆம் நாளன்று ரூ.672.2 மில்லியன் மொத்தப் பெறுமதி கொண்ட 39 கடன் விண்ணப்பங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டிருப்பதுடன் ரூ.201.4 மில்லியன் மொத்தப் பெறுமதி கொண்ட 18 கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. 2008ஆம் ஆண்டிலிருந்து சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு புதியதொரு தொடர்க் கொடுகடனைப் பெற்றுக் கொடுப்பதற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் பிராந்திய அபிவிருத்திச் செயற்றிட்டம் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டது. இத்திட்டத்தின் கீழ் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான மொத்த நிதியிடல் ஐ.அ.டொலர் 88.89 மில்லியனாக இருக்கும். இதில் ஐ.அ.டொலர் 50 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உதவப்படும். இக்கொடுகடன் தொடரினை முகாமைப்படுத்துவதற்காக நிறுவப்படவுள்ள வழிகாட்டல் குழுவில் மத்திய வங்கி பிரதிநிதித்துவம் வகிக்கும்.

## 21.5 நுண்பாக நிதியியல்துறை

வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித் திட்டம், கட்டம் II என அறியப்படவுள்ள புதிய வறுமை ஒழிப்பு செயற்றிட்டத்திற்காக கொடுகடன் தொடரொன்றின் பொருட்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியுடனான பேச்சு வார்த்தைகளை நிறைவு செய்துள்ளது. வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித்திட்டம் IIஇன் பரந்த குறிக்கோள்களாக வறுமை ஒழிப்பு, பிரதேச சமநிலையற்ற தன்மைகளை நீக்குதல் மற்றும் சமாதானத்திற்காக ஆதரவளித்தல் என்பன காணப்பட்டன. இதற்கமைய, வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித்திட்டம் II இன் நடவடிக்கைகள் மோதலினால் பாதிக்கப்பட்ட பகுதிகள், பின் தங்கிய பிரதேசங்கள் என்பனவற்றை முக்கிய கவனத்தில் கொண்டு 2008 இலிருந்து பதினான்கு மாவட்டங்களில் தொழிற்படும்.

அதேவேளை, 2006 இறுதியில் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான கொடையாளர் நிதியிடல் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர், வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்ட சுழலும் நிதியிடல் திட்டம் 2007இல் தொழிற்பாட்டிற்கு வந்தது. இத்திட்டம் வறுமை ஒழிப்பு நுண்பாக நிகழ்ச்சித்திட்டத்திலும் பார்க்க பரந்தளவு புவியியல் பரப்பை

உள்ளடக்கத்தக்க விதத்திலும் கிடைக்கக்கூடிய மூலவளங்களிலிருந்தான கடன் வழங்கலில் மிகக் கூடிய அளவினை ஒதுக்கக்கூடிய விதத்திலும் வடிவமைக்கப் பட்டிருந்தது. வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் சுழலும் நிதியின் கீழ், முன்னுரிமையானது அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்ட மிகப் பாதிக்கப்படக்கூடிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கே வழங்கப்பட்டது. 2008இல் வறுமை ஒழிப்பு, நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித்திட்டம் II நடைமுறைக்கு வருவதன் காரணமாக, வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் சுழலும் நிதியத்தின் நடவடிக்கைகள், வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித்திட்டம் II தொழிற்படவுள்ள மாவட்டங்கள் தவிர்ந்த மற்றைய அனைத்து மாவட்டங்களிலும் கவனத்தினைச் செலுத்தும். இதன் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதியமும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித்திட்டம் II உம் சேர்ந்து தீவு முழுவதும் பரந்திருக்கும். கொடுகடனைப் பெற்றுக் கொள்ளும் வசதியை மேலும் மேம்படுத்துவதற்காக வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் சுழலும் நிதியத் திட்டத்தில் பங்கேற்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை 14இற்கு அதிகரிக்கப்பட்டவிடத்து ஆரம்ப வறுமை ஒழிப்பு நுண்பாக நிகழ்ச்சித்திட்டத்தில் 6 பிரதேச அபிவிருத்தி வங்கிகள் மட்டுமே பங்குபற்றியிருந்தன. அதேவேளை, நடவடிக்கைகள் இத்திட்டத்தின் முகாமைத்துவத்தின் முக்கியமான பொறுப்புக்களை வளர்ச்சியுறச் செய்த செயற்றிட்ட நன்மை பெறுநர்களுக்கான மக்கள் கம்பனிகள் என்ற தொடர்பான நன்மையளிக்கும் அமைப்புக்களினால் முகாமைப்படுத்தப்பட்டு வருவதன் காரணமாக, 2007இல் சிறுவேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தின் சுழலும் நிதியத் திட்டத்தின் நடவடிக்கைகள் திருப்திகரமான முறையில் முன்னேற்றம் கண்டது.

## கொடுகடன் மிகை நிரப்புத் திட்டங்கள்

பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த, ஆனால் இடர்நேர்வினைக் கொண்ட துறைகளுக்கு கடன்களை வழங்கும் பொழுது வங்கியினால் எதிர்நோக்கப்படும் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக பிரதேச அபிவிருத்தி திணைக்களம் தொடர்ந்தும் 12 கொடுகடன் மிகை நிரப்புத் திட்டங்களை தொழிற்படுத்தியது. பெரும்பாலான திட்டங்களைப் பொறுத்தவரை பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதுடன் 2007இல் அவ்வாறான உத்தரவாதங்களை வழங்குவது புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கொடுகடன் திட்டத்திற்கும் சுசகன கொடுகடன் உத்தரவாத திட்டங்களுக்கும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 2007 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு 2003 - 2007 காலப்பகுதியில் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 56,579 கடன்கள் உத்தரவாத பாதுகாப்பினைக் கொண்டிருந்தன. ஆண்டுக் கட்டணச் சேகரிப்பு, கோரல் விண்ணப்பங்களை செய்முறைப்படுத்தல், கோரல்களின் கொடுப்பனவு அல்லது நிராகரிப்பு மற்றும் கோரலுக்கு பின்னான அறவிடலை பின்தொடர்தல் போன்ற கொடுகடன் உத்தரவாதங்களின் தொழிற்பாடுகளுடன் தொடர்பான மற்றைய நடவடிக்கைகள் இவ்வாண்டிலும் தொடர்ந்தன. இவ்வாண்டிற்கான மொத்த கட்டண வருமானம் ரூ. 75 மில்லியனாகக் காணப்பட்டது. நிதி அமைச்சின் கோரிக்கையின் பேரில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித் துறைக்கான புதிய கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை வடிவமைத்துள்ளது. இது 2008இல் தொழிற்பாட்டிற்கு வரும் இத்திட்டத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் வங்கிகளினால் நுண்பாக சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கல், பிணைகளை அடிப்படையாகக் கொண்ட கடன்களை விட செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கடன் வழங்கலை ஊக்குவிக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

## மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள்

அநுராதபுரம், மாத்தளை மற்றும் மாத்தறை ஆகிய இடங்களிலுள்ள மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் அபிவிருத்தியுடன் தொடர்பான நடவடிக்கைகளை பிரதேச அபிவிருத்தி திணைக்களம் தொடர்ந்தும் மேற்பார்வை செய்து வந்த வேளையில் புதிதாக நிறுவப்பட்ட கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு திணைக்களம் பிரதேச அலுவலகங்களின் முன்னேற்றத்தினை மாதாந்தம் கண்காணிக்க தொடங்கியது. கடந்த காலத்தினைப் போன்றே பிரதேச அலுவலகங்கள் மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படும் கொடுகடன் திட்டங்களை மேம்படுத்துவதிலும் முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கையிலும் ஈடுபட்டிருந்தது. அநுராதபுரத்திலுள்ள பிரதேச அலுவலகம் வேளாண்மையாளர்களை ஒழுங்கமைத்து முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கையின் கீழ் அவர்களுக்கு நிதி ஒழுங்குகளைச் செய்தமையின் மூலம் சோளத்தின் பாரியளவு பயிர்ச்செய்கையை மேம்படுத்தக்கூடியதாக இருந்தது. தேர்ச்சி அளித்தல்/ தேர்ச்சியை உயர்த்துதல் மூலம் பிரதேச தொழில் முயற்சியாளர்களின் வருமான உழைப்பு இயலளவினை அதிகரிக்கும் குறிக்கோளுடன் அனைத்து பிரதேச அலுவலகங்களும் குறிப்பிட்ட பிரதேசங்களில் பெரும்பாலும் ஜீவனோபாய நடவடிக்கைகளுடன் தொடர்பான தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டன. தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் புறம்பாக, மத்திய வங்கியிலுள்ள தொடர்பான திணைக்களங்களின் உதவியுடன் மத்திய வங்கியின் நடவடிக்கைகள் மற்றும் முக்கியமான விடயங்கள் மீதும் பொதுவான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தின. அரசாங்கப் பிணையங்களில் பிரதேச முதலீடுகளை மேம்படுத்தும் நோக்குடன் அரச பிணையங்களில் முதலீடுகளை மேற்கொள்தல் மீதான நிகழ்ச்சித் திட்டங்களையும் உள்ளடக்கியிருந்தன. மேற்கொள்ளப்பட்ட மற்றைய நடவடிக்கைகள் மாணவர்களுக்காக நடத்தப்படுகின்ற கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள், பழுதடைந்த நாணயத் தாள்களை ஏற்றுக் கொள்வதன் மூலமாகவும் நாணயக் குத்திகளைச் சேகரித்தல் மற்றும் போலி நாணயம் போன்றவற்றின் மீதான விழிப்புணர்வினை உருவாக்குதல் என்பன மூலமும் நாணய முகாமைத்துவத்திற்கு வசதியளித்தல், மத்திய வங்கி நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுகளையும் ஏனைய உதவிகளையும் வழங்குதல், பிரதேச தரவுகளைச் சேகரித்தல் மற்றும் மத்திய வங்கி வெளியீடுகளின் விற்பனை மற்றும் இலவச விநியோகங்களின் மூலம் தகவல்களைப் பரப்புதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

## 22. செயலகம்

2007இல் செயலகத் திணைக்களம் உரிய காலத்திலான பொருட்கள், மற்றும் பணிகளின் கொள்வனவு, முறைகள் மற்றும் நடைமுறைகளின் தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் தரமுயர்த்தல், விடுப்பு, ஓய்வூதிய நிதி, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயணங்கள், தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குகளை நடைமுறைப்படுத்துதல போன்றவற்றின் மூலம் வங்கியின் வினைத்திறனான நடவடிக்கைகளுக்கு வசதியளித்தது.

திணைக்களம் இந்த வருடத்தில் 57 விலைக்கோரல்களை கையாண்டதோடு தரம், சரியான நேரம் மற்றும் போட்டி விலைகள் என்பனவற்றை உறுதிப்படுத்தி பேணுவதன் மூலம் முறையே ரூ.73.7 மில்லியன் மற்றும் ரூ.54 மில்லியன் கொண்ட மூலதனப் பொருட்களையும் மூலதனமல்லாப் பொருட்களையும் கொள்வனவு செய்தது. திணைக்களமானது அனைத்து வங்கிச் சொத்துக்களுக்குமாக செலவுச் சிக்கனமானதும், அனைத்தையும் உள்ளடக்கியதுமான காப்புறுதியொன்றைப் பெற்றுக் கொண்ட அதே வேளையில் ஏற்கனவேயிருந்த விதிகள் மற்றும் நெறிமுறைகளின் வெளிப்படையான தன்மையை முன்னேற்றுவதற்கும் உறுதிப்படுத்து வதற்குமான நோக்கில் வங்கிக் கைநூலை பூரணப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் இது 2008இல் வெளியிடப்படும். இந்த வருடத்தில் ஊழியர்களிடையே வங்கி நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பான அறிவை விருத்தி செய்யும் பிரதான நோக்கில் திணைக்கள ரீதியான நடவடிக்கைகள் தொடர்பான உள்ளக இணையத்தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. மத்திய வங்கி ஓய்வூதியத்திட்டம், விதவைகளினதும், அநாதைகளினதும் ஓய்வூதிய நிதியம் மற்றும் விதுரரினதும் அநாதைகளினதும் ஓய்வூதிய நிதியம் என்பன செயலகத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டன. மொத்தமாக 1945 ஓய்வூதியம் பெறுபவர்கள் இத் திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

2007இல் திணைக்களமானது பல்வேறுபட்ட சமய மற்றும் ஞாபகார்த்த நிகழ்வுகளையும் நீண்டகாலப் பணிக்கான விருது வழங்கல் மற்றும் சுதந்திரதின கொண்டாட்டம் போன்ற வருடாந்தக் கொண்டாட்டங்களையும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தது.

## 23. பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் முக்கிய குறிக்கோளாக கடமையில் இருக்கும் மத்திய வங்கி ஊழியர்கள், அங்கு வருகை தருவோர், கட்டடங்கள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றைப் பாதுகாப்பதுடன், நாணயங்களை எடுத்துச் செல்லும் வேளையில் அவற்றிற்குப் பாதுகாப்பு வழங்குகின்ற பாதுகாப்பு வழிமுறைகளை தொடர்ந்தும் வலுப்படுத்தியது. 2007இல் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் மத்திய வங்கியின் மிக இன்றியமையாத தொழிற்பாடுகளுக்காக தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தினைத் தயாரித்தமை, பாதுகாப்புப் பணிகளுக்கு சிறப்பு தடங்கலற்ற திட்டமொன்றினைத் தயாரித்தமை, தீ விபத்து மற்றும் முதலுதவி உட்பட அவசர காலத்தின் போது கையாளக் கூடிய விதத்தில் மத்திய வங்கி ஊழியர்களுக்காக ஏழு தீ விபத்து தொடர்பான ஒத்திகைகளும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், பாதுகாப்பு அலுவலர்களுக்கான காலாந்தர ஆயுதப் பயிற்சி மற்றும் தீயணைப்பு பயிற்சி, புதிய பாதுகாப்பு கருவிகள் (நடந்து வருகையில் வெடி பொருட்களைக் கண்டறியும் கருவி, வெடி பொருட்களைக் கண்டறியும் கருவி போன்றன) போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை மற்றும் ஏற்கனவேயுள்ள பொதிகள் மற்றும் சரக்கு ஸ்கானரை அகற்றுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், அரச பாதுகாப்பு படைகளின் உதவி மற்றும் ஒத்துழைப்புடன் பாதுகாப்பு வழிமுறைகள் மேலும் இறுக்கமாக்கப்பட்டன.

## 24. புள்ளிவிபரவியல் மற்றும் களஅளவீடுகள்

புள்ளிவிபரவியல் திணைக்களம் 2007இலும் தேசிய கணக்குகள், விலைகள், கூலிகள், தொழிற்படை மற்றும் தொழில்நிலை மற்றும் ஏனைய சமூக பொருளாதாரத்துறைகளின் தரவு சேகரித்தல், திரட்டுதல், பகுப்பாய்வு மற்றும் தரவுகளைப் பரப்பும் அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. இவ்வாண்டில், இத்திணைக்களத்தின் முக்கிய சாதனைகளாக பணவீக்க எதிர்பார்ப்பு அளவீட்டை நடத்தியமையும் இலங்கை மற்றும் அதன் மாகாணங்களுக்கான சுபீட்ச சுட்டெண்ணை திரட்டியமையும் விளங்கின. இத்துடன், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆய்வரங்குகள் மற்றும் ஊடகக் கலந்துரையாடல்கள் போன்றவற்றுக்கான மூலவள ஆட்களுக்கானதொரு மூலமாக விளங்குவதன் மூலம் திணைக்களமானது குறித்த ஆண்டில் மத்திய வங்கியின் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் தீவிரமாக பங்கேற்றுள்ளது. இவ்வாண்டில் உயர் பதவி அலுவலர் மற்றும் உயர் பதவியல்லாத அலுவலர்கள் ஆகிய இரண்டு தரங்களிலுமுள்ள அநேகமான அலுவலர்கள் அவர்களது அறிவு மற்றும் தேர்ச்சிகளை மேலும் மேம்படுத்துவதற்காக இவ்வாண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் ஆய்வரங்குகளில் பங்கேற்றமை திணைக்களத்தின் தரம் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு அவர்களை இயலச் செய்தது.

### புள்ளிவிபரவியல் அளவீடுகள்

எதிர்கால பணவீக்கம் மீதான நுகர்வோர், முதலீட்டாளர் மற்றும் வர்த்தக சமூகத்தவர்களின் எதிர்பார்ப்புக்களை கிரமமான அடிப்படையில் கண்காணிப்பதன் முக்கியத்துவம் கருதி நாணயக் கொள்கையினை காத்திரமான முறையில் நடத்தும் பொருட்டு 2006 இறுதியில் தொடங்கப்பட்ட மாதாந்த அடிப்படையிலான பணவீக்க எதிர்பார்ப்பு அளவீட்டினை திணைக்களம் 2007இலும் நடத்தியது. மாதாந்த அளவீடு ஏறத்தாழ 300 பதிலிறுப்போரை உள்ளடக்கியிருந்ததுடன் பதில்கள், தொலைபேசிப் பேட்டிகள், வேலைத் தலத்தில் பேட்டி மற்றும் மின்னஞ்சலைப் போன்ற வேறுபட்ட முறைகளினூடாகப் பெறப்பட்டன. ஒவ்வொரு மாதத்தின் அளவீட்டின் பெறுபேறுகள், அடுத்த மாதத்தில் நடைபெறும் நாணயக் கொள்கைக் குழு மற்றும் நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுக்களின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இதற்கு மேலாக இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் வேண்டுகோளின்படி திணைக்களம் இவ்வாண்டில், "நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் வெவ்வேறு இனங்களுக்கான பயன்பாட்டாளரின் ஆவல் மற்றும் பொதுமக்களால் நாணயக் கொடுப்பனவு முறையிலிருந்து

இலத்திரனியல் முறைக் கொடுப்பனவுக்கு மாறுதல்" மீதான அளவீட்டையும் நடாத்தியது. இவ் அளவீட்டின் குறிக்கோள், வெவ்வேறு இன பெறுமதி நாணயங்களைப் பயன்படுத்துவதில் பொதுமக்களின் அனுபவங்கள் மீது அவர்களின் கருத்துக்களை அறிவதும் அது போல் கொடுகடன் அட்டைகள், பற்று அட்டைகள் மற்றும் தொலைபேசி வங்கித்தொழிலின் பாவனை போன்ற கொடுப்பனவுகளை மாற்று முறைகளாகப் பயன்படுத்துவதில் அவர்களது முன்னுரிமைகள் மற்றும் நடைமுறைகள் பற்றி விசாரிப்பதுமாகும். இவ் அளவீடு கொழும்பு சுற்றுப்புறத்திலுள்ள பிரதேச செயலகங்கள் பிரிவுகளிலிருந்து எழுமாற்றாகத் தெரிந்தெடுக்கப்பட்ட 16 கிராம சேவகர் பிரிவுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதுடன் மாதிரி கிட்டத்தட்ட 1,250 பதிலிறுப்பாளர்களைக் கொண்டிருந்தது. மேலும், திணைக்களம் 2006இல் ஆரம்பிக்கப்பட்ட காணி விலை அளவீட்டை புதுப்பித்ததுடன், இதன்படி செத்தெம்பர் 2007இலிருந்து காணி விலைகள் மீதான தரவு, வாராந்த செய்திப் பத்திரிகைகளில் விற்பனைக்காக விளம்பரம் செய்யப்பட்ட காணி விற்போரால் கேட்கப்பட்ட விலைகளின் அடிப்படையில் கொழும்பு நகரத்தைச் சுற்றியுள்ள நகரப் பகுதிகளில் இனங் காணப்பட்ட அமைவிடங்களிலிருந்து மாதாந்த அடிப்படையில் சேகரிக்கப்பட்டது. இவ்விலைகளின் பகுப்பாய்வு மீதான அறிக்கைகள் வேண்டப்படுமிடத்து நிதியியல் முறைமைகள் உறுதிப்பாட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

### தேசிய வருமானக் கணக்குகள்

2006 வரை, இலங்கை மத்திய வங்கி மற்றும் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் ஆகிய இரண்டும் தேசிய கணக்கு மதிப்பீடுகளைத் திரட்டுவதிலும் பரப்புவதிலும் ஈடுபட்டிருந்தன. நாட்டில் இரு அரச நிறுவனங்கள் இரு வெவ்வேறான வளர்ச்சிப் புள்ளிவிபரத்தை வெளியிடுகையில், இது இரட்டிப்பு வேலைக்கும் பொதுமக்களின் மனங்களில் தடுமாற்றத்துக்கும் இட்டுச் சென்றது. உலகிலுள்ள பல நாடுகளால் பின்பற்றப்படும் பன்னாட்டு நடைமுறை யாதெனில் நாட்டிலுள்ள தேசிய புள்ளிவிபர நிறுவனத்தால் தேசிய வருமான புள்ளிவிபரம் திரட்டப்படுவதேயாகும். இலங்கையும் இதே நடைமுறையினைப் பின்பற்றுவதே பொருத்தமாகும். இதற்கமைய, மத்திய வங்கியும் அதன் பொருளாதாரத்தின் செயலாற்றத்தினை பகுப்பாய்வு செய்வதற்கு 2007இலிருந்து தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் திரட்டப்பட்ட புள்ளிவிபரத்தை பயன்படுத்துவதற்கு தீர்மானித்த அதேவேளையில், பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தின் நோக்கத்துக்காகவும் அது போல் பொருளாதாரத்தின் எதிர்கால வளர்ச்சிச் செயலாற்றத்தை மதிப்பிடுவதற்கும் மொ.உ.உற்பத்தியையும் அதன் வளர்ச்சி வீதங்களையும் தொடர்ந்து எதிர்வுகூறும் இந்நடைமுறை, விலைச்சுட்டெண்களை திரட்டல் மற்றும் பண விகிதத்தினை மதிப்பிடல் மற்றும் எதிர்வுகூறலில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளுடன் இசைந்ததாகக் காணப்பட்டது. மேலும், தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் உண்மையான விலை மட்டத்தையும், பணவீக்கத்தையும் திரட்டும் அதேவேளை, இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கை நோக்கங்களுக்காக பணவீக்கத்தினை மதிப்பீடு செய்து அசைவுகளை எதிர்வுகூறுவதற்காக அவற்றைப் பயன்படுத்துகிறது.

### நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை

1978இல் ஆரம்பமான புள்ளிவிபரத் திணைக்களத்தின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை, நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள், வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியாளர் விலைகள் மற்றும் முறைசாராத் துறைக்குரிய கூலி வீதங்கள் மீதான தகவலை தொடர்ந்து கிரமமாகச் சேகரித்தது. தரவு சேகரிப்பு நாட்டில் தொழிற்பட்ட 103 தரவு சேகரிக்கும் நிலையங்களுக்காக புள்ளிவிபர பரீட்சகர்களாக அமர்த்தப்பட்ட அரச பாடசாலை ஆசிரியர்களின் நாடு பூராகவுள்ள வலைப்பின்னலூடாக நிறைவேற்றப்படுகிறது. இம்முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவு, விலைச் சுட்டெண்களைத் திரட்டுவதற்கும், கொள்கைத் தீர்மானங்களுக்காக விலை அசைவுகளை எறிவு செய்வதற்கும், விலைகள் மீதான கொள்கை மாற்றங்களின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கும், தேசிய செலவினம் மற்றும் வருமானத்தின் மதிப்பீட்டுக்கும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. பருவகால வேறுபாடுகள், தளம்பல் மற்றும் விலைகளினதும் கூலிகளினதும் பிரதேச வேறுபாடுகளை பகுப்பாய்வு செய்வதற்கும், இத்தரவு பயன்மிக்கது. இத்திட்டத்தின் கீழ், கூலித் தகவலின் சேகரிப்புக்காக உள்ளடக்கப்பட்ட துணைத் துறைகள் நெல், தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கை, சிறிய அளவிலான கட்டடவாக்கம் மற்றும் பணிகளை உள்ளடக்குகின்றன. ஆண்டின் தொடக்கத்தில் நிர்ணயிக்கப்பட்ட முன் அட்டவணையிடப்பட்ட ஆண்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய கிரமமான தல மேற்பார்வை நிலையங்களூடாக தரவுச் சேகரிப்பின் துல்லியமான தன்மை உறுதிப்படுத்தப்பட்டது. கடந்த காலத்தைப் போலவே தமது சேகரிப்பில் துல்லியம், தரம், வினைத்திறன் மற்றும் சரியான நேரம் போன்றவற்றை மேம்படுத்தும் முகமாக தரவு சேகரிப்போருக்கு மேலும் பயிற்சியை வழங்கும் பொருட்டு 2007இல் கொழும்பு, மாத்தறை, அநுராதபுரம் மற்றும் கண்டியில் நான்கு பிரதேச ஆய்வரங்குகள் நடாத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சித் திட்டங்களில், பொருளாதாரத்தில் அரச பிணையங்கள் சந்தை போன்ற துறைகளில் சமகால அபிவிருத்திகள் மீது விசேட கலந்துரையாடலும் நடத்தப்பட்டது. இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களின் பயன்பாடு ஆசிரிய பரீட்சகர்களால் வெளிக்காட்டப்பட்ட மேம்பாடடைந்த விழிப்புணர்வு மற்றும் ஆர்வத்தில் பிரதிபலிக்கப்பட்டது.

### விலைகள், கூலிகள் மற்றும் தொழில்நிலை

கூடிய பிரதிநிதித்துவம் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கான தேவையை அங்கீகரிக்கும் விதத்திலும் முன்பு பயன்படுத்தப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலுள்ள பாரிய குறைகளைத் தீர்ப்பதற்குமாக 2007 நவெம்பரில் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் நிர்மாணிக்கப்பட்டது. இது, சமகால கொள்வனவுப் பழக்க வழக்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மிக அண்மைக் காலத்திலான தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2002இன் குடும்ப அலகு செலவின அளவீட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இச்சுட்டெண்ணின் நிறையேற்றல் மாதிரி, கொழும்பு மாவட்டத்திலுள்ள சகல நகர குடும்ப அலகுகளின் செலவினத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கொநுவிசு(பு) அறிமுகப்படுத்தும் வரை திணைக்களம், தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால்

திரட்டப்பட்ட கொழுவிசு மற்றும் இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் (இநுவிசு) என்பவற்றின் அடிப்படையில் நுகர்வோர் விலைகளின் அசைவுகளின் பகுப்பாய்வைத் தொடர்ந்து மேற்கொண்டதுடன் திணைக்களம் மாதாந்த பத்திரிகை வெளியீட்டைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

திணைக்களம், நான்கு வேறுபட்ட பிரதேசங்களில் சில்லறை மட்டத்தில் மொத்த விலை அசைவுகளை அளவிடும் அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை, கொழும்பு மாவட்டங்களின் விலைச்சுட்டெண்களை திரட்டி பகுப்பாய்வு செய்தது. மாகாண ரீதியான அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு மாகாண மட்டத்தில் கொள்கை வடிவமைப்புக்களை மேற்கொள்ள வேண்டிய தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் பிரதேச சுட்டெண்களுக்கு பதிலாக, மாகாண ரீதியான நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் பயன்படுத்தப்பட்டதன் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டது. திணைக்களம் ஆகப் பிந்திய நுகர்வோர் மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/04 இன் அடிப்படையில் மாகாண நுவிசுட்டெண்களை தொடர்ந்தும் திரட்டியது. இச்சுட்டெண்களின் திரட்டலுக்குத் தேவையான விலைகள் நாடளாவிய தரவு சேகரிப்பு முறையினூடாகவோ அல்லது திணைக்களத்தால் பயிற்றுவிக்கப்பட்டு நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட்ட வெளி மூலம் பெற்ற பரீட்சகர்கள் மூலமாகவோ சேகரிக்கப்பட்டது. அதேவேளை, முதலாந்தரச்சந்தை மட்டங்களில் உற்பத்தியாளர் அல்லது மொத்த விற்பனை விலைகளின் அசைவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக திணைக்களம் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணை தொடர்ந்தும் திரட்டியது.

இவ்வாண்டில், திணைக்களம் கொள்கை பகுப்பாய்வு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டிய நுகர்வு மாதிரிகளில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கும் வகையில் நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/04 ஐ அடிப்படையாகக் கொண்ட ஆகப் பிந்திய நிறை அமைப்பைக் கொண்டு நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் கூட்டு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் விருத்தி செய்தது. இச்சுட்டெண் 2007இன் ஆரம்பத்திலிருந்து மாதாந்தம் திரட்டப்படுவதுடன், இது தேசிய மட்டத்தில் விலை மட்டத்தின் அசைவின் கூடிய யதார்த்தமான வடிவத்தை வழங்கியது. திணைக்களம், நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கூலித் தரவை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கான முறைசாராத துறை கூலி வீத சுட்டெண்ணையும் திரட்டியது.

திணைக்களம், காலாண்டு தேசிய வருமான மதிப்பீடுகளைப் முழுமைப்படுத்தும் பொருட்டும் நாட்டில் அரசதுறை தொழில் நிலையின் மட்டங்களையும் போக்குகளையும் அறிவதற்கும் 2001இல் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு மற்றும் காலாண்டு அரசதுறை தொழில்நிலை அளவீட்டைத் தொடர்ந்து நடாத்தியது. 2006இன் வருடாந்த அரசதுறை தொழில் நிலை அளவீடுகளில் அறிவிக்கப்பட்டவாறு 1,000 ஊழியர்களுக்கும் கூடுதலாகக் கொண்டிருக்கும் ஒவ்வொரு சகல மத்திய அரச மற்றும் அரச நிறுவனங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. மாகாண சபைகளின் கீழுள்ளவை இதில் உள்ளடக்கப்படவில்லை. இவ்வளவீட்டில் சேகரிக்கப்பட்ட தகவல், அரசின் தற்போதைய தொழில்நிலைக் கொள்கையின் பயன்பாட்டை மதிப்பிடுவதற்கும், அரச துறையில் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்தும் ஓர் அளவீடாகவும் மதிப்பிடுவதற்கும் உதவியது.

தொழிற்படை மற்றும் தொழிற்சந்தை மீது சேகரிக்கப்பட்ட தகவலும் வெளிநாட்டுத் தொழில்நிலை, தொழில் உறவுகள் மற்றும் தொழிற்சந்தைச் சீர்திருத்தங்கள் ஆகிய துறைகளை உள்ளடக்கும் வகையில் திணைக்களத்தால் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

### புள்ளி விபரங்களைப் பரப்புதல்

இவ்வாண்டில் புள்ளிவிபரத் திணைக்களமானது அதன் இரண்டு வருடாந்த வெளியீடுகளான "இலங்கையின் சமூக பொருளாதாரத் தரவு 2007 - தொகுதி XXX" மற்றும் "இலங்கையின் பொருளாதார சமூகப் புள்ளிவிபரங்கள் 2007 தொகுதி XXI" இரண்டினையும் வெளியிட்டது. வங்கியின் 2008இற்கான கையடக்கத் தினக்குறிப்பிலுள்ள புள்ளிவிபரவியல் அட்டவணைகள் புதிய தகவல்களுடன் பூரணப்படுத்தப்பட்டன.

இவ்வாண்டில், இத்திணைக்களம் சட்ட ரீதியான அதே போன்று வங்கியின் ஏனைய பல வெளியீடுகளுக்கும் தனது கிரமமான பங்களிப்பினை வழங்கியது. தேசிய வருமானம், பணவீக்கம், விலைகள், கூலிகள் மற்றும் தொழிற்சந்தை தொடர்பான தற்போதைய நிலைப்பாடுகள் தேவையேற்படும் வேளைகளில் நாணயச்சபைக்கு அறிவிக்கப்பட்டது. திணைக்களமானது உள்ளூர் வலையமைப்பிலிருக்கும் திணைக்களத்தின் இணையத்தளமான "ஸ்ரா நெட்" இனை தொடர்ந்தும் கிரமமாகப் பூரணப்படுத்தியதுடன் வங்கியின் வெப்தளத்திற்கும் ஆண்டு முழுவதும் பங்களிப்புச் செய்தது.

## 25. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் குறிப்பாக, 1988இன் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டங்கள் மற்றும் 2000இன் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம் என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட முறையே பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகிய அதன் முதன்மைத் தொழிற்பாட்டை தொடர்ந்து மேற்கொண்டது.

2007ஆம் ஆண்டில், நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மூன்று கம்பனிகள் நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, ஆண்டிறுதியில் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையை 32இற்கு அதிகரித்தது. நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் நான்கு புதிய கம்பனிகள் பதிவு செய்யப்பட்டதன் மூலம், பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனங்களின் எண்ணிக்கை ஆண்டிறுதியில் 76இற்கு அதிகரித்தது.

### 25.1 பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள்

இத்திணைக்களம் தலத்துக்கு வெளியேயான கண்காணிப்பு மற்றும் தலப் பரீட்சிப்புக்களூடாக அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகளை செயற்படுத்துகிறது. சகல கம்பனிகளுக்குமான தலத்துக்கு வெளியேயான கண்காணிப்பு மாதாந்த அடிப்படையில் செயற்படுத்தப்படுகையில் தலப் பரீட்சிப்புகள் முன்னரே திட்டமிடப்பட்ட அட்டவணையின்படி நடாத்தப்படுகின்றன. குறிப்பிட்ட ஆண்டொன்றில் தலப் பரீட்சிப்புக்களுக்கு உட்படுத்தப்படாத கம்பனிகளில், குறித்துரைக்கப்பட்ட துறைகள் உடன் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்படும்.

**(அ) தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு**

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த நிதிக்கம்பனிகளின் தலத்துக்கு வெளியான கண்காணிப்பு, பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் நிதி நிலைமையை கண்டறியும் நோக்குடன் காலத்துக்குக் காலம் கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தரக் கூற்றுக்களூடாக பெறப்பட்ட தகவலை பகுப்பாய்வு செய்வதன் மூலமும் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் நிதிக் கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட விதிகளுடன் அவை இணங்கியிருக்கின்றனவா என்பதை அறிவதற்கும் மேற்கொள்ளப்படுகிறது.

**(ஆ) தலப் பரீட்சிப்புக்கள்**

தலப் பரீட்சிப்புக்கள் சொத்துக்களின் தரம், மூலதனப் போதுமை, முகாமைத்துவ வினைத்திறன், வருவாய், இலாபகரத்தன்மை, முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் கம்பனி ஆளுகையின் தகுதி என்பவற்றை மதிப்பீடு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்றன. 2007ஆம் ஆண்டில் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் ஒன்பது தலப் பரீட்சிப்புக்களை நடாத்தின. அதன் பரீட்சிப்புத்திட்டம் 7 பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளை உள்ளடக்கியிருந்தது. இத்துடன், திரவத்தன்மை, கொடுகடன் நிருவாகம், மூலதனப் போதுமை மற்றும் முறைமைகள் கட்டுப்பாடுகள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய துறைகளைப் பரீட்சிப்பதற்கு, இவ்வாண்டில் அனைத்தையும் உள்ளடக்கிய தலப் பரீட்சிப்புக்களுக்கு உட்படாத 24 பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் மீது உடன் பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டன.

அனைத்தையும் உள்ளடக்கிய தல மற்றும் உடன் பரீட்சிப்புக்களின் போது கண்டறியப்பட்ட விடயங்கள் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் அல்லது சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் தொடர்பான பணிப்பாளர் சபைக்கும் மூத்த முகாமைத்துவத்துக்கும் அறிவிக்கப்பட்டதுடன், குறைபாடுகள் தொடர்பாக உடனடி சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிக்கப்பட்டனர். உரிய சீர்திருத்த நடவடிக்கைகள் தேவைப்படுமிடத்து அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், பணிப்பாளர் சபை மிகுதியாக இருக்கும் குறைபாடுகளை சீர்திருத்துவதற்காக விசேட கால நிர்ணயத்துடனான உறுதியான கடப்பாடுகளையும் வழங்கியது. இத்திணைக்களம் முன்னேற்றத்தையும் சீர்திருத்த நடவடிக்கைகளையும் தீவிரமாக கண்காணித்தது.

**(இ) பணிப்புரைகள் வழங்குதல்**

இவ்வாண்டில் முன்பு வழங்கப்பட்ட இரு பணிப்புரைகள் புதிய பணிப்புரைகள் மூலம் பிரதியீடு செய்யப்பட்டன. தீர்மானமொன்றும் வழிகாட்டல்களைக் கொண்ட தொகுதியொன்றும் வெளியிடப்பட்டது. மேலும், 1995இன் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் நிதியியல் கூற்றுக்களில் அரசிறையை அங்கீகரித்தல் மற்றும் வெளிப்படுத்துகை பணிப்புரை இரத்துச் செய்யப்பட்டது.

* **2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதித்கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்புரை**

இப்பணிப்புரை 2006இன் 5ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்புரையை இரத்துச் செய்வதற்காக வழங்கப்பட்டதுடன் பின்வரும் எந்தவொரு கடன் வசதியை வழங்குவதற்கும் நிதிக் கம்பனியைத் தடை செய்கிறது.

(i) நிதிக்கம்பனியின் பணிப்பாளர் அத்துடன்/ அல்லது பணிப்பாளரின் உறவினருக்குக்

(ii) அதன் உடைமைக் கம்பனிக்கு;

(iii) அதன் சொந்தப் பங்குகளின் பிணையம் மீது அல்லது அதன் எந்தவொரு துணைக் கம்பனிகளின் பங்குகளின் பிணையம் மீது;

(iv) அதன் சொந்தப் பங்குகளை கொள்வனவ செய்வதற்க் அல்லது;

(v) நிதிக்கம்பனியின் பணிப்பாளர், நிதிக்கம்பனியின் பணிப்பாளரின் உறவினருக்கு அல்லது நிதிக்கம்பனியின் எந்தவொரு ஊழியருக்கும் வழங்கிய உத்தரவாதம் அல்லது இழப்பீட்டு உத்தரவாதத்தின் மீது.

இப்பணிப்புரை கம்பனியொன்றின் பங்குகளை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட கடன் வசதிகள் மீது அல்லது அவ்வாறான நோக்கத்துக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட எந்தவொரு திட்டத்தின் கீழும் நிதிக் கம்பனியொன்றின் முழுமையாக செலுத்தப்பட்ட பங்குகளுக்கான பணச் செலுத்துகைகள் மீது வரையறைகளையும் நிர்ணயித்தது.

* **2007ஆம் ஆண்டில் 2ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்களுடனான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள்) பணிப்புரை**

நிதிக்கம்பனிகள் அதன் பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களிடமிருந்து தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கும் அவ்வாறான வைப்புக்கள் மீது வட்டியை வழங்குவதற்கும் நிதிக்கம்பனிகளை இயலச் செய்வது அத்தியாவசியமாகியுள்ளமையால், 2006இன் 6ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்களுடனான வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்) பணிப்புரையை பிரதியீடு செய்யும் வகையில் இது வழங்கப்பட்டது.

**(ஈ) வழிகாட்டல்களையும் தீர்மானங்களையும் வழங்குதல்**

சிறுவருக்காக திறக்கப்பட்ட சேமிப்புக் கணக்கிலுள்ள நிலுவைகளை ஐந்து வருடங்களின் பின்பு அவர்களது பெற்றோர் அல்லது சட்ட ரீதியான பாதுகாவலர்களின் அறிவுறுத்தலகளுடன் அதே ஆளுக்காக வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பேணப்பட்ட கணக்கிற்கு மாற்றுவதற்கும் கல்வி அல்லது மருத்துவச் சிகிச்சைகள் போன்ற விசேட நோக்கங்களுக்காக சிறுவர் கணக்குகளிலிருந்து பணத்தை மீள எடுப்பதை அனுமதிப்பதிப்பதற்கும் பதிவு செய்யப்பட்ட

நிதிக் கம்பனிகளை தேவைப்படுத்தும் 2007இன் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (சிறு பிராயத்தினருக்கான சேமிப்புக் கணக்குகளின் பேணல்) வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

மேலும், பிணையிடப்படாத தொகுதிக் கடன்களை வழங்கிய பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மூலதன நிதியங்களில், திடமான நோக்கங்களில் குறித்துரைக்கப்பட்ட பண்புகளை கொண்டிருக்கும் அவ்வாறான தொகுதிக் கடன்களின் முகப்புப் பெறுமதியை உள்ளடக்குவதற்கு நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 46ஆம் பிரிவின் கீழ் நாணயச்சபை தீர்மானமொன்றை மேற்கொண்டது.

## 25.2 பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனங்கள்

### (அ) நிதிக்குத்தகை நிறுவனங்களைப் பதிவு செய்தல்

மீளாய்வுக்குரிய ஆண்டில், நிதிக் குத்தகைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 4 பகிரங்கக் கம்பனிகள் பதிவு செய்யப்பட்டன. இதன்படி, பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 2007 இறுதியில் 76ஆக விளங்கியதுடன், இது 15 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 9 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், 32 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் 20 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

### (ஆ) பணிப்புரைகளின் வழங்கல்கள்

படுகடன் கருவிகளின் வழங்கலூடாக நிதியங்களைத் திரட்டும் போது சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் நிறைவேற்ற வேண்டிய தேவைப்பாடுகளை நிர்ணயிக்கும் 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (படுகடன் கருவிகள்) பணிப்புரை என்ற புதிய பணிப்புரை 2007ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

### (இ) சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் கண்காணிப்பு

இத் திணைக்களம் 2007இலும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் தலத்துக்கு வெளியேயான கண்காணிப்பை மாதாந்த அடிப்படையில் தொடர்ந்து மேற்கொண்டது. (ஏனைய பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக் கம்பனிகள், அதாவது உரிமம் பெற்ற வர்த்த வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தனியான சட்ட விதியின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்யப்பட்டன.) மேலும், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் 2 தல பரீட்சிப்புக்களும், 17 உடன் பரீட்சிப்புக்களும் திணைக்களத்தால் இவ்வாண்டில் நடாத்தப்பட்டன. நிதியியல் செயலாற்றம், குறிப்பிட்ட சிறப்பியல்பு வாய்ந்த கம்பனி இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை மற்றும் முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் பயன்பாட்டை மதிப்பிடுவதற்கு தலப் பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டன. நிதியியல் அறிக்கையிடலின் துல்லிதன்மையை கண்டறிவதற்கும், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் பணிப்புரைகளுடன் இணங்கிச் செல்வதை சரிபார்ப்பதற்கும் இப்பரீட்சிப்புக்கள் பயன்படுத்தப்பட்டன. இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாத கம்பனிகள் ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிக்கப்பட்டதுடன் அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான செயலாற்றத்தை திணைக்களம் தீவிரமாகக் கண்காணித்தது.

## 25.3 முறிவடைந்த நிதிக் கம்பனிகள்

முறிவடைந்த ஒன்பது நிதிக் கம்பனிகளின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம், நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1988 இலிருந்து நாணயச்சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒரு கம்பனி 2007இல் மூடப்பட்டதுடன், மூடப்பட்ட கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையை நான்கிற்கு கொண்டு வந்தது. நான்கு கம்பனிகள் விடயத்தில் ஒடுக்கிவிடும் செயல்முறை தொடர்ந்தது. மற்றைய கம்பனி விடயத்தில் அதன் விவகாரங்களை மூடுவதற்கு ஒடுக்குபவர் ஒருவரை நியமிப்பதற்கு விண்ணப்பிப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டில் முறிவடைந்த நிதிக் கம்பனிகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை புலனாய்வு செய்தது. விதந்துரைப்புக்களை செய்வதற்கான பணி ஒரு கணக்காய்வு நிறுவனத்துக்கும், இரண்டு சட்ட நிறுவனங்களுக்கும் ஒப்படைக்கப்பட்டதுடன், இவை அவற்றின் அறிக்கைகளை மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தன. அவ் அறிக்கைகளும், தேவைப்பட்ட ஏனைய தகவலும், கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் விதந்துரைப்புக்களின் அடிப்படையில், உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக உரிய அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## 25.4 நிதி வியாபாரத்தின் அதிகாரமளிக்கப்படாத நடத்தை

சட்ட பூர்வமற்ற முறையில் நிதி வியாபாரங்களை நடாத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பாக திணைக்களம், நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11(2)இன் கீழ் தொடர்ந்தும் புலனாய்வுகளை மேற்கொண்டது. அவ்வாறான கம்பனிகள் சட்ட பூர்வமற்ற முறையில் நிதி வியாபாரத்தை நடாத்தியதை தீர்மானித்ததன் பின்பு, நாணயச் சபையால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்கியொழுக தவறிய கம்பனிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை திணைக்களம் இவ்வாண்டில் நேரகாலத்துடன் தொடர்ந்து மேற்கொண்டது.

அதிகாரம் அளிக்கப்படாத வகையில் நிதி வியாபாரங்களை மேற்கொள்ளும் ஆட்கள் தொடர்பாக பெற்றுக் கொள்ளப்படும் விசாரணைகள்/ முறையீடுகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. இதற்கு, மத்திய வங்கி அத்தகைய ஆட்கள் தொடர்பாக தொடர்ச்சியான அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கைகளும் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டதும் ஓரளவு காரணமாக இருந்திருக்கக்கூடும்.

## 25.5 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

முக்கியமாக நிதி வியாபாரத்தின் அதிகாரப் பூர்வமற்ற நடத்தை தொடர்பான விடயங்களில் திணைக்களம் தொடர்ந்தும் பொதுமக்களுக்கு அறிவூட்டியது. திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

**(அ) செய்திப் பத்திரிகைகளில் வெளியீடுகள்**

(i) அதிகாரமன்றி நிதி வியாபாரத்தில் ஈடுபடும் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்குடன், அவ்வாறான சகல நிறுவனங்களும் அவற்றின் கணக்காய்வாளர்கள் மற்றும் வழக்கறிஞர்களுடன் கலந்துரையாடுவதையும் நிதிக் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்பதையும் தேவைப்படுத்தும் பத்திரிகை அறிவித்தல் 2007 பெப்புருவரியில் பிரசுரிக்கப்பட்டது. இதற்கு இசையும் வகையில், பல கம்பனிகள் வேண்டுகோள்கள் விடுத்ததுடன் திணைக்களம் அம்முன்மொழிவுகளை மதிப்பிட்டு வருகிறது.

(ii) வைப்புக்களின் வரைவிலக்கணம், பல்வேறு சட்டங்களின் கீழ் வைப்புக்களை ஏற்றுக் கொள்ள அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள், அமைப்புக்களின் வகைகள் மற்றும் மத்திய வங்கியினால் வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல் என்பவற்றை வழங்கும் விளக்கக் குறிப்புடனான மாதாந்த பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டது. இந்த அறிவித்தல்கள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்துடன் இணைந்து மாதாந்த அடிப்படையில் வெளியிடப்பட்டன.

(iii) சில ஆட்கள், நிதி முகாமை மற்றும் முதலீடு போன்ற மறைமுகமான வழிகளினூடாக பொது மக்களிடமிருந்து நிதியங்களைத் திரட்டுவதற்கு முயன்ற போது விசேட பத்திரிகை அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டன.

(ஆ) "பொதுமக்களுக்கான ஒரு அறிவித்தல்" என பெயரிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டதுடன் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளூடாக விநியோகிக்கப்பட்டன.

### 25.6 நுண்பாக நிதியிடும் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தல்

நுண்பாக நிதியிடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கூடிய எண்ணிக்கையான நிறுவனங்கள் நாடு முழுவதும் இருப்பதாக இனங் காணப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் விசேட ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை ஒழுங்குமுறைகளினூடாக ஒழுங்குமுறைப் படுத்தப்படவோ அல்லது கண்காணிக்கப்படவோ இல்லையாகையால், அவ்வாறான நிறுவனங்கள் மீது குறிக்கப்பட்ட ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப் பட்டுள்ளது. இத் திணைக்களம் நுண்பாக நிதி நிறுவனங்கள் சட்டத்தின் வரைவு ஒன்றை தயாரித்ததுடன் நாணயச் சபைக்கும் சமர்ப்பித்தது. நாணயச் சபையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, நடைமுறைச் சாத்தியப்படுமிடத்து, தொடர்பான அரச மேலாண்மைச் சபைகளிடம் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளை ஒப்படைக்கும் விதத்தில் முன்மொழியப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை ஒழுங்குமுறைகள் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன.

## 26. பயிற்சி

2007ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பயிற்சிச் செயற்பாடானது இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் பல் தேர்ச்சியை அபிவிருத்தி செய்வதனை அதிகளவிற்கு வலியுறுத்தியது. வங்கியில் செயற்றிறனும் திறமையும் வாய்ந்த அலுவலர்களைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் விதத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் புகழ்வாய்ந்த நிறுவனங்களால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் அதன் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன. இந்தப் புதிய கலாசாரமானது அலுவலர்கள் தங்களது திறனையும் போட்டித் தன்மையையும் விருத்தி செய்வதற்கும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை அதிக வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் நிறைவேற்றுவதற்கும் உதவியது.

வங்கியானது, 2007இல் 162 அலுவலர்களுக்கு வெளிநாட்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பை வழங்கிய அதே வேளையில் உள்நாட்டில் புகழ் பெற்ற பயிற்சி நிறுவனங்களால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு கொள்வதற்கு 1455 பேர் பெயர் குறிப்பிடப்பட்டனர். இதற்கு மேலதிகமாக திணைக்களம் வங்கியின் 127 சிரேட்ட அலுவலர்களுக்கு 5 முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்திருந்தது. திணைக்களம் மேலும் திணைக்களங்களின் குறித்துரைக்கப்பட்ட பயிற்சித் தேவையை பூர்த்தி செய்யுமுகமாக இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய வர்த்தக வங்கிகளின் 25 பங்கு பற்றுநர்களுக்கான நுண்பாக நிதியியல் தொடர்பான கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், 24 பங்குபற்றுநர்களுக்கான கடன் "பெறுதிகள்" நிகழ்ச்சித் திட்டம், மற்றும் 79 பங்கு பற்றுநர்களுக்கான இடர்நேர்வு முகாமைத்துவம் நிகழ்ச்சித்திட்டம் போன்றவற்றை நடாத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டது. வங்கியிலுள்ள அலுவலர்களின் தொடர்பாடல் திறனை அபிவிருத்தி செய்யும் பொருட்டு திணைக்களம் பிரிட்டிசு கவுன்சிலின் துணையுடன் 40 "அலுவலர்களுக்காக வணிகத்திற்கான இலக்கணமும் தொடர்பாடலும்" தொடர்பில் 2 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. மேலும் அலுவலர் வகை தரம் III மற்றும் IV அலுவலர்களின் தொடர்பாடல் மற்றும் விரிவுரையாற்றும் திறன்களை விருத்தி செய்வதற்காக 25 அலுவலர்களுக்கான "பேச்சுக் கலை" நிகழ்ச்சித் திட்டமொன்று 2007இல் கொழும்பு "டோஸ்ட் மாஸ்ரர்ஸ்" கலரியால் நடாத்தப்பட்டது.

வங்கி, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள். கனடா, அவுத்திரேலியா போன்ற நாடுகளிலுள்ள பிரபல்யம் பெற்ற பல்கலைக் கழகங்களில் பட்டப்பின்படிப்பினை மேற்கொள்வதற்கு மத்திய வங்கி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் தமது அலுவலர்களுக்கு வசதியளிக்கும் கொள்கையினை கடந்த காலங்களைப் போலவே தொடர்ந்தும் பின்பற்றியது. இதன்படி 2007இல் 04 அலுவலர்கள் தமது பட்டப்பின் கற்கை நெறியினைத் தொடங்கியுள்ள அதேவேளையில், வெளிநாடுகளில் தமது பட்டப்பின்படிப்பு கற்கை நெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த 05 அலுவலர்கள் தமது கடமைகளுக்குத் திரும்பியுள்ளனர்.

வெளிநாட்டுப் பயிற்சித்திட்டங்களின் வாயிலாகப் பெற்றுக் கொண்ட அறிவினை சக அலுவலர்களுக்கும் கற்பிக்கும்

நோக்கில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றிய அலுவலர்கள் வங்கியில் முறையான கருத்தரங்குகளை நடாத்துவதற்கு வேண்டப்பட்டனர். இத்திட்டத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கி அலுவலர்களால் 34 கருத்தரங்குகள் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் நடாத்தப்பட்டன. இது தவிர வங்கியிலுள்ள அனைத்து அலுவலர்களின் நன்மை கருதி முக்கிய விடயங்கள் தொடர்பான விரிவுரைகளை நடாத்துவதற்கு 4 புகழ்மிக்க பேச்சாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் நாணயக் கொள்கை, மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள், மற்றும் பணவீக்க எதிர்வுகூறல்களை வழி நடத்துவதில் ரிக்ஸ் வங்கியினால் பின்பற்றப்படும் நடைமுறைகளை அறிந்து கொள்வதற்காக இரண்டு குழுக்களைக் கொண்ட அலுவலர்கள் ரிக்ஸ் வங்கிக்கு விஜயம் செய்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 27. நலன்புரி

வங்கியில் ஆரோக்கியமான ஊழியர் குழுவைப் பேணும் நோக்கில் நலன்புரித் திணைக்களமானது ஊழியர்களுக்கு தனது வசதிகளை பயனுறுதியும், வினைத்திறனுமான முறையில் தொடர்ந்தும் வழங்கியது. இந்த வசதிகளானது ஊழியர்களினது குடும்பத்தவர்களினதும், ஓய்வூதியர்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் விதத்தில் விரிவாக்கப்பட்டது. இந்த வசதிகள் மருத்துவ நன்மைத் திட்டம், வீடமைப்புக்கடன் திட்டம், மற்றும் சேம நிதிக் கடன்கள், மருத்துவ பரிசோதனைகள், புகையிரத ஆணைச்சீட்டு திட்டம் போன்றவற்றின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன. மீளாய்வின் கீழான ஆண்டில் நலன்புரித் திணைக்களம் கடன் வழங்கும் செயற்பாடுகளை இலகுபடுத்தல், நலன்புரி தொழிற்பாடுகளைத் தன்னியக்கப்படுத்தல், மருத்துவ வசதிகளை மீளமைத்தல், மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுக்கு சமூக நலத்திட்டத்தை அறிமுகப்படுத்துதல் என்பவற்றை அடைவதற்குத் திட்டமிட்டுள்ளது. சமூக நலத் திட்டத்தின்கீழ் ஒப்பந்த அடிப்படையிலான பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான காப்புறுதித் திட்டத்தை இந்த ஆண்டில் திணைக்களத்தால் அறிமுகப்படுத்த முடிந்தது. நலன்புரி சார்ந்த உபாயப்பணியின் ஒரு பகுதியாக கடன்களின் இலகுபடுத்தலுக்கான வழிவகைகளை ஆராயும் பொருட்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டதுடன் இந்தக் காலப்பகுதியில் குறிப்பிட்ட சில முன்னேற்றங்கள் அடையப்பட்டன.

திணைக்களமானது ஊழியர்களின் தேவைகளை, குறுகிய காலத்தினுள் கடன்களைப் பகிர்ந்தளிப்பு செய்ததன் மூலம் வினைத்திறனாகப் பூர்த்தி செய்தது. அங்கீகரிக்கப்பட்ட வீடமைப்புக் கடன்கள் 121ஆக இருந்த அதே வேளையில் அலுவலர் நலத்திட்டக்கடன்கள், கணனிக் கடன்கள், வாகனக் கடன்கள், மற்றும் ஏனைய கடன்கள் உள்ளடங்கலாக வழங்கப்பட்ட சேமநிதிக் கடன்களின் தொகை 1046 ஆக இருந்தது. ஊழியர்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் ஓய்வூதியர்களின் வேண்டுகோள்களுக்குச் செவிசாய்க்கும் விதத்தில் திணைக்களமானது ஏற்கனவேயிருந்த மருத்துவ நலத் திட்டத்தின் சாத்தியமான சீரமைப்புக்கள் தொடர்பாக பல்வேறு கலந்துரையாடல்களை ஆர்வலர்களுடன் நடத்தியது. மருத்துவ நலத்திட்டத்தின் பங்களிப்பு நிதியை விரிவாக்குதல் மற்றும் இத்தகைய வசதிகளை ஓய்வூதியர்களுக்கும் அவர்களது துணைகளுக்கும் விரிவாக்கும் நோக்கில் ஓய்வூதியர்களிடமிருந்தான மாதாந்தப் பங்களிப்பு ரூ.100 இலிருந்து ரூ. 150 ஆக அதிகரிக்கப்பட்டது.

சிறந்த சேவை மற்றும் ஊழியர்களின் தெரிவைச் சிறப்பாக்கும் நோக்கில் உணவகங்களில் சுயசேவைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. திணைக்களம் வங்கி ஊழியர்களின் நன்மை கருதி பல்வேறு தலைப்புக்களில் விரிவுரைகளை ஊழியர்களுக்கு நடத்தியதோடு ஆரோக்கியம் மற்றும் பொதுவான தலைப்புக்களில் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு சேவா வனிதா பிரிவிற்கு உதவியும் செய்தது.